கல்கி


குடும்பத்துடன் படிக்க...

KALKI
17.6.2007 ரூ.8.00
96 பக்கங்கள்
(இந்த இதழ் மட்டும்)



தயிர் சாதத்துக்கு வந்த மவுசு!

உள்ளே...
உங்கள் பார்வைக்கு...
மினி கோகுலம்
+16



Team Health Shoppe
For Wellness

இயற்கையே மருந்தாக
ஆரோக்கியமே விருந்தாக

டீம் தேங்காய் எண்ணெய்

....மற்றதைக் காட்டிலும் வித்தியாசமானது

குளிர்முறை தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட
டீம் தேங்காய் எண்ணெய்
ஆரோக்கியத்திற்கும், சமையலுக்கும் உகந்தது.

Source : extract of souvenir released at National Seminar on Augmentation of Coconut Products by Coconut development board (Ministry of Agriculture) Cochin on 12th Oct, 2003 at Hyderabad



தேங்காயிலிருந்து இயற்கையான முறையில் (hydrogenation heating மூலம் இல்லாமல்) சுகாதாரமாக எடுக்கப்படுகிறது, டீம் தேங்காய் எண்ணெய். இதனால் இயற்கையான மணமும், குணநலன்களும் சிறிதும் குறைவதில்லை.

- சத்துக்கான ஆதாரம் எளிய முறையில் ஜீரணிக்க உதவுகிறது.
- கொழுப்பு சேர்வதை தடுக்க உதவுகிறது.
- சுறுசுறுப்புடனும் புத்துணர்வுடனும் வைக்க உதவுகிறது.
- நச்சுப் பொருட்கள் உள்ளே வருவதை தடுக்க உதவுகிறது.
- ஆன்ட்டி பாக்டீரியல், ஆன்ட்டி வைரல் & ஆன்ட்டி பங்கல்.
- இதயத்துக்கு வலிமை சேர்க்க உதவுகிறது.
- அழகு சாதனப் பொருட்களில் உபயோகப்படுத்தப்படுகிறது
- வெப்பத்தை தாங்ககூடிய சக்தியை தருகிறது
- சமையலுக்கு மிக உகந்தது.

டீம் ஹெல்த் ஷாப்பின் இதர பொருட்கள்



- டீம் சோடியம் அல்லாத உப்பு • டீம் அரை உப்பு
- டீம் நல்லெண்ணெய் • டீம் தேங்காய் எண்ணெய்
- கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள்
- தேன் பொருட்கள் • டீம் எனர்ஜி வாட்டர்
- மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள்
- கொடைக்கானல் மலை தைலம் • பனைப்பொருட்கள்

TEAM EUBIO CARE
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)
www.teamhealthshoppe.com • teamhealthshoppe@drraoholdings.com

வண்டலூர் : டீம் ஹவுஸ், சென்னை-48. 2275 0502

அண்ணாநகர் : பிளாட் 1200, சென்னை-40. 4269 3332

அடையார் : எண்.26, தரைதளம், இந்திரா நகர் சென்னை-20. 4269 5115

ரூ.500க்கு மேல் வாங்குபவர்களுக்கு இலவச டோர் டெலிவரி (சென்னையில்)


கல்கி
குடும்பத்துடன் படிக்க...
24.6.2007
அடுத்த இதழ்...
+16
பெருங்காயமே இது மெய்யடா!
PC இருந்தால் சமையல் EC தான்
இணைந்து வழங்குவோர்:
PC
பெருங்காயம்
கல்கி
தரம் நிரந்தரம்



அர்த்தம் தந்த

பித்து வருகிறார், ரா.பார்த்திபன்.

- கோ.ஈஸ்வரன், இராஜபாளையம்

விஜயகாந்த் டீ.வி. சேனல் துவங்கினால், சன் டீ.வி. உட்பட மற்ற டீ.வி. சேனங்களின் இயக்கத்தில் மாற்றம் எதுவும் வந்துவிடுமா, என்ன? சேனல்களில் விஜயகாந்த் நடித்த படங்கள் வெளியிடப்படுமா?

- இ.முகம்மது ஹஸன், திருச்சி - 20

ஒரு சைக்கிளை மையப்படுத்தி, வெகு சுவாரஸ்யமாய் உருப் பெற்றுள்ளது அசோகமித்ரனின் 'ஓசை'. இயல்பாகப் படித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

- எஸ்.எம்.பாலசுப்ரமணியன், போடிநாயக்கனூர்

டவுட் பேஷன்ட்னு டாக்டர் சொல்

எனது பள்ளிப் பருவத்தில் நடந்த சம்பவம் இது. எங்கள் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயிலிலிருந்து எங்கள் தெரு முடிய, அதிகாலையில் மார்கழி மாத பஜனையைப் பாடிக் கொண்டே செல்வார், எங்களுடைய தமிழாசிரியர் திரு பக்ஷிராஜ அய்யங்கார். நாங்களும் அவரோடு சேர்ந்து கொண்டு பாட வேண்டும். இல்லையென்றால் வகுப்பறையில் ஏதாவது ஒரு காரணத்தால் பிரம்படி வாங்க வேண்டி வரும். அதற்குப் பயந்தே அதிகாலை பஜனையில் அவருடன் கலந்துகொள்வோம்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்து அணைந்தான்;

கன இருள் அகன்றது காலை அம்பொழுதாய் - என்று அன்று அவர் பாடிய பாசுரத்துக்கு அர்த்தம் தெரியாமலே பாடி வந்தோம். இப்போதுதான் சுஜாதா அவர்களால் அர்த்தம் தெரிந்து கொண்டேன். தெரிந்தோ தெரியாமலோ எனது இள வயதில் ஓர் அருமையான பாசுரத்தைப் பாடியிருக்கிறோமே என்ற ஆனந்தம் இப்போது எனக்கு ஏற்படுகிறது.

- டெல்லிகணேஷ், சென்னை

நிழலை நிழலாகவே பார்த்துச் செல்கிற எங்களுக்கு, அந்த நிழலுலகில் நடக்கும் நிஜங்களை அற்புதமாகக் காண்

வட்டமேஜை



ஆனந்தம்!

ஓரம் ஜோக்கைப் படித்ததும் தௌஸண்ட் வாலா முழக்கத்தில் சிரித்தோம்.

- பி.எல்.பரமசிவம், புனலூர்

கல்கியில் தற்போது மெருகு கூடி வெளிவருவது தெரிகிறது. வாசகர்களின் ஆலோசனைகளை அறிந்து, தரமான ரசனையுடன் செயலாற்றத் துவங்கிவிட்டீர்கள்.

- ஜி.பாலசுப்பிரமணியன்,
சேதுநாராயணபுரம்

காதலர்கள் அதிகம் விரும்பிச் சாப்பிடுவது சுண்டல் என்று மதனராஜன் சொன்னது சரி. பீட்ஸா எங்கே போனதாம்?

- நீ.முத்துக்குமார், உ.தி.மலை

நம்ம கல்கி வாராவாரம் ஆரவாரமாக +16 இணைப்பு வெளியிடுவது வரவேற்கத்தக்கது. அதில் வேலைவாய்ப்பைப் பற்றிய தகவல்களை வெளியிடக் கூடாதா?

- கு.நித்யாநந்தன், கொடாப்பு

ஸ்பீடு போஸ்ட்

என் அத்தை மகன் டால்மியாபுரத்தில் ஹெட் கான்ஸ்டபிளாக இருந்தபோதுதான் கல்லக்குடி போராட்டம் நடந்தது. அவர் மு.க.வின் துணிச்சலை அவ்வப்போது பாராட்டுவதை நினைத்துப் பார்த்துச் சிலிர்க்கிறேன் - கல்கி 10.6.2007 வந்த பிறகு.

- ஜி.ஸ்ரீனிவாசன், புழுதிவாக்கம்

பார்த்திபன் மூலம் செப்புத் தகடு வித்தையைப் பற்றி நாங்களும் தெரிந்துகொண்டோம். இது தெரியாமல் இன்னும் எத்தனையோ பேர் ஏமாந்து கொண்டுதானே இருக்கிறார்கள்!

- வானவில் மூர்த்தி, கூத்தப்பாக்கம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324
தொலைநகல் :
044 - 2225 1021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்


Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

"நமது தமிழகத்தின் தென் பகுதியையும், ஸ்ரீலங்காவையும் ஒன்றோடு ஒன்று இணைத்து வைத்துப் பார்த்தால் மிகச் சரியாகவே பொருந்தி வரும். ஒரு காலத்தில் இரண்டு பகுதிகளும் ஒன்றாகவே இருந்திருக்கக் கூடும்."

சேது சமுத்திர திட்டத்தில் இப்போது சிக்கல். 'கால்வாய் வெட்டப்படும் பகுதியில் ராமர் கட்டிய பாலம் இருப்பதால், அதன் போக்கை மாற்றியமைக்க வேண்டும்' என்று ஹிந்துத்வா அமைப்புகள் களத்தில் குதித்துள்ளன. ஆனால், மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, 'அப்படியொரு பாலமே கிடையாது' என்று ராமாயண புத்தகத்தை ஆதாரம் காட்டி பாராளுமன்றத்தில் முழங்குகிறார். இந்த நிலையில் கடல்சார் அறிவியல் விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள்? சென்னை ஐ.ஐ.டி.யின் கடல் பொறியியல் துறைத் தலைவரான டாக்டர் ஆர்.சுந்தரவடிவேலுவும், பேராசிரியர் எஸ்.பி.சுப்பிரமணியனும் நம்மிடம் பேசினர்...

''உலக அளவில் சேது சமுத்திர திட்டம் மிகப் புதுமை

"ராமர் பாலம்




எஸ்.பி.சுப்பிரமணியன்

யானது. பனாமா, சூயஸ் கால்வாய் திட்டங்களில்கூட நிலத்தை வெட்டிக் கால்வாய் அமைத்து, கடல் வழிகளை உண்டாக்கினார்கள். ஆனால், சேது சமுத்திர திட்டத்தில் குறிப்பிட்ட மூன்று கடல் பகுதிகளில், பெரிய கப்பல்கள் செல்லும் அளவுக்கு பள்ளமாகவும், ஆழமாகவும் வெட்டுகிறார்கள்.

கடல் என்பது, பல ஆச்சர்யங்களைத் தன்னுள் புதைத்து வைத்துக் கொண்டிருக்கிறது. மலைகள், பள்ளத்தாக்குகள், ஓடைகள் என்று பல உள்ளன. கடலுக்குள்ளும், கரையை ஒட்டிய பகுதிகளி

லும் கோடிக்கணக்கான ஆண்டுகளாகப் பல மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அவைகளில் குறிப்பிடத் தக்க இரண்டு மாற்றங்கள், மேடு தட்டுவதும், அரிப்பு ஏற்படுவதும். இவை நடைபெறுவதற்குக் காரணம் காற்றோட்டம், அவற்றின் வேகம், மற்றும் நீரோட்டம். கடற்பகுதியில் இதெல்லாம் தொடர் நிகழ்வுகள். ஒரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்கிற நகரம் இருந்தது. ஆனால், அரிப்பு காரணமாக கடல் உள்வாங்கியதில் நகரம் மூழ்கிப்




இயற்கையானதே!”

ஐ.ஐ.டி. விஞ்ஞானிகள் அதிரடி

போனது. இப்போது நிலத்தில் மிக உள்வாங்கியிருக்கும் அரியலூர் பகுதியில் கடல் இருந்தது என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா! கடற்வாழ் உயிரினங்கள் அங்கு வாழ்ந்ததற்கான ஆதாரம் இருக்கிறது. அதே போல் துவாரகா பகுதியில் கடலுக்குக் கீழே பல கட்டடங்கள் இருப்பது அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மேடுகள் ஏற்படுவதன் காரணமாக வங்க தேசத்தின் தெற்குப் பகுதியில் புதிதாக ஒரு தீவே உருவாகியிருக்கிறது. அரிப்பின் காரணமாக நமது தரங்கம்பாடி கடலையொட்டி நிலப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது.

கடலுக்கு அடியில் உள்ள பூமித் தட்டுகள் மோதிக்கொள்ளும்போது பூகம்பம் ஏற்படுவதுடன், கடலும் கொந்தளித்து விடுகிறது. அப்போது புதிதாகச் சில நிலப்பகுதிகள் கடலுக்குள் உருவாகின்றன. நீண்ட கோடாகக் காட்சியளிக்கும் அந்தமான் தீவுகூட இப்படிப்பட்ட நிகழ்வுகளால் உருவாகியிருக்க வேண்டும். சில இடங்களில் கடல் மட்டம் குறையும்போது, நீருக்குள் இருக்கும் மலைகள் வெளிப்பட்டு காலபோக்கில் அவைகள் நிலப்பகுதிகளாகிவிடுகின்றன.

வங்காள விரிகுடா கடலில் முதலில் மணல் பகுதியும், அதன் பிறகு களிமண்



''எங்க டைரக்டர் படத்தோட கதையை படு ரகசியமா வச்சுப்பார்!''

''படத்துலகூட தேடினாலும் கிடைக்கிற தில்லையே!''


– குருவை ஆர்.தேவிகா

பகுதியும், அதற்குக் கீழே பாறைகளும் இருக்கின்றன. ஆனால், அரபிக் கடலில் முதலில் களிமண் பகுதியும், அதற்கடியில் பாறைகளும் இருக்கின்றன. நமது தமிழகத்தின் தென் பகுதியையும், ஸ்ரீலங்காவையும் ஒன்றோடு ஒன்று இணைத்து வைத்துப் பார்த்தால் மிகச் சரியாகவே பொருந்திவரும். ஒரு காலத்தில் இரண்டு பகுதிகளும் ஒன்றாகவே இருந்திருக்கக் கூடும். காலப்போக்கில் கடல் இரு நிலப் பகுதிகளாக அந்தப் பகுதியைப் பிரித்து இருக்கலாம். இப்போது ராமர் பாலம் என்று சொல்லப்படும் நீண்ட மேட்டுப் பகுதி அப்போதுதான் உருவாகியிருக்க வேண்டும். இந்த மேட்டுப் பகுதியானது தனுஷ்கோடியிலிருந்து ஸ்ரீலங்காவில் உள்ள மன்னார் தீவுப் பகுதி வரை இருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல கடலுக்குள் ஏற்பட்ட மாற்றங்களால், இயற்கையாகவே உருவான மேட்டுப் பகுதிதான் இது. செயற்கையான மனிதர்களால் உருவாக்கப்பட்டது என்றால் கடலுக்குள் நீண்ட காலம் சேதமடையாமல் இருக்க முடியாது. அது இயற்கையா, செயற்கையா என்பதை அந்தப் பகுதி மண் பரிசோதனை மூலமாகவே சுலபமாகக் கண்டறியலாம்.

சுற்றுச்சூழல், திட்டச் செலவு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டே சேது சமுத்திரத்தில் கால்வாய் வெட்டப்படுகிறது. இப்போது அதன் போக்கை மாற்ற வேண்டும் என்பது சரியல்ல. ஏற்கெனவே அந்தப் பகுதியில் உள்ள பவளப் பாறைகள் பாதிக்கப்படக்கூடாது என்று கால்வாயின் பாதை சிறிது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச்சூழல் நிறுவனங்கள் திட்டத்துக்கு அனுமதி கொடுத்திருக்கின்றன. உலக அளவில் சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பா.ஜ.க. அரசாங்கம் இருந்தபோதே அனுமதி கொடுக்கப்பட்ட திட்டம். இது நிறைவேற்றப்பட்டால் தென் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் சிறந்தோங்கும்!''

– ப்ரியன்

படங்கள் : **ராஜன்**



''நம்ம தலைவர் கட்சி மாற முடிவெடுத்துட்டார்னு நினைக்கறேன்.''

''எப்படிச் சொல்ற?''

''ஊழலுக்கு இனிமே நம்ம கட்சியில இடம் இல்லைன்னு அறிக்கை விட்டிருக்காரே.''

– சாயம் வெ.ராஜாராமன்

முன்னேற்றத்துக்கு

"உங்களுடைய எண்ணங்கள் ஆக்கபூர்வமாக இருந்தால் பேச்சும் அதே போன்று வெளிப்படும். அறிவுபூர்வமான எண்ணங்களுக்கு குட்-பை சொல்லுங்கள். உங்கள் உயர் அதிகாரிக்கு என்ன தேவையோ அதைச் சொல்வதற்கு முயலுங்கள்'' என்கிறார், சென்னை ஃபோர் கம்யூனிகேஷன் எக்ஸலன்ஸ் நிறுவனத்தை நடத்தும் கீதா சங்கர்.

''ஒரு நிறுவனம் ஒருவரை வேலைக்குத் தேர்ந்தெடுக்கும்போது முதலில் வேலைக்குச் செல்லும் நபரின் எண்ணம், நிறுவனத்தின் குறியீடுகளுக்கு ஒத்துப்போக வேண்டும். தன்னுடைய கல்வித் தகுதியைப் பார்த்து நிறுவனத்தை ஒருவர் தேர்ந்தெடுக்க வேண்டும். இது ஒரு பக்கம் இருக்க, தனது நீண்டகாலத் திட்டம் என்ன என்பதையும் ஒருவர் வகுத்துக்கொள்ள வேண்டும். 'இந்த நிறுவனத்தில் சேரலாம்; ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே நிறுவனத்தில் டீம் லீடராக உருவாக வேண்டும்' என்ற இலட்சியத்துடன் உழைக்க வேண்டும்.

நமது முன்னேற்றத்துக்கு உதவும் முக்கியமான விஷயம் கற்றுக்கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது. 'எனக்கு எல்லாம் தெரியும்' என்று இறுமாப்புடன் இருக்கும் எவருமே, முன்னேற்றப் படிகளில் இரண்டைக்கூட தாண்ட முடியாது. கற்றுக்கொள்வது என்பது வாழ்க்கை முழுவதும் தொடரும் ஒரு நடைமுறை என்பதைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும். அடுத்து நமக்குத் தேவை தலைமைப் பண்பு.

தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்வதை பள்ளி, கல்லூரிகளிலேயே துவங்க வேண்டும். அதற்கு மிகவும் உதவுவது விளையாட்டுகள்தான். மற்றவர்கள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும்; முடிவுகள் எடுப்பதில் உறுதியைக் காண்பிக்க வேண்டும். தமது கருத்துகளை மற்றவர்கள் மீது வலிந்து திணிக்காமல், தொடர்புடைய அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்பட



• கீதா சங்கர்

கற்றுக் கொள்வது என்பது வாழ்க்கை முழுவதும் தொடரும் ஒரு நடைமுறை!

360 டிகிரி பார்வை!

வேண்டும், இதுதான் தலைமைப் பண்பு!'

தனி மனிதச் சாதனைகள் வரவேற்கப்படுகின்றன என்றாலும், தொழிலில் புதிய அணுகுமுறை, சவால்களைச் சந்திப்பது ஆகியவற்றில் குழுவாகச் சேர்ந்து ஊழியர்கள் செயல்படுவதையே நிறுவனங்கள் விரும்புகின்றன. குழு செயல்பாட்டில் புதிய சிந்தனைகள் பிறக்கும்; தனி மனித ஈகோ விலகிவிடும். தாத்தா, பாட்டி, சித்தப்பா, மாமா, அத்தை என்று உறவுகள் நிறைந்த கூட்டுக் குடும்பங்களில் வளர்பவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற பண்பும், பொறுமையும், கடமையுணர்ச்சியும் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். இன்றைய இளைஞர்கள், வீட்டில் உறவினர்கள் வருகை அதிகமாகி விட்டாலே எரிச்சலடைகிறார்கள். எனவே இன்றைய நிலையில் குழு மனப்பான்மையைப் போதிக்க வேண்டியது கட்டாயமாகி விடுகிறது. சிலர் நேர்காணலின்போது குழு மனப்பான்மை உணர்வு தம்மிடம் இருப்பதாகச் சொல்லி, மனிதவள அதிகாரிகளிடம் மாட்டிக் கொள்கிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டியது.

இப்போதெல்லாம் உங்கள் செயல்பாடு, அணுகுமுறை ஆகியவை 360 டிகிரி பார்வையோடு மதிப்பீடு செய்யப்படுகிறது. உங்கள் அதிகாரி மட்டுமன்றி உடன் வேலை செய்பவர்கள், உங்களுக்குக் கீழே வேலை செய்பவர்கள் ஆகியோரும் உங்கள் செயல்பாட்டைக் கணிக்கிறார்கள். உங்கள் ஏற்றத்துக்கு அவர்களின் நல்ல மதிப்பீடும் முக்கியம்!'' என்கிறார் கீதா சங்கர்.

– ஸ்ரீநி





குழந்தையின் இயல்பை புரிந்து கொண்டு தட்டிக் கொடுத்து வளர்த்தால் இமாலயச் சாதனையை எட்டிப் பிடிக்கலாம்!

பிள்ளைகளிடம் அதிகாரம்

தேர்வுகள் முடிந்துவிட்டன. மதிப்பெண் பட்டியலுடன் மாணவர்கள் அட்மிஷனுக்கு மல்லுக்கட்டும் நேரம் இது! 'பக்கத்து வீட்டுப் பையன் பாரு... எவ்ளோ மார்க் வாங்கியிருக்கான். நீயும் இருக்கியே. உனக்கென்ன கேடு?' என்று பிள்ளைகளை பெற்றோர்கள் வறுத்தெடுக்க ஆரம்பித்து விடுவார்கள். குறைந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்கே இந்தக் கதி என்றால், தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களின் கதி அவ்வளவுதான்... பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளை யார் காப்பாற்றுவது?

''அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்பதை குறிக்கோளாக வைத்துக்கொண்டு தேர்வு வந்தவுடன் இம்சிக்க ஆரம்பித்து விடும் பெற்றோர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்'' என்கிறார் மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்.

''காலையில் எழுந்ததும் டியூஷன், அடுத்து பள்ளிக்குச் சென்று படிப்பது, அது முடிந்து மாலை டியூஷன், வீட்டுக்கு வந்ததும் மீண்டும் படிப்பு என்று தொடர்ந்து வற்புறுத்தப்படுவதால் படிப்பை ஒரு கொடூர அரக்கனைப் போல எண்ணத் துவங்கி விடுகின்றன குழந்தைகள். இதனால் தேர்வு என்றதுமே சில குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்று வலி, தலை வலி என உடலியல் பிரச்னைகள் ஏற்படும். இதைப் பல பெற்றோர் புரிந்துகொள்வதில்லை.

ஒருமுறை என்னிடம் பெற்றோர் ஒருவர் ஆலோசனை பெற வந்திருந்தனர். தங்கள் முதல் மகனை ஐ.ஐ.டி.யில் படிக்க வைத்திருக்கிறார்கள். அதேபோல தங்கள் இரண்டாவது மகனையும் ஐ.ஐ.டி.யில் சேர்த்து ''அண்ணனைப் போல நீயும் படிக்கணும்'' என்று அவனுக்குக் கட்டளை போட்டதும் இல்லாமல், தங்களுடைய உறவினர் வட்டாரத்திலும் 'என் இரண்டு பிள்ளைகளை ஐ.ஐ.டி.யில் படிக்க வைத்திருக்கிறேன்' என்று பெருமை அடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நடந்த விபரீதம் என்ன? முதல் மகனைப்

போல இரண்டாவது மகனால் படிக்க முடியாமல் போக, தேர்வு நேரத்தில் 'தேர்வு எழுத மாட்டேன்' என்று வீட்டினுள் சென்று கதவைப் பூட்டிக்கொண்டான். ஒரு வழியாக அவனைக் காப்பாற்றி என்னிடம் ஆலோசனைக்கு அழைத்து வந்திருந்தனர். மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்வதை விட, பிள்ளை வளர்ப்பில் பெற்றோர்களைத்தான் அதிகமாகத் தயார் செய்ய வேண்டி உள்ளது.

பிள்ளை தொண்ணூறுக்கு மேல் மதிப்பெண் எடுக்க வேண்டும் என்ற ஆசை இருக்கலாம் தான். ஆனால் இதுவரை ஐம்பது மதிப்பெண்கள் எடுத்த பிள்ளை அறுபது மதிப்பெண் வாங்கி விட்ட மகிழ்ச்சியோடு வரும்போது தட்டிக் கொடுத்துப் பாராட்ட வேண்டும். மாறாகத் திட்டினால் அந்த மனசு சோர்வு அடைந்து,

செய்யாதீர்கள்!

முன்பைவிட குறைவாகத்தான் மதிப்பெண் பெறும்.

பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அதிகாரம் செய்வதை தவிர்க்க வேண்டும். படிப்பு வேறு; அறிவு வேறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மாணவனுடைய வாழ்க்கையை மதிப்பெண் மட்டுமே தீர்மானிப்பதில்லை. பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பாரங்களைப் பகிர்ந்துகொண்டால் நம்மிடம் பொய் சொல்ல மாட்டார்கள். அன்பும் அரவணைப்புடனும் கல்வியை ஊட்ட வேண்டும். அதையும் மீறி சில குழந்தைகள் மிகவும் படிப்பில் பின்தங்கியிருந் தால், 'ஆட்டிசம்', 'ADHD', 'ADD' போன்ற நோயினால் பாதிக்கப்பட்ட மன வளர்ச்சி இல்லாத குழந்தையாக இருக்கலாம்'' என்கிற பிருந்தா ஜெயராமன் இவை குறித்தும் நமக்கு விளக்கமளித்தார்.

"ADHD என்னும் பிரச்னையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் 'துறுதுறு'வென்று இருப்பார்கள்; பாடத்தைக் கவனிக்காமல் வேறு ஏதாவது நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள், திடீர் திடீரென்று கோபப்படுவார்கள்.

'ADD' பிரச்னை இதற்கு நேரெதிர். பாதிக்கப்பட்ட குழந்தைகள் ரொம்ப அமைதியாக இருப்பார்கள். இந்தக் குழந்தைகளை நீங்கள் எவ்வளவுதான் துன்புறுத்தினாலும் படிப்பில் மந்தமாகவே இருப்பர். இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றோர் மனநல மருத்துவரிடம் கொண்டு சென்று ஆலோசனை பெறுவது நல்லது.

எனவே, குழந்தையின் இயல்பை, திறனைப் புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் தட்டிக் கொடுத்து வளர்த்தால் எந்தப் பிள்ளையும் தேர்வில் இமாலயச் சாதனையை எட்டிப் பிடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை'' என்கிறார் .

- ம.மனோவிக்டர்

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**



* பிருந்தா ஜெயராமன்

பதினான்கு நாட்களில்

"அதிகமான சளித் தொல்லை இருந்து, தலை வலியும் கூடவே வந்துவிட்டால், உடனே சைனஸ் நோய் வந்துவிட்டதாக நினைத்துவிடக் கூடாது. சைனஸ் என்பது அவ்வளவு சாதாரணமான நோய் அல்ல!'' என்கிறார் பள்ளிக்கரணை காமாட்சி மருத்துவமனையைச் சேர்ந்த காது, மூக்கு, தொண்டை நிபுணரான டாக்டர் அஹிலா சாமி.

''மூக்கின் இருபுறமும் சுற்றி இருக்கிற காற்று அறைகள் சளியால் அடைபட்டு விடுவதைத்தான் சைனஸ் என்கிறார்கள். சைனஸ் என்று சுருக்கமாகச் சொன்னாலும், இந்த நோயின் முழுப் பெயர் பாரா நேசல் சைனஸ் என்பதுதான்.

சைனஸ் நோய் நான்கு வகைப்படும். மூக்கின் இருபுறமும் உள்ள காற்று அறைகள் அடைபட்டுவிடும் நிலை மேக்ஸிலரி சைனஸ். இரண்டு கண்களுக்கும் இடைப் பட்ட பகுதியில் உள்ள காற்று அறைகள் அடைபட்டுவிட்டால் அது எத்மாய்ட் சைனஸ். நெற்றிப் பகுதியில் பாதிப்பு உண்டானால், ஃப்ரன்ட்டல் சைனஸ்.

பின்தலையில் வந்தால்



சைனஸுக்குத் தீர்வு!

அதற்கு ஸ்பீனாய்ட் சைனஸ் என்று பெயர். இப்படி முகத்தில் இருபுறமும் சைனஸ் தாக்குகிறபோது, நான்கு ஜோடிப் பகுதிகள் சைனஸ் நோய்க்கு இடம் கொடுக்கின்றன. இதைத்தான் எட்டு வகை சைனஸ் என்று குறிப்பிடுகிறோம். ஆனால் எட்டு வகை சைனஸும் ஒரே சமயத்தில் வருவதில்லை. முகத்தின் இடப்புறத்திலோ அல்லது வலப்புறத்திலோ வருகிறது. ஏதாவது ஒரு காற்று அறையைத் தாக்குகிறது. ஆனால், எல்லாவற்றுக்கும் நுழைவாயில் மூக்குதான்!'' என்கிறார் டாக்டர் அஹிலாசாமி.

''எந்த வயதில் வேண்டுமானாலும் சைனஸ் தாக்குதல் வரலாம் என்றாலும், பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வருவதில்லை. ஏனென்றால், பத்து வயதுக்கு முன்னால் சைனஸ் பகுதிகள் முழுதாக உருவாவதில்லை. மூக்கு அடைபட்டு, அந்தச் சிக்கலைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் அதுவே சைனஸ் நோய்க்கு வழிவகுத்து விடும்.

சைனஸ் காரணமாகப் பல்வேறு பிரச்னைகள் வருகின்றன. இன்ஃபெக்ஷன் எனப்படும் நோய்த் தொற்று, அலர்ஜி, கட்டிகள். இந்தக் கட்டிகளிலேயே சாதாரண மற்றும் புற்றுநோய்க் கட்டிகள் என்று இரண்டு வகைகள் இருக்கின்றன. நாசியின் இருபுறம் அல்லது இரு கண்களுக்கு இடைப்பட்ட காற்று அறைகளின் வழியே காற்று போய் வந்துகொண்டே இருக்கும். அடைபட்டு விட்டால் சளி தேங்கிப்போய்விடும். அப்போது பாக்டீரியா கிருமிகள் தாக்கி விட்டால், இன்ஃபெக்ஷன் அல்லது நோய்த் தொற்று வந்துவிடுகிறது.

சைனஸில் இரண்டு வகை உண்டு. ஒன்று அக்யூட் சைனஸைடிஸ்; இரண்டாவது க்ரானிக் சைனஸைடிஸ்.

அக்யூட் சைனஸ் ஏழு முதல் பதினான்கு நாட்கள் சிகிச் சையில் கட்டுப் படுத்தப்பட்டு விடும்.



✱ டாக்டர் அஹிலா சாமி

க்ரானிக் சைனஸில் காற்று அறைகள் முற்றிலும் அடைபட்டு, தீவிர சிகிச்சைக்கு வழிவகுக்கும். அக்யூட் சைனஸைடிஸ் வந்து அலட்சியமாக இருந்து குணப்படுத்தாமல் விட்டுவிட்டால், அது க்ரானிக் சைனஸைடிஸ் ஆகிவிடும். அப்போதுதான் அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்த நேரிடுகிறது. சில வருடங்களுக்கு முன்பு, முகத்தின் வெளிப்புறத்தில் கீறி அறுவை சிகிச்சை செய்தார்கள். இப்போது நவீன எண்டோஸ்கோபி சிகிச்சை (Functional Endoscopic Synus Surgery) மேற்கொள்ளப்படுகிறது.

முன்பெல்லாம் ஊசி மூலம் சைனஸ் - பன்க்சர் செய்வார்கள். இது தற்காலிக குணமே தரும். இப்போது அறுவை சிகிச்சை மூலம், சைனஸ் நுழைவாயிலைப் பெரிதாக்கி விடுகிறோம். மீண்டும் அடைப்பு ஏற்படாது; சளி தேங்காது. எனவே மறுபடியும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் நேர்வதில்லை.


சைனஸைத் தடுக்க ஒழுங்காக மருந்துகள் உட்கொண்டு அலர்ஜியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கட்டுப்பாட்டை மீறும்போது சைனஸ் தாக்க வாய்ப்புக் கொடுக்கிறோம்.

யோகா போன்ற பயிற்சிகள், நோயைக் குணப்படுத்தாது. ஆனால் வருவதைத் தடுக்கவும், தாக்கத்தைக் குறைக்கவும் உதவும். ஆனால் சிகிச்சை என்று வந்துவிட்டால் முறைப்படி மருத்துவரை அணுகுவதே நல்லது!'' என்கிறார் டாக்டர் அஹிலாசாமி.

– சாருகேசி



கல்கி



2007 ஜூன் 17
சர்வஜித் ஆனி 3
மலர் : 65
இதழ் : 46

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

- *பாரதியார்*

அவமானம், அதைவிட அவமானம்!


"ராஜஸ்தானில் நிகழ்ந்த சமீபத்திய வன்முறைச் சம்பவங்கள் நம் நாட்டுக்கே அவமானம்" என்று கண்டனம் செய்திருக்கிறது உச்சநீதிமன்றம். காவல்துறை அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறது. யாரும் முறையீடு செய்யாமலே இவ்விஷயத்தில் கருத்துக் கூற உச்சநீதிமன்றம் முன்வந்திருப்பதை வரவேற்கத்தான் வேண்டும்.

ஆனால், பிரச்னைக்குக் காரணம் அரசின் அலட்சியமும் காவல்துறையின் மெத்தனமும் மட்டும் அல்ல. பிரச்னையின் வேரே, முரண்பாடுகள் நிரம்பிய இட ஒதுக்கீட்டுக் கொள்கைதான்.


குஜ்ஜார் வகுப்பினர், சீர் மரபினர் (Scheduled Tribes)என்ற பிரிவில் உட்படுத்தப்பட்டு, அதற்குரிய சலுகைகளைப் பெற வேண்டும் என்று போராடினர். அவர்களுக்கு அச் சலுகையைத் தருவதால் தங்களுக்குரிய சலுகையின் சதவிகிதம் குறைந்து போகும் என்று மீனா வகுப்பினர் அஞ்சினர். இதனால் இரு தரப்புகளும் அடித்துக்கொள்ள, ஏகப்பட்ட பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் நிகழ்ந்துவிட்டன ராஜஸ்தானில். அது மட்டுமின்றி, மீனா - குஜ்ஜர்களிடையே ஏறத்தாழ நிரந்தரப் பிளவும் ஏற்பட்டுவிட்டது.

இட ஒதுக்கீடு என்பது, நலிந்த, பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மக்களை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அறிமுகமாயிற்று. ஆனால், இன்று நடப்பது என்ன...?

சலுகையைப் பெற்றும் முன்னேறாத பிரிவினர் ஏராளமாக இருக்கிறார்கள். காரணம், சலுகையும் ஒதுக்கீடும் தருவதுடன்



நிறுத்திக் கொள்ளும் ஆட்சியாளர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சிறப்புக் கவனமும் தீவிரக் கல்விப் பயிற்சியும் தர முனைவதே இல்லை.



'இட ஒதுக்கீட்டுச் சலுகை பெறுவது வருத்தத்துக்குரிய விஷயம்; அந் நிலையிலிருந்து நமது இனம் அல்லது பிரிவு முன்னேறி, வெறியேறிவிட வேண்டும்' என்று ஆவல் கொள்வதற்குப் பதிலாக, ஜாதி - மத - இன அடிப்படையில் என்னவெல்லாம் சலுகைகள் உண்டோ, அவை அனைத்தையும் நிரந்தரமாக அனுபவித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்கிற அபத்தமான, அகௌரவமான இலக்குதான் மக்களை வழி நடத்துகிறது.

இந்தக் கேவலத்துக்கு முழுமுதற் காரணமாக இருப்பவர்கள் அரசியல்வாதிகள். ஒரு பிரிவினரை ஒட்டுமொத்தமாக சந்தோஷப்படுத்தி வோட்டை அள்ள வேண்டுமானால், அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுச் சலுகையை அறிவிக்கும் குறுக்கு வழியைத்தான் அனைத்து அரசியல்வாதிகளும் தவறாமல் கடைபிடிக்கிறார்கள். ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜேயும் குஜ்ஜர்களை சீர் மரபினர் பிரிவில் சேர்ப்பதாகத் தேர்தல் வாக்குறுதி தந்திருக்கிறார். அவர்களைக் காட்டிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ராஜஸ்தானில் இருந்தாலும், அவர்கள் 'வாக்கு வங்கி' அல்ல என்பதால் கவனம் பெறவில்லை!

இட ஒதுக்கீட்டு விஷயத்தில் மாற்றுக் கருத்து சொல்வோரை அரசியல்வாதிகள் சமூக விரோதிகள்போல் சித்திரிக்கிறார்கள். நீதிமன்றம் ஒதுக்கீட்டுக் கொள்கையைச் சட்டபூர்வமாக விமர்சித்தாலோ உச்ச வரம்பு விதித்தாலோ, 'புரட்சி வெடிக்கும்' என்று அரசியல் தலைவர்களே மக்களை உசுப்பி விடுகிறார்கள்.

மொத்தத்தில் இட ஒதுக்கீடு என்பது, 'ஒரு சில பிரிவினரின் பிறப்புரிமை' என்கிற மாதிரி சித்திரிக்கப்பட்டுப் பிரசாரம் நடக்கிறது.

ராஜஸ்தானில் வெடித்த வன்முறை அவமானம் என்றால், இத்தகைய சித்திரிப்பும் பிரசாரமும் அதைக் காட்டிலும் பன்மடங்கு அவமானம் அல்லவா!

ஒவ்வோர் இந்தியனும் தனது சொந்த பலத்தினாலும் திறமையினாலும் முன்னேற வேண்டும்; சலுகை பெறுவதை அகௌரவமாக எண்ண வேண்டும். இந் நிலை நாளாவட்டத்தில் உருவாக இன்று அமலில் இருக்கும் இட ஒதுக்கீடு முறை எந்த வகையில் உதவுகிறது? உணர்ச்சிவசப்படாமல், ஜாதி - மதக் கண்ணோட்டத்தைக் கடந்து, இதை ஆராய வேண்டும். ஒதுக்கீட்டுக்கே அவசியமில்லாத நிலை படிப்படியாக மலர வழிசெய்ய வேண்டும். இதனைச் செயல்படுத்தும் வகையில் உச்சநீதிமன்றம் ஆணைகளைப் பிறப்பித்து, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் சீர்திருத்தங்களைச் செய்ய வழிவகுத்தால், அதுவல்லவோ அர்த்தமுள்ள புரட்சியாக அமையும்! ●



''டாக்டர் ஆபரேஷன்தான் முடிஞ்சிடுச்சே. இப்போ பேஷண்ட் கிட்டே ரெண்டு வார்த்தை நாங்க பேசலாமா?''

''நீங்க பேசலாம்.''

– சி.பி.செந்தில்குமார்

துன்பம் நீங்கப் போகுது!



''வாள் இருக்கற உறையைப் பார்த்து மன்னர் எதுக்கு அலர்றார்?''

''உறைக்குள்ள பல்லி அலையுதாம்!''


– அம்பை தேவா

''எட்டு மாதச் சம்பள பாக்கி காரணமாக எவனும் என்னை மதிக்க மாட்டேங்கிறான் அமைச்சரே!''

''சரிசரி, சும்மா புலம்பாதே!''

– உ.ராஜாஜி





''குடுகுடுப்பைக்காரன் நேற்றிரவு வந்து 'துன்பம் நீங்கப் போகுது, கஷ்டம் தூரப் போகுது'ன்னு சொன்னான்.''

''அதுக்கென்னங்க இப்ப?''

''நீ உன் அம்மா வீட்டுக்குப் போகப் போறது அவனுக்கெப்படித் தெரியும்?''

– எம்.அசோக்ராஜா



சோ

எழுதிய

மஹாபாரதம்

(இரு பாகம்)

ஹிந்து மஹா சமுத்திரம்

வேதங்கள், உபநிஷத்துக்கள், வேதாந்தம், சாத்திரம், புராணங்கள், ஆலயங்கள், பக்தி, சரித்திரம், நீதி, சட்டம், சமூக சிந்தனை, விஞ்ஞானம், கணிதம், இலக்கியம், வான சாத்திரம் என்று விரிந்து... ஆழ்ந்து, அகன்ற இந்த சமுத்திரத்தை அதன் கரையோரத்தில் நின்று பார்த்தவரின் பிரமிப்பு!

முதல் பாகம் விலை. ரூ.175/-

பாரதக் கதை பழமை வாய்ந்தது. ஆனால் அதை எழுதியிருக்கும் விதம் மிகவும் புதுமையானது. 1304 பக்கங்களில்; வியாச பாரதத்தின் சுருக்கம்; 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள்; பாரதக் கதை நடந்திருக்கக்கூடும் என்பதற்கான வழக்கறிஞர் 'சோ'வின் ஆணித்தரமான வாதம்; பலரும் கேட்டிராத நுணுக்கமான அரிய தகவல்களை விளக்கி; முக்கிய இடங்களில் பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும் விமர்சித்து, இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கும் விதம் புதுமையானது.

இரண்டு பாகங்கள் - விலை ரூ.600/-

வால்மீகி ராமாயணம்

வால்மீகி முனிவரால் எழுதப்பட்ட ராமாயணம் எனும் இதிஹாசத்தை - சுருக்கமாகவும், மிகவும் எளிய நடையிலும் சோ அவர்கள் எழுதியுள்ளார். மேலும் சில முக்கியமான இடங்களில் வால்மீகி ராமாயணம் - கம்ப ராமாயணம் மற்றும் துளசிதாஸரின் ராமாயணங்களை விட எப்படி வேறுபட்டுள்ளது என்பதையும், அப்படி விளக்கும் போது ஆங்காங்கே கம்பரின் வாக்கியத்தி லுள்ள தமிழ் அழகையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

விலை ரூ.500/-

இந்து தர்மம்

விலை ரூ.60/-

காஞ்சி காமகோடி பூஜ்ய ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் அருளுரைகளின் சுருக்கம்.

அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள்

ராஜாஜி, மொரார்ஜி தேசாய், இந்திரா காந்தி, சந்திரசேகர், அத்வானி, காமராஜ், அண்ணாதுரை, எம்.ஜி.ஆர், கருணாநிதி, என்.டி.ஆர்., ஜெயலலிதா போன்ற ஏராளமான அரசியல் தலைவர்கள், மற்றும் சினிமா, பத்திரிகைப் பிரமுகர்களுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கியுள்ளார் விலை ரூ.120/-

கருத்தாழம் மிக்க நகைச்சுவை நூல்கள்

1. வெறுக்கத்தக்கதா பிராமணீயம்	35.00
2. இந்து தர்மம்	65.00
3. வந்தே மாதரம்	115.00
4. வாஷிங்டனில் நல்லதம்பி	100.00
5. சர்க்கார் புகுந்த வீடு	100.00
6. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1)	130.00
7. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2)	45.00
8. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3)	27.00
9. துக்ளக் படமெடுக்கிறார்	50.00
10. அதிகப் பிரசங்கம்	32.00
11. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்	
12. யாரோ இவர் யாரோ?	65.00
13. சாதல் இல்லையேல் காதல்	80.00
14. மையியார் பிரம்ம தேவா	30.00
15. இந்தியா எங்கே போகிறது?	20.00
16. துக்ளக் கேள்வி - பதில் பாகம் 1	24.00
17. துக்ளக் கேள்வி - பதில் பாகம் 2	45.00
18. ஒண்ணரை பக்க நாளேடு பாகம் 1	40.00
19. காமராஜை சந்தித்தேன்	60.00
20. புரட்சி கீதை	35.00
21. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன்	45.00
22. யாருக்கும் வெட்கமில்லை	40.00
23. சட்டம் தலை குனியட்டும்	40.00
24. எங்கே போகிறாய்?	40.00
25. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?	35.00
26. இறைவன் இறந்து விட்டானா?	35.00
27. இன்பக் கனா ஒன்று கண்டேன்	25.00
28. சாத்திரம் சொன்னதில்லை	40.00
29. சரஸ்வதியின் சபதம்	35.00
30. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு	35.00
31. நேர்மை உறங்கும் நேரம்	30.00
32. மனம் ஒரு குரங்கு	40.00
33. ஏன் கூடாது?	40.00
34. இரவில் சென்னை	40.00
35. முகமது பின் துக்ளக்	35.00
36. உறவுகள் இல்லையடி பாப்பா	40.00
37. சம்பவாமி யுகே யுகே	40.00
38. எதற்காக?	35.00
39. உண்மையே உன் விலை என்ன?	37.00

1. ஸ்மைல் ப்ளீஸ்	- சத்யா	ரூ. 40.00
2. அரசியல் கலையை அறிந்து கொள்வோம்	- "	ரூ. 40.00
3. நையாண்டிக் கட்டுரைகள்	- "	ரூ. 40.00
4. அரசியலும் நகைச்சுவையும்	- "	ரூ. 32.00
5. நாடு தழுவிய நகைச்சுவை	- "	ரூ. 50.00
6. மடாசாமியின் மனசாட்சி	- "	ரூ.100.00

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
அல்லயன்ஸ்
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை - 4. தொலைபேசி : 24641314
e-mail : www.alliancebook.com
visit us at: Srinivasan@alliancebook.com



● **டி.ஜி.எஸ். நெல்லை**

வெயிலை எப்படிச் சமாளிக்கிறீங்க...?

ஒரு சின்ன ஃப்ளாஷ் பேக்... அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு இதே சூரியன்...இதே வெயில்... கல்கி, தேவன் போன்றவர்கள் உச்சியில் ஒப்புக்கு முணுமுணுக்கும் மின்விசிறிக்கு அடியில் அமர்ந்து, 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்', 'துப்பறியும் சாம்பு', 'மிஸ்டர் வேதாந்தம்' போன்ற ஆச்சரியங்களை, வேர்த்தாலும் விறுவிறுப்பு குறையாமல் எழுதினார்கள்.... இன்று உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல இந்தப் பாழாய்ப்போன 'கிரேஸி'க்கு 'ஏஸி' தேவைப்படுகிறது... ஏஸி, ஃப்ரிட்ஜ், ஏர் கூலர் போன்ற 'பொய்யில்' வாழும் வரை நம்மை 'வெயில்' வாட்டும்...

● **எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி**

நகைச்சுவையாகச் சொல்லும் விஷயங்கள் எடுபடுமா..?

என்ன அப்படி கேட்டுட்டீங்க... கிருஷ்ணதேவராயர், அக்பர் போன்ற மாமன்னர்களின் அமைச்சரவையில் 'பிஸ்தா' அறிஞர்கள் இருந்தாலும் நம் நினைவில் நின்றவர்கள், நகைச்சுவையோடு நயம்பட உரைத்த 'தெனாலிராமன்'களும், 'பீர்பால்'களும்தான்... அதேபோல அந்நாளில் கேரளாவில் 'சாக்கியார்-கூத்து' என்ற stand-up comedyயால் தான் அரசரின் அலட்சியங்கள் அம்பலப்படுத்தப்பட்டன...!

* **எஸ்.வி.சேகர்**



● **கிருஷ்ணவேணி, ஹைதராபாத்**

நீங்க எந்தக் கட்சி கிரேஸி..?

வாழ்க்கைக்குப் பகைச்சுவையான எதிர்கட்சிகளை நகைச்சுவையால் ஆளும்கட்சி....

● **மு.மதிவாணன், தர்மபுரி**

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்...கோழையின் சிரிப்பில்..?

தைரியத்தின் வெளிப்பாடுதான் சிரிப்பு...கோழை சிரிப்பதுகூட தான் தைரியமாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகத்தான்...சிரிப்பில் ஏழையாக இருப்பவர்கள் கோழையாக நடித்துக் குலுங்க வைத்த 'வின்னர்- வடிவேலுவைப்' பார்த்தால் சிரிப்புக்கு இரை(றை)யாவார்கள்...

சாமியாராக ஆசைப்பட்டது உண்டா?



● நீ.முத்துகுமார், திருச்சி

சினிமாவில் எப்பத்தான் நீங்க ஹீரோவாக நடிக்கப் போறீங்க..?

என்ன இப்ப அவசரம்... இன்னும் கொஞ்சம் வயசாகட்டும்... சினிமாவுக்கு..!

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

சாமியாராக ஆசைப்பட்டது உண்டா?

பரணீதரனின் 'அருணாசல-மகிமையை'ப் படித்துவிட்டு உடனடியாக 'ரமணர்' ஆகும் வெறியில் திருவண்ணாமலை ஓடிப்போக முடிவு செய்தேன்... புதன்கிழமை ஒரு சின்ன வேலை இருந்ததால் ஓடிப்போவதை வியாழனுக்கு ஒத்திப் போட்டேன்... அதன் பிறகு என்னால் திருவண்ணாமலைக்குப் போக முடியாமலே போய் விட்டது... அந்த புதன்கிழமைதான் நான் பெண் பார்த்தேன்....

● தர்மன் பெரியசாமி, சென்னை-57

கடந்த கால நிகழ்வுகளை அசை போடுவதால் நன்மையா... தீமையா..?

நிகழ்காலத்துக்கு நன்மை... பொழுது போகும்; எதிர்காலத்துக்குத் தீமை... பொழுது பாழாய்ப்போகும்....

● என்.காளிதாஸ், சிதம்பரம்

மனைவியைக் கண்டு பயப்படுவீர்களா..?

Infact... மனைவியைக் காணாத போதுதான் அதிகம் பயப்படுவேன்... பர்சேஸ் என்ற பெயரில் என் பர்ஸை சேஸ் செய்யும் அவள் எந்தக் கடையில் என்ன வாங்கப் போயிருக்கிறாளோ என்பதை நினைக்கையில் பயத்தில் எனக்கு அடிவயிறு கலங்கும்...

● கு.நித்யாநந்தன், திருச்சி

ஒரே நாளில் பணக்காரனாக நான் என்ன செய்ய வேண்டும்..?

முக்கியமாக முந்தின நாள் ஏழையாக இருக்க வேண்டும்...

● எஸ்.மாலதி, மன்னார்குடி

காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட திருமணம்... எதற்கு உங்கள் ஓட்டு..?

நிச்சயமான காதல் திருமணமாக நிச்சயிக்கப்பட்டால் நிச்சயம் நான் மொய் எழுதுவேன்...

● வேதாந்தம், விழுப்புரம்

நீங்களும் எஸ்.வி.சேகரும் சேர்ந்து நாடகம் போட்டீர்கள்... ஏன் பிரிந்தீர்கள்..?

ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்... சில சமயம் கூத்தாடி ரெண்டு பட்டால் ஊருக்குக் கொண்டாட்டம்... நாங்கள் பிரிந்ததால் நகைச்சுவை விரும்பிகளுக்குத் தீனி போட இரண்டு நாடகக் குழுக்கள் கிடைத்தன அல்லவா... ●



✱ படம்: சுந்தரம்

காதல்

எந்த ஒரு விஷயமா இருந்தாலும் சாகதம் - பாதகம், குறை - நிறை சந்தோஷம் - வருத்தம் இருக்கத் தாங்க செய்யும். எல்லாத்தையும் 'பேலன்ஸ்' பண்ணிட்டுத்தான் போகணும். இல்லேன்னா எதுவுமே செய்ய முடியாதுங்க!

என்ன, மதனராஜன் திடீர்னு தத்துவமா பேச ஆரம்பிச்சுட்டானேன்னு பயந்துடாதீங்க. விஷயத்துக்கு வந்துடறேன்... 'கட்டாய ஹெல்மெட்' வந்ததிலும் மேல சொன்னவை அடங்கியிருக்கு. அது என்னன்னு பாருங்க.

● இனிமே காதலனுக்குப் பின்னாடி உட்கார்ந்துட்டுப் போற காதலி, துப்பட்டாவால முக்காடு போட்டுக்க வேணாம். என்னதான் பெண்களுக்கு விதிவிலக்கு அறிவிச்சாலும் இதை ஒரு வாய்ப்பா பயன்படுத்திக்கலாமே. கேட்டா, அரசாங்க ஆணையை மதிக்கிறோம்னு சொல்லலாம். இப்படி ஹெல்மெட் அணியும்போது, சிக்னல்ல நிக்கற பக்கத்து ஆட்டோவுல இருக்கறது ஒண்ணு விட்ட பெரியம்மாவா, எதிர் வீட்டு ஏகாம்பர மாமாவான்னு பயப்பட வேணாம் - இது சாதகம்.

● ஆனா பாருங்க காதலனோட இடுப்புல கையைச் சுத்திக்கிட்டு முதுகுல கன்னத்தை ஒட்டிக்க முடியாது. கொஞ்சம் முன்னாடி நகர்ந்தாலே அவனோட முதுகெலும்பு 'ணங்'காயிடும் - இது பாதகம்.

● டூ-வீலர்ல வர்ற சிட்டுங்க ஏற்கெனவே முழங்கை வரைக்கும் கிளவுஸும் மூக்கு வரை முகமூடியும் போட்டுக்கிட்டுதான் பறந்துட்டு இருந்தாங்க. கண்களை மட்டுமாவது பார்த்துக் குளிர்ச்சியடைஞ்சுட்டு இருந்த பசங்களுக்கு அதுவும் போச்சு - இது குறை.

● அதே சிட்டுங்க முன்னாடி டூவீலர்ல சர்க்கஸ் காட்டிட்டுப் போன காளைங்க



மதனராஜன்

மனசுல லேசா பயம் இருந்தது, விழுந்தா மண்டையில அடிபடுமோன்னு. இனி அதை நினைச்சுப் பயப்பட வேணாம் - இது நிறை.

● பிடிச்சதோ, பிடிக்கலையோ ஜூன் முதல் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேர் ஹெல்மெட் தலையோடு சவாரி வந்ததைப் பார்த்தபோது - **சந்தோஷம்.**

● கட்டளையில்லைங்கற மாதிரி முதல்வர் சொல்லிட்ட அடுத்த நாளே பாதிக்கும் மேற்பட்டவங்க 'காலி' தலையோடு வந்ததைப் பார்க்கும்போது - **வருத்தம்.**



நந்தவனம்!

நானும் மூணு வாரமா கவனிச்சுட்டு இருக்கேன். வட்டமேஜை பகுதியில 'காதல் நந்தவனம்' பற்றின கடிதம் வர்றதில்லை. அதனால என்ன? தனிக்குடித்தனம் மாதிரி தனி வட்டமேஜையை இங்கே ஆரம்பிச்சுட்டேன்.

கல்கி 3.6.07 இதழில் கேட்ட கேள்வியும் உங்களிடமிருந்து வந்த பதில்களில் தேர்ந்தெடுத்த பதிலும்.

காதலிக்கும் வயதில் படிக்கலாமா? படிக்கும் வயதில் காதலிக்கலாமா?

சென்னை லலிதா செல்லப்பா: காதலிக்கும் வயதில் படித்தால் படிப்பு வருமா? படிக்கும் வயதில் காதலித்தால் காதல் வருமா? படிச்சுக்கிட்டே காதலிச்சா காதல் வருமா? இல்லை படிப்பு வருமா? காதலிச்சுக்கிட்டே படிச்சா படிப்பு வருமா? இல்லை காதல் வருமா?

மொத்தத்தில் படிச்சுக்கிட்டே காதலிச்சாலும் காதலிச்சுக்கிட்டே படிச்சாலும் கண்டிப்பாக படிப்பும் வராது; காதலும் வராது. பேசாம காதலியுங்க அல்லது படியுங்க. ஒன்றைச் செய்தால்தான் நல்லது. இரண்டிலும் கவனம் போகாதுங்க. புரியுதா?

எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்: மதனராஜன் தம்பி! 'சர்வே' எடுக்கும்போது சர்வ ஜாக்கிரதையா இருக்கணும். நந்தவனத்துல வந்த சர்வே, காதலால நொந்த மனசுக்காரங்களுக்குக் கோபத்தை ஏற்படுத்திட்டா, உன் நந்தவனம் 'நொந்தவனம்' ஆயிடும் ஜாக்கிரதை!


வி.ஐ.பி.களுக்கு வரும் விருந்தினர்!

“மற்றவர்களின் கவனத்தைப் பெறும் இடத்தில் இருப்பவர்களுக்குக் (உதாரணம்: நடிகர்கள்) கோபம் எளிதில் வர வாய்ப்புண்டு'' என்கிறார் டாக்டர் ஆனந்தன்.

சிம்ரன் தமது மேக்-அப் மேன் மீது சீப்பை விட்டெறிந்த சர்ச்சைக்குரிய சம்பவம் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது!

''கோபம் என்பது இயல்பான ஓர் உணர்ச்சிதான். என்றாலும், அது அடிக்கடி எல்லை மீறும்போது உடல் நிலை, மனநிலை இரண்டையுமே நிரந்தரமாகக் கூட பாதிக்கலாம். எனவே தொடர்ந்து வரும் கட்டுக்கடங்காத கோபத்துக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்வது நல்லது'' என்கிறார் சென்னை வேளச்சேரியில் உள்ள 'மைண்ட் கேர்' மருத்துவ மனையைச் சேர்ந்த மனநல மருத்துவர், டாக்டர் ஆனந்தன்.

✱ டாக்டர் ஆனந்தன்



''காய்ச்சலைப் போலவே கோபமும் ஓர் அறிகுறிதான்; நோய் அல்ல. தீவிர காய்ச்சல் என்றால் அதற்குக் காரணம் மலேரியாவாக இருக்கலாம், டைபாய்டாக இருக்கலாம், காசநோயாகவும் இருக்கலாம். காரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்கும்போது காய்ச்சலும் மறைந்து விடும். அதுபோலத்தான் கோபம்.

அடிக்கடி ஒருவர் கோபம் கொள்வதாலேயே அதை மனநோய் என்று சொல்லிவிட முடியாது! 'சின்ன விஷயத்துக்கெல்லாம் மனைவியிடம் எரிஞ்சு விழறேன்' என்று சிலர் வருத்தப்படுவார்கள். அது அவருடைய சுபாவம். இதைக்கொண்டு அவருக்கு மனநோய் என்று கூறக்கூடாது. இத்தகையவர்களை 'எமோஷனலி அன்ஸ்டேபிள்' என்ற ரகத்தில் சேர்ப்போம்.

கட்டுக்கடங்காத கோபம், அதன் விளைவான வன்முறை, உடல் பாதிப்பு போன்றவற்றுக்கு எழுபது சதவிகிதம் காரணமாக அமைபவை



வெளிப் படுத்திக் கொண்டு, மற்றவர்களையும் பாதிக்காமல் இருக்க முடியும் என்ற எண்ணம் வலுப்படும். யோகிகளும் ஞானிகளும் இந்த விதத்தில்தான் கோபத்தைக் கட்டுப்படுத்தினர், ஒழித்தனர்.

கோபம் வரும்போது உங்களையே ஒரு மூன்றாவது மனிதன்போல் கவனிக்க முயற்சி செய்ய வேண்டும். கோபம் கண்ணை மறைக்கலாம். ஆனால் அப்போதும் விழிப்புணர்ச்சி தேவை. நீங்கள் கோபம் கொண்ட போது உங்களுடன் இருந்தவர்களிடம் சிறிது நேரம் கழித்து அது குறித்து விவாதம் செய்யுங்கள். நீங்கள் கோபத்தை வெளிப்படுத்திய விதம் சரியா என்று சிந்தியுங்கள். பலன் கிடைக்கும்.

கூடவே கோபம் வரும்போது மனத்தில் ஒன்று முதல் பத்துவரை எண்ணிக் கொள்வது, அந்த இடத்தை விட்டுத் தாற்காலிகமாக நகர்ந்து விடுவது, தண்ணீர் குடிப்பது, சீராக மூச்சை இழுத்துவிடுவது போன்ற பழைய உத்திகளும் பலனளிக்கலாம்'' என்கிறார் டாக்டர் ஆனந்தன்.

மனநோய்ப் பிரச்னைகள்தான் என்கிறது ஓர் ஆராய்ச்சி.

மனவியல் மருத்துவர்களால் ஒருவரது சுபாவத்தை மாற்ற முடியாது. ஆனால் கோபத்துக்குக் காரணம் மனநோய் என்றால், அதற்கான சிகிச்சை அளிக்க முடியும்.

'கோபத்தை அடக்குவதில் மனவியல் சிகிச்சைக்கு எந்த அளவு பங்கு உண்டு?'

''கோபத்தை அடக்கிக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் ஆலோசனை அளிப்பதில்லை. மாறாக, தகுந்த முறையில் அதை வெளிப்படுத்த வேண்டும். நீண்ட பயிற்சிக்குப் பிறகு தான் இது சாத்தியமாகும். பிறகு கோபம் வரும்போது நம்மையும்

- ஜி.எஸ்.எஸ்

பறவை

இருள் விலகாத விடியலில் பால் வாங்கி வரும்போது அன்றைய நாள் மற்று மோர் உப்புச்சப்பில்லாத உதவாக்கரை நாளாய்த்தான் இருக்கப் போகிறது என்று தான் நினைத்தார் தனுஷ்கோடி.

எல்லாம் பொய்த்துப் போனது ஒரு சின்னஞ்சிறு காக்கைக் குஞ்சினால். அன்று தனுஷ்கோடி எழுந்த நேரத்திலேயே காக்கைக் கரைவுகள் மிதமிஞ்சி ஒலிப்பதைக் கவனிக்கத் தவற விட்டிருந்தார். பால் வாங்கி வந்து மாடிப் படியேறு கையில் அவரைத் தடுக்கும் விதமாய் காக்கைகள் குறுக்கும், நெடுக்குமாய்ப் பறந்த வண்ணம் இருப்பதையும், அவற்றின் குரல் வளையை யாரோ நெரிப்பதுபோல் தமது கறுத்த அலகுகளைப் பிளந்தபடி கதறுவதையும் பார்த்த பின்புதான் ஏதோ விபரீதம் நடந்திருப்பதை உணர்ந்தார்.

வ ளை ந் து செல்லும் மாடிப் படிகள் ஒன்றில்



திருவையாறு பாலகுமார்

மொழி!

வெடவெடத்த உடலுடனும் ஈரச் சிறகு களுடனும் கூடிய காக்கைக் குஞ்சு ஒன்று மயங்கியவாறு நின்றிருந்தது. அதன் இறக் கைகள் இரண்டும் படியில் தொய்ந்தபடி கிடந்தன. அதன் உடலைவிட தலையும், அதன் அலகும் பெரிதாய் இருந்தன. கண்கள் மூடியிருந்தன. அவ்வப்போது லேசாக விழித்துப் பார்த்தபடி தான் உயிருடன் இருப்பதை உணர்த்திக் கொண்டிருந்தது.

தனுஷ்கோடியால் படியில் ஏற இயல வில்லை. காக்கைகள் அவர் தலையைச் சுற்றி வட்டமிட்டுத் தாக்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

கையில் இருந்த பால் பாக்கெட்டை 'ஹெல்மெட்' என பாவித்து ஒரிரண்டு தாவலில் கதவை அடைந்தார். அவர் மனைவி சொர்ணாம்பாள், "தென்னை மரத்துலருந்து காக்கா குஞ்சு ஒண்ணு விழுந்திடுச்சிங்க" என்றாள், தலையைத் தடவியபடி. படபடப்பாக இருந்தாள்.

"எடுக்கலாம்னு கிட்டே போனா ஒரு காக்கா தலையைக் கொத்திப்புடுச்சி..." என்றாள்.

தனுஷ்கோடி மறுபடி வெளியே வந்த போது கூச்சல் இன்னும் அதிகமானது. காக்கைகள் ஒழுங்கின்றிப் பறந்தன என்றாலும் கண்கள் மட்டும் இவரை நோக்கியபடியே இருந்தன.

தனுஷ்கோடி மெதுவாய் அந்தக் குஞ்சை நெருங்கினார். சத்தம் உச்சத்தை அடைந்து சில தைரிய காக்கைகள் அவர் தலையைத் தம் கால்களால் உரசிச் சென்றன. தலையில் முன் இறகுகள் மாதிரியான பிறாண்டல்களை உணர முடிந்தது.

"உள்ளே வந்திடுங்க..." என்று காக்கைக் கூச்சல்களுக்கிடையே கத்தினாள் சொர் ணாம்பாள். தனுஷ்கோடி உள்ளே வந்த கொஞ்ச நேரத்தில் சத்தம் மட்டுப்பட்டது.

தனுஷ்கோடிக்கு உச்சி மண்டை வலித் தது.

"இனிமே வெளியே போக வேணாம்..." என்று கண்டிப்பாய் கதவைச் சாத்தி விட்டு ஜன்னலைத் திறந்தாள்.

காக்கைக் குஞ்சின் அருகே உட்கார்ந்தபடி அதனைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்துக் கேட்டாள்...

"இந்தக் கூட்டத்தில அந்தக் குஞ்சோட அம்மா யாருன்னு கண்டுபிடிக்க முடியுமா உங்களால..."

தனுஷ்கோடி சிரித்தபடி, "நிச்சயமா உன் தலையைக் கொத்தின காக்காதான்" என்றார்.

அந்தக் குறிப்பிட்ட தாயை அடையாளம் காண்பது ஒன்றும் சிரமமாக இல்லை. இயந்திர கதியில் கூவிக்கொண்டிருந்த கூட்டத்துக்கு மத்தியில் உயிரைப் பிழிவது மாதிரி உச்சஸ்தாயியில் கத்திக்கொண்டு, நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டு அருகே நெருங்குவோரை மூர்க்கமாய் தாக்கிக்கொண்டிருக்கும் அந்தக் காக்கை தான் நிச்சயமாய் அம்மா.

அந்தக் குஞ்சு இப்போது மிகவும் பலவீனமாகிவிட்டிருந்தது. நிற்க இயலா மல் சுவர் பக்கமாய்ச் சாய்ந்து கிடந்தது. அதன் இறக்கைகள் உலர்ந்து விட்டிருந்தன. கண்கள் மூடியே இருந்தன. சட்டென்று பார்க்க ஒரு உயிரற்ற பொருளாய்த் தோன்றி யது.

'செத்துடும்போல இருக்கே' என முணு முணுத்தபடி நகங்களை கடிக்கத் தொடங்கி னாள் சொர்ணாம்பாள்.

ப்ளூகிராஸ் போன்ற அமைப்பு களைத் தொடர்புகொண்டால் அவர்கள் ஏதேனும் செய்யக்கூடிய வாய்ப்புகள் உண்டா என தனுஷ்கோடி யோசித்தார். தொலைபேசி புத்தகத்தைப் புரட்டி, தட்டுப்பட்ட சில எண்களைத் தொடர்பு கொண்டதற்கு பலன் இருந்தது. உடனடியாக அந்தக் குஞ்சை எடுத்து வந்தால் காப்பாற்றிவிடலாம் என அந்த மென்மையான பெண் குரல் தெரிவித்தது.

"கிட்டேயே போக முடியலைங்க..." என்றார் தனுஷ்கோடி.

''எல்லா காக்காயும் துரத்தித் துரத்திக் கொத்துது...'' சற்று நேர மௌனம். யாரோ பேசும் குரல் விவாதம். ''இன்னும் அரை மணி நேரத்துல வர்றோம்'' என்றது அக்குரல் முடிவாக.

தனுஷ்கோடியும் சொர்ணாம்பாளும் உயிருக்குப் போராடும் அந்தக் குட்டி ஜீவனுக்காய் மனத்துக்குள் பிரார்த்தித்தபடி, சாப்பிடவும் மறந்து, வெயில் கொளுத்திய வெறுமையான சாலையை வெறித்த வண்ணம் இருந்தபோதுதான் சோபியாவைப் பார்த்தார்கள்.

சாலை வழியே குடை பிடித்தபடி கையில் குழந்தையுடன் சென்று கொண்டிருந்தாள்.

சொர்ணாம்பாள் தனுஷ்கோடியைப் பார்க்க, அவர் பெருமூச்சு விட்டார்.

''எப்போ வந்தாளாம் அமெரிக்காவிலிருந்து'' என்றார்.

''ரெண்டு வாரமாச்சாம். நம்ம வீட்டுப் பக்கம் திரும்பிக்கூட பார்க்காம போறா பாருங்களேன்...''

''அவங்க அப்பன் மிரட்டி வச்சிருக்கான் அப்படி'' என்று சொல்லிவிட்டு மறுபடி சாலையை வெறிக்க ஆரம்பித்தார் தனுஷ்கோடி.

சோபியாவுக்கு தனுஷ்கோடிதான் கல்யாணம் செய்து வைத்தார், மிகுந்த எதிர்ப்புகளுக்கிடையே.

தனுஷ்கோடியும், சோபியாவின் அப்பா மூர்த்தியும் மிக நெருங்கிய நண்பர்கள். ஒரே பள்ளியில் ஆசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள். தனுஷ்கோடிக்கு ஒரு பையன். தனியார் துறை நிறுவனமொன்றின் உயர் பதவியில் இருக்கிறான். மும்பையிலேயே நிரந்தரமாய் குடியேறிவிட்டான்.

சோபியா வளர்ந்தது கிட்டத்தட்ட தனுஷ்கோடி வீட்டில்தான். படிப்பெல்லாம் முடிந்த பிறகு சோபியாவின் கல்யாண ஏற்பாட்டைத் தொடங்கினார் மூர்த்தி. சோபியா தான் ஒருவனைக் காதலிப்பதாகவும் அவனையே கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்புவதாகவும் சொல்லியிருக்கிறாள். மூர்த்தியின் மகா முரட்டுக்குணம் வெளிப்பட்டது அப்போதுதான். ஏச்சும், பேச்சும், அடியும், உதையும் பட்டுத் தாள முடியாத ஒரு நாளில் தனுஷ்கோடியிடம் ஓடி வந்தாள் சோபியா.

சோபியாவின் உறுதியைத் தெரிந்து கொண்ட பிறகு மூர்த்தியிடம் பேசினார் தனுஷ்கோடி.

அதே முரட்டுத்தனம், வாய் கூசாத வசவுகள், நிதர்சனம் புரியாத முட்டாள்தனம், காலத்துக்கு ஒவ்வாத ஜாதிய வாதங்கள்.


தனுஷ்கோடி தானே செயலில் இறங்கினார். பையனைப் பற்றி நான்கு திசைகளிலும் விசாரித்து 'நல்லவன்தான்' என உறுதி செய்துகொண்ட பிறகு தன் பொறுப்பிலேயே திருமணத்தை நடத்தி வைத்தார். மூர்த்தி எதிலும் கலந்து கொள்ளவில்லை. திருமணம் முடிந்த பிறகு ஓரிரு மாதங்களில் சோபியாவும், அவள் கணவனும் அமெரிக்கா சென்று விட்டனர். அங்கேயே சோபியாவுக்குக் குழந்தையும் பிறந்தது. தனுஷ்கோடிக்கும், மூர்த்திக்குமான நட்பு முறிந்து போனது.



''ராப்பிச்சைக்காரன் வேஷத்துல இருக்கறது மன்னர்தான்னு எப்படிச் சொல்ற?''

''வீட்டு முன்னால போய் அம்மா, தாயேங்கிறதுக்குப் பதிலா யார் அங்கேன்னு சத்தம் போடுறாரே!''

- குருவை ஆர்.தேவிகா



'என்னடா இது, சரியான வேலை செட்டாக மாட்டேங்குது' என்று வாழ்க்கை உங்களுக்குக் கசப்பாக நகருகிறதா? நீங்கள் உடனே செல்ல வேண்டிய இடம் டிஜிட்டல் மேஜிக். தமிழ்ப் படங்களுக்கான அனிமேஷன் பணிகளைச் செய்து வரும் இந் நிறுவனம், இப்போது அனிமேஷன் அகாடமி ஒன்றையும் நிறுவியுள்ளது.

"2009ம் ஆண்டில் இந்தியாவில் 2,30,000 கோடி அளவுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளதாக Nasscom தெரிவித்துள்ளது. தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களை அடையாளம் காணும் முயற்சியாகத்தான் இந்த அகாடமியை நிறுவியிருக்கிறோம். 3டி அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், நான் லீனியர் எடிட்டிங் உள்ளிட்ட பல கோர்ஸ்களை நடத்துகிறோம். கடந்தாண்டு நூறு மாணவர்கள் படித்து, உடனே வேலை வாய்ப்பையும் பெற்றனர். இந்தாண்டு ஐந்நூறு மாணவர்களைச் சேர்க்கவிருக்கிறோம். தகுதியானவர்களை நாங்களேகூட வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம்" என்கிறார் இந் நிறுவனத் தலைவர் அருள்மூர்த்தி.

— இனியா

கசப்பு

சோபியாவுக்குக் குழந்தை பிறந்த கொஞ்ச நாளில் மூர்த்திக்கு பேரக் குழந்தையைக் கொஞ்சம் ஆசை வர, சராசரி நடுத்தர வர்க்க அப்பாவாக மகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார். அதற்கு விலையாக அவர் கேட்டது தனுஷ்கோடி குடும்பத்துடனான சோபியாவின் உறவும், நட்பும்.

ரொம்ப நாளைக்கு இந்த விஷயம் தனுஷ்கோடிக்குத் தெரியவில்லை. சோபியாவிடம் இருந்து ஃபோன் வரவில்லையே என இருவரும் புலம்பியபடியே இருக்க, மூர்த்தியும் அவர் மனைவியும் மகளைப் பார்க்க அமெரிக்கா சென்றுவிட்டிருந்தனர்.

கீழே கேட்ட வாகனச் சத்தம் தனுஷ்கோடியின் நினைவுப் பயணத்துக்குக் கடிவாளம் போட்டது.

ஊதா நிறச் சீருடையில் வந்த இருவர் தாக்கும் காக்கைகளுக்கு போக்குக் காட்டிக்கொண்டே சாவின் விளிம்பில் இருந்த அந்த காக்கைக் குஞ்சினை ஒரு வெள்ளை விரிப்பில் மிகப் பத்திரமாக ஏந்திச் சென்றனர்.

"ஒரு வாரத்தில் குணப்படுத்தி நாங்களே சுதந்திரமா பறக்க விட்டுடுவோம்" என உறுதியும் அளித்தனர்.

அந்தத் தாய் காக்கை மட்டும் வண்டி கிளம்பிச் செல்லும் கணம் வரை கத்தியபடியே சுற்றிச் சுற்றிப் போராடியது. அதன் ஆக்ரோஷம் பார்ப்போரை நடுங்க வைப்பதாக இருந்தது.

இவ்விஷயம் அத்துடன் முடிந்ததாகத்தான் நினைத்தார் தனுஷ்கோடி, மறுநாள் காலை எழுந்து வெளியே வந்தவுடன் அந்தத் தாய் காக்கையிடம் இருந்து ஒரு கோபப் பிறாண்டலைப் பெறும்வரை.

தனுஷ்கோடியின் தலை வெளியே தெரிந்தாலே ஒரு ஜெட் விமானம் போலப் பறந்து வந்து அவர் தலையைப் பதம் பார்த்தபடியே இருந்தது.

ஓய்வு காலத்தில் ஒரு காக்கைக்கு பயந்தபடி ஒளிந்து ஒளிந்து ஓடிக் கொண்டிருந்தார் தனுஷ்கோடி.

"சும்மா இல்லீங்க. அது ஒரு அம்மாவோட கோபம், எரிச்சுடும்..." என்றாள் சொர்ணாம்பாள்.

"நான் தப்பு ஒண்ணும் பண்ணலயே... நல்லதுதானே செஞ்சேன்" என்றார் தனுஷ்கோடி.

"எனக்குத் தெரியாது... அதை பெத்த மனசுக்கு எப்படிப் புரிய வைப்பீங்க..."

"அது சரி... அதுக்கு நான் காக்கா பாஷைதான் படிக்கணும்..."

"மொதல்ல எப்படியாவது அதை படிச்சுட்டுப் போய் அந்த அம்மா காக்காகிட்ட சொல்லிட்டு, அப்படியே அந்த மூர்த்திகிட்டயும் சொல்லிட்டு வந்திடுங்க. ஏன்னா ரெண்டும் இப்ப ஒரே கிளையில தான் உட்கார்ந்திருக்கு..." என்றாள் சொர்ணாம்பாள்...



ரா.பார்த்திபன்

என் மனத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் விஷயங்களைச் சொன்ன நானே, சினிமா ஓவியத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒதுக்க முடியாத ஜிகினாவாக ஒட்டிக் கொண்டிருக்க யார் காரணம்?

இயக்குனராக வேண்டும் என பாக்யராஜ் சாரிடமிருந்து வெளியே வந்த பிறகு, நிறைய போராடிய பின் 'கேள்விக்குறி' என்ற ஒரு படம். நானே ஹீரோவாக நடிக்கத் துவங்கப்பட்டது. ஹேம்நாத் பாபுஜி அதன் தயாரிப்பாளர். அப்படத்தின் NSC என்ற ஏரியாவை விற்க, விவேக்சித்ரா A.சுந்தரம் என்பவரைச் சந்தித்து கதை சொல்ல வைத்தார்கள். என் கதையைக் கேட்டவுடன் NSC ஏரியாவை வாங்க மாட்டேன்... என்று கூறிவிட்டார் திரு.சுந்தரம். அதற்குப் பதிலாக அந்தப் படத்தின் தயாரிப்பிலேயே தான் பங்குதாரராக இருக்க விரும்புவதாகக் கூறினார். அவ்வளவு பிடித்துப்போனது அந்தக் கதை. கேள்விக்குறி தயாரிப்பாளர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. பாதி பிரசவ மாத வேதனைக்குப் பிறகு அப் படம் அபார்ஷன் செய்யப்பட்டது.

மன-ரணம்-குணமானதும் மறுபடியும் திரு.சுந்தரம் அவர்களைச் சந்தித்தேன். நானே ஹீரோவாக நடித்ததால் தான் படம் நின்றுவிட்டதோ என்ற மனக்கவலையில் இம்முறை அவரிடம் சத்யராஜ், அர்ஜுன் இருவரில் ஒருவரை ஹீரோவாக புக் செய்து கொடுங்கள் என்று கேட்டேன். ஒரு நிமிடம்கூட

தயங்காமல் ''இந்தப் படத்தை என்னால் செய்ய முடியாது'' என்றார். ஒரு நிமிட இடைவெளிக்குப் பின் ''நீங்க சொல்ற ஹீரோவுக்கெல்லாம் சம்பளம் கொடுக்க எனக்கு முடியும். ஆனா அவுங்க நடிச்சா இந்த கதை workout ஆகாது. நீங்க நடிக்கலைன்னு முடிவு பண்ணீங்கன்னா இந்தப் படத்தை நானும் எடுக்கலை'' என்றார் தீர்மான மாக. அவருடைய Judgementதான் வாக்கு என் வாழ்க்கையின் திசையையே மாற்றிவிட்டது. ''என்ன சம்பளம் வேணும்'' கேட்டார். ''எங்க வீட்டுக்கு ரேஷன் மட்டும் வாங்கிப் போடுங்க போதும்'' என்றேன். அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தார். ''அம்மாவும், தம்பியும் மட்டும்தான் இருக்காங்க. அவங்களைப் பாத்துக்கிட்டா போதும்'' என்றேன். ''பத்தாயிரம் - மாசம் - போதுமா'' என்றார்.

''பத்தாாாாயிரமா?!'' வாயைப் பொளந்

ஜெயிக்க முடியாத மனிதர்!

இன்று என்னுடைய புகழ், வாழ்க்கை எல்லாம். இன்றுவரை அதியற்புத, ஆச்சர்ய அதிசயமாக நான் உணர்வது அந்தக் கணம்தான். புதியவரை இயக்குனராக அறிமுகப்படுத்தவே தயங்குவார்கள். அதிலும் என்னையே ஹீரோவாகப் போட்டு.... எந்த ஒரு தயாரிப்பாளருக்காவது அப்படி ஒரு தைரியம் வருமா? இத்தனைக்கும் எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று நான் வேண்டாத தெய்வமேயில்லை. ஆனால் எனக்கு ஸ்நாநப்ராப்தியே இல்லாத ஒரு மனிதரின் தெய்வ

தேன். பத்தாயிரம் என்பது என் கனவு கரன்ஸி நம்பர். ஒரே தொகையா என்னைக்கு அது கிடைக்குதோ அன்னைக்குக் கல்யாணம் - என் கனவு!

''மாசம் பத்தாயிரம்னா - ஒவ்வொரு

* திரு.சுந்தரம் அவர்களுடன்...





பிரபல ஓவியரான ஜே.பி. கிருஷ்ணாவும் நடிக்க வந்துவிட்டார். போதை மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வுக்காக 'நிஜம்' என்ற குறும் படத்தைத் தயாரித்த எழில் கலைக்கூடம், அடுத்து கண் தானத்தை வலியுறுத்தி எடுக்கும் 'மனிதம்' என்கிற படத்தில்தான் இவர் நடிக்கிறார்.

''குலுக்கல் நடனம், தேவையில்லாத ஃபைட், பொருத்தமில்லாத பாடல்கள்னு ஒரு பக்கம் தமிழ் சினிமா அப்பப்போ தரம் புரண்டாலும் நல்ல குறும்படங்கள் வந்து சரிவைத் தடுக்குதுன்னு சொல்லணும். என் முதல் படமே 'மனிதம்' பேசுறதா அமைஞ்சது பாக்யம்'' என்று உருகியவரிடம்,

'அப்போ ஓவியம்?' என்றால் மிளகாயைக் கடித்ததுபோல் பார்க்கிறார்...

''அது இரத்தம், எலும்பு, சதை என என் உடலின் ஒவ்வோர் அணுவிலும் துள்ளிக் கொண்டிருப்பது.''


- வினோ

மாசமும் கல்யாணச் சாப்பாடு தான்'' - மகிழ்ச்சியோடு அவர் பாதம் தொட்டு அட்வான்ஸ் வாங்கினேன். 'புதிய பாதை' படத்தின் கதையை Frame / Frame கேட்டவர், படப்பிடிப்பு தளத்துக்கு மட்டும் வந்ததே யில்லை. என்னைப் போல எத்தனையோ பேருக்கு அளவில்லாமல் உதவியவர், பேசும்போது மட்டும் அளந்துதான் பேசுவார். அது பல கோடி வியாபாரமாய் இருந்தாலும், சில நொடிதான் yes, no - சட்டென முடிவெடுப்பார். அன்பான மனைவி, அபிராமி, பாலாஜி என இரு குழந்தைகள். அடக்கமாகவும் இருப்பார் மிடுக்காகவும் இருப்பார்.

என் குடும்பம் அது டும்பம்... ம்பம்... என எவ்வளவுதான் குறைந்தாலும், நான் என் குறைந்த பட்ச குடும்பத்தோடு, இன்றும் ஜனவரி 1-ஆம் தேதி அவர் காலில் சாஷ்டாங்கமாக விழ, அவர் ஆளுக்கு இஸ்திரி போட்ட நூறு தந்து வாழ்த்துவார். எனக்குத் தெரிந்து அவரது உள்ளங்கை (உள்ளமே வலக்கை வழியாக வழிவதால்) கீழ்நோக்கியே உதவுமே தவிர, மேல் நோக்கி நீட்டி வானம் பார்த்ததே இல்லை! அப்படி மானம் காப்பவர் அவர். புதிய பாதை, பொண்டாட்டி தேவை, கேளடி கண்மணி வெற்றிக்குப் பிறகு சினிமா அவருக்குச் சரிவர கை கொடுக்கவில்லை. அப்போதெல்லாம் நான் அவரிடம் போய் ''நான் கால்ஷீட் கொடுக்கிறேன், பணம் வேண்டாம். நீங்கள் படமெடுங்கள்'' என அதிகப்பிரசங்கித்தனமாகக்கூட கூறியிருக்கிறேன். அப்போதெல்லாம் அவர் ''பார்த்திபன், நீங்க போய் உங்க வேலையைப் பாருங்க'' என விரட்டிவிடுவார். என் வண்ணமய வாழ்க்கையை வானவில்லாய் ரசித்திருக்கிறாரே தவிர, அதை வளைத்துப்போட்டு வான வேடிக்கை காட்டி, வசூல் செய்ய நினைத்ததில்லை. மேன்மக்கள் மேன்மக்களே!

ஒருமுறை எனக்கொரு கடிதம் எழுதினார். அதில், 'எல்லோரும் பிள்ளைகளைத்தானே தத்து எடுக்குறாங்க. நீங்க வித்தியாசமாய் ஓர் அப்பாவை ஏன் தத்து எடுக்கக்கூடாது? - என்னை!' பாசத்தைத் தவிர பணத்தால் அவரை வெல்ல முடியாது. அப்படி, ஜெயிக்க முடியாத மனிதராய் வாழ அவரை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

(மின்னும்)



அழகுக் கலையில் அசத்தல் வருவாய்!

''அழகுக் கலை நிலையங்கள் அதிக லாப மீட்டும் தொழிலாக மாறி வருகின்றன. இவை பெரும்பாலும் பெண்களால் நிர்வகிக்கப்படுவதுதான் இந்த தொழிலில் சிறப்பு'' என்கின்றனர் அழகுக் கலை நிபுணர்களான முத்துலட்சுமியும், ரேவதியும்.

கடந்த 18 வருடங்களாக அழகுக் கலை நிலையத்தை நடத்தி வருகிறார்கள்.

அழகுக் கலை நிலையம் தொடங்குவதற்கான வாய்ப்புகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டால், உற்சாகமாகப் பேசுகின்றனர்.

''பொதுவாக இன்றைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் அழகு குறித்த விழிப்புணர்வு வர ஆரம்பித்திருக்கிறது. குடும்பப் பெண்களும் அழகுக் கலை நிலையங்களை நோக்கி வர ஆரம்பித்திருப்பது இத் தொழில் செய்வோருக்குப் பெரிய ப்ளஸ். ஆகவே வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன.

பியூட்டி பார்லர் ஆரம்பிப்பதற்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் லொகேஷன். பெண்கள் அதிகமாகக் கூடுகின்ற இடமான பெண்கள் கல்லூரி, ஷாப்பிங் மால், குடியிருப்புப் பகுதிகள் போன்றவை பியூட்டி பார்லர் ஆரம்பிப்பதற்கு ஏற்ற இடங்கள்.

ஆரம்ப கட்டத்தில் இதனை நம் வீட்டிலேயேகூட (இடம் இருப்பின்) தனியாக இடம் ஒதுக்கிச் செய்து வரலாம். நல்ல அனுபவம் கூடி வந்த பின் தனியாகக் கடை போடலாம். அதற்குள் கையில் கொஞ்சம் பணமும் சேர்ந்திருக்கும்'' என்று சொல்லும் இவர்கள், இரண்டு இலட்சம் முதலீட்டில் தொழில் தொடங்கி, இன்றைக்கு மாதம் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் வரை வருமானம் பார்த்து வருகிறார்கள்.

''வாடிக்கையாளர் வீட்டுக்கே பியூட்டிஷியன் சென்று தொழில் செய்வதும் நடைமுறையில் இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், பெருகி வரும் IT தொழில்நுட்பம்தான். ஒரு சில நிறுவனங்

சின்ன முதலீடு: பெரிய லாபம்



✱ முத்துலட்சுமி, ரேவதி...

கள், 'எங்கள் ஊழியரின் உடை அலங்காரம், சிகை அலங்காரம் இப்படித்தான் இருக்க வேண்டுமென' நிபந்தனைகள் விதிக்கின்றன. அதுபோன்ற நிறுவனங்களுக்கு நேரில் சென்று ஊழியர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகிறோம். இவர்களில் பெரும்பாலோர் பின்னர் நிரந்தரமாக நமது வாடிக்கையாளராக மாறுவதற்கு வாய்ப்பு அதிகம்'' என்று சொல்லும் முத்துலட்சுமியும் ரேவதியும் ராயபுரத்தில் அழகுக் கலை சார்ந்த டிப்ளமோ படிப்புகளைச் சொல்லித் தரும் நிறுவனத்தையும் நடத்தி வருகின்றனர். இதில் ஆதிதிராவிட பெண்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களும், கணவனை இழந்த பெண்களும் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

''அழகுக் கலை படிப்பை படிப்பதற்கு எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதோடு, கொஞ்சமாவது நமக்கு கிரியேட்டிவிட்டி வேண்டும். எந்த வகை சருமத்துக்கு எந்த வகையான கிரீம்களைப் பயன்படுத்தலாம் என்பது போன்ற நுண்ணறிவு வேண்டும்.

பியூட்டி பார்லருக்குத் தேவையான பொருட்களை சென்னையில் பாரிஸ் கார்னரிலும், மத்திய மும்பை (கல்பா தேவி) போன்ற இடங்களிலும் குறைவான விலையில், தரமாக வாங்கலாம்.

முன்பு அழகுக் கலை என்பது ஃபேஷியல், ஹேர் டிரஸ்ஸிங் என்று மட்டும்தான் இருந்தது. ஆனால், இன்று மணப்பெண் அலங்காரம், ஸ்கின் தெரபி, ஹேர்மேக்கப், உடலின் மற்ற பாகங்களுக்கு தேவையான அழகு சிகிச்சைகள் எனத் தனித் தனி பிரிவுகள் வந்துவிட்டன. இவற்றில் ஏதாவது ஒன்றில் ஸ்பெஷல் திறமையை வளர்த்துக் கொள்ளலாம்.

அழகுக்கலை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்க வங்கிகளில் கடன்கள் கிடைக்கின்றன. ஆதிதிராவிடப் பெண்களுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும், கடன்களில் ஒரு குறிப்பிட்ட அளவு தள்ளுபடியும் செய்யப்படுகிறது. எனவே, கடனுதவி மூலம் சிறிது சிறிதாக ஆரம்பித்து, பின்னர் தொழிலை விரிவுபடுத்தலாம்'' என்று சொல்லும் இவர்களிடம் படித்துப் பயிற்சி பெற்றவர்கள் பலர் இன்றைக்குத் தனியாகத் தொழில் செய்கின்றனர்.

– கதிர்பாரதி

படங்கள்:
பொள்ளாச்சி சுந்தரம்




திருமாலை எதுவரை தொழ வேண்டும், எப்படித் தொழ வேண்டும் என்கிற இரண்டு கேள்விகளுக்கும் ஒரே வெண்பாவில் விடை தருகிறார் பொய்கை ஆழ்வார்.

முதல் திருவந்தாதியில் 70-ஆம் பாடலில்...

எதுவரை தொழ வேண்டும்? உடம்பு விழும் வரை! எப்படித் தொழ வேண்டும்? மலர் மாலையால் தொழலாம், யாகம் செய்யலாம், மந்திரங்களைச் சொல்லலாம். ஏன் தந்திரங்கள் கூடச் செய்து தொழலாம். அவன் பெயரைச் சொன்னால் மட்டும் போதும். உங்களுக்கு நல்லது நிகழும்.

■ சுஜாதா



எப்படியும் தொழலாம்

'சொல்லும் தனையும் தொழுமின் விழும்உடம்பு
செல்லுந்தனையும் திருமாலை - நல் இதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று'

(சொல்லும் தனையும் - சொல்ல முடிந்தவரை, செல்லுந்தனையும் - இறக்கும்வரை, தாமம் - மாலை, வேள்வி - யாகம், ஏத்துதிரேல் - வாழ்த்தினால்)

திருமங்கை ஆழ்வார், 'வயசாவதற்குள் ஒரு நடை பத்ரிகாசிரமம் போய் வணங்கி வந்துவிடுங்கள்' என்றார். இவர் 'அப்படிச் செல்ல முடியாவிட்டாலும் முடிந்ததைச் செய்யுங்கள்' என்கிறார்.



முதியவர் ஒருவரை அடிக்கடி நான் மெரீனா கடற்கரையில் நடக்கும்போது சந்திப்பேன். அவருடன் அதிகம் பேச முடியாது. காது கொஞ்சம் மந்தம். 'எப்படி இருக்கிறீர்கள்?' என்று விசாரிப்பார். 'மூன்று நாளாக ஜுரம். இன்றுதான் தேவலை' என்றால் 'அப்படியா, ரொம்ப சந்தோஷம்' என்பார். ஏழைகளுக்கு ரொட்டி தருவார், டீ வாங்கித் தருவார். ஒரு சில பிச்சைக்காரர்களுக்கு சில்லறை தருவார். மற்ற சமயங்களில் 'நாராயணா, நாராயணா' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் பேயாழ்வாரின் இந்தப் பாசுரத்தைத்தான் கடைபிடிக்கிறார். ஆனால், அதைப் படித்திருப்பார் என்று தோன்றவில்லை; அவர் ஒரு சிந்திக்காரர்.

(படிக்கலாம்)



ஒரு தேவதை பூதமாகிறாள்...!

நீராய்... நிலமாய்...
காற்றாய்... நெருப்பாய்...
வானம் தொட்டும்
இயற்கை தேவதையின்
சித்திரத் துகில்
பறக்கும்

காட்டுக்குள்... கடலுக்குள்
பூ விரிக்கும் வாசத்தில்
கண்ணின் ஈரத்தில்
சூடான மூச்சுக்குள்
உயிருக்குள் உயிராய்க்
கலந்து உறவாடி
மண்ணைத் துளைத்து

மறுபடியும் கிளைவிட்டுச்
சுற்றிச் சுற்றி அவள்
சுழன்று சதிர் ஆடுகையில்...

சுயநலமாய்ச் சுரண்டும்
அற்பக் கயவர்கள்
துகிலுரியக் கரமெடுத்தால்...

ஆம்...
மனிதக் கையைத் தடுப்பதற்குப்
பஞ்ச பூதங்கள்
பூதங்களாகவே இருக்கட்டும்

வைகைச்செல்வி



மிக்ஸி பரிசு பெறும்

அப்பா தந்த அதிர்ச்சி!

என் அப்பாவுக்கு என் மாமனார் நல்லவர் என்பது தெரிந்திருந்தாலும் புகுந்த வீட்டில் மகளை எப்படி நடத்து வார்களோ என்கிற பயம் இருந்தது. இத னைப் போக்க என் கணவர் மூலம் ஒரு பட்டுப் புடைவையை வாங்கி, என் புகுந்த வீட்டில் கொடுத்ததாக என் தந்தையிடம் காட்டினேன். என் அப்பாவும் மனம் மகிழ்ந்து, என் மாமனாரைப் புகழ்ந்து பேசினார். இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். என் எண்ணமும் நிறைவேறியது. என் இந்த நல்ல முயற்சிக்குப் பலனாக கல்கியில் பரிசும் கிடைத்தது.

ஆம்... கல்கி அறிவித்திருந்த 'நன்மை கருதி ஒரு தந்திரம்' என்ற போட்டியில் கலந்துகொண்டு சன்மானமாக பத்து ரூபாய் வாங்கியதோடு, சிறப்புப் பரிசாக ஒரு வி.ஐ.பி. சூட்கேஸும் பெற்றிருந்தேன். பரிசு கிடைத்தது சந்தோஷமாக இருந்தாலும் என் அப்பாவிடம் அதனைச் சொல்ல முடியவில்லை. 'நம் பெண்ணே பொய் சொல்லி நம்மை ஏமாற்றியிருக்கிறாளே' என்று நினைத்து விட்டால்! இதற்கிடையில் என் வீட்டுக்குப் போன பொழுது என் தந்தையே 'என்னம்மா... கல்கியிலெல்லாம் எழுதிப் பரிசு வாங்கி



யிருக்கிறாய் போல இருக்கு. தொடர்ந்து எழுது' என்று அதிர்ச்சியளிக்க... எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. நான்தான் அப்பாவிடம் சொல்லவில்லையே...! பிறகெப்படித் தெரிந்தது? 'உன் சித்தப்பா வீட்டுக்குப் போயிருந்தேன். அவர்கள் விலாசத்தைப் பார்த்துவிட்டு நீ பரிசு வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள்' என்றார் அப்பா!

- ரொசாரியோ ரவிச்சந்திரன்,
சென்னை - 59

யார் செய்த புண்ணியமோ! டைம் கீப்பர் அறையில் எங்கள் சூட்கேஸ்கள் பத்திரமாக இருந்தன!


- மல்லிகா அன்பழகன்,
சென்னை - 112


லட்ச ரூபாய் சர்வஜித் போட்டி 5ன் முடிவுகள் தொடர்கின்றன...

வாசக அனுபவங்கள்!

காணாமல்போன சூட்கேஸ்!

ரொம்பத் தாமதமாய் நாற்பதாவது வயதில் நடந்தது என் திருமணம். பூரிப்போடு புகுந்த வீடு சென்றபோது... திருமணத்துக்கு முதல் நாள், மூன்றாவது மாரடைப்பு வந்து கோமாவில் படுத்த மாமியாருக்கு, எல்லாப் பணிவிடைகளையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். மூன்றாவது மாதம் மாமியார் தவறிய பிறகு, தனிக்குடித்தனம் நடத்தும் நோக்கில் சென்னைக்குப் புறப்பட்டோம். சூட்கேஸில் பொருட்களை எடுத்துக்கொண்டு பஸ் ஏறியவுடன், கணவருக்குக் குளிர்க் காய்ச்சல்! புதுக்கோட்டையில் பஸ் நின்றபோது நான் இறங்கி மருந்து வாங்கி வரச் சென்றேன். கணவரும் என்னைத் தேடி இறங்கிவிட... பஸ் போயே போச்சு! பதறிப்போய் ஒரு டாக்ஸி பிடித்து விரட்டினோம். எனது நகைகள், படிப்புச் சான்றிதழ், புத்தாடைகள், ரொக்கம் எல்லாமே அந்த சூட்கேஸ்களில் அடக்கம். எங்களிடமிருந்த பணம் டாக்ஸிக்கே சரியாய்ப்போனது. பாதியில் இறங்கி மிச்சமிருந்த சில்லறைகளைக் கொண்டு அடுத்த பஸ் பிடித்து திருச்சி நோக்கி விரைந்தோம்.





நடக்குமென்பார்;

மேஷம்: பொருளாதாரச் சிரமங்கள் மாறும். தடை விலகித் திருமணம் கைகூடும். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும்.

ரிஷபம்: சுபகாரியம் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் முயற்சி கைகூடும். உடல்நிலை நன்றாக இருக்கும். நீண்ட நாள் முடிவுக்கு வராத பிரச்னை தீரும்.

மிதுனம்: தெய்வ அனுகூலம் ஏற்படும். சுபச் செலவு உண்டாகும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். வழக்கு முடிவுக்கு வரும். குழந்தை பாக்கியம் கிட்டும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

கடகம்: குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. உணவுக் கட்டுப்பாடு அவசியம். குழந்தைகள் வழியில் சுபச்செலவு ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். பணத் தேவைகள் அதிகம் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணும்..

சிம்மம்: குடும்பத்தில் சற்றுக் குழப்பம் ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். குடும்ப வழியில் அனுசரணை தேவை. கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். வியாபாரத்தில் சற்று முற்போக்கான சூழ்நிலை உண்டாகும்.

கன்னி: எண்ணங்கள் யாவும் ஈடேறும். தடை விலகித் திருமணம் கைகூடும். பொருளாதார கஷ்டம் விலகும். செலவுகள் சுபமான

தாக இருக்கும். வியாபாரத்தில் அபரிமிதமான லாபம் கிட்டும். வேலையில் நற்பெயர் ஏற்படும். வீடு/மனை வாங்க நல்ல காலம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

துலாம்: மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். நீண்ட நாள் முடிவு பெறாத வழக்கு முடிவுக்கு வரும். குழந்தை பாக்கியம் கிட்டும். வேலையில் மாற்றம் ஏற்படும். பூர்வீகச் சொத்துகள் பாகப் பிரிவினை ஆகும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். கல்வியில் நல்ல மேன்மை கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது.

விருச்சிகம்: தடைபட்டு வந்த திருமணம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்பான பதவிகள் வந்து சேரும். வீடு/மனை வாங்க நல்ல காலம். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும்.

தனுசு: தடை விலகித் திருமணம் கைகூடும். உடல்நிலை பாதிப்பு சீராகும். வழக்கு முடிவுக்கு வரும். பணச் சிரமம் குறையும். வெளியூர் அழைப்பு கிட்டும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும்.

10.6.2007 முதல் 16.6.2007 வரை

தஞ்சை பரத்வாஜ்

மகரம்: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. கொடுக்கல், வாங்கலில் அதிக கவனம் தேவை. கல்வி வளம் மேலோங்கும். பூமி மூலம் ஆதாயம் ஏற்படும். வீடு/மனை வாங்க நல்ல காலம். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் சற்று முன்னேற்றம் காண்பிக்கும்.

கும்பம்: குடும்ப வழியில் விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். வேலையில் நற்பெயர் உண்டாகும். பதவி உயர்வு தேடி வரும். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். புதிய வீடு வாங்க ஏற்ற காலம். வாக்கு, நாணயம் காப்பாற்றப்படும்.

மீனம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். மனச் சலனம் விலகும். திருமணக் காரியம் கைகூடும். குழந்தை பாக்கியம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். ஆடம்பர வஸ்துக்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ●

நடக்கும்!

பரத்வாஜ் பதில்கள்

என் மகன் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறான். குடும்பத்துடன் ஒட்டாமல் இருக்கிறான். என்ன செய்யலாம்?

- விஜயா, பரிதாபாத்

குருபகவான் ராகுவின் ஆதிக்கத்தால் உங்கள் பையன் பிறந்த குடும்பத்துடன் பற்றுதல் இல்லாமல் இருக்கிறான். சர்ப்ப தோஷம் உள்ள பெண்ணாகச் சேர்க்கவும். 37 வயதில் திருமணம் நடக்கும்.

என் மகனுக்குத் திருமண வாழ்க்கை நன்றாக இல்லை. மறுமணம் நடக்குமா?

- கே.ஆர்.ராமநாதன், விஜயவாடா

உங்கள் பையனுக்கு சனி தசையில் புதன் புத்தியில் வழக்கு முடிந்து, சனி தசை சுக்ர புத்தியில் மறுமணம் உண்டாகும். வேலைவாய்ப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.



"மூணு நாளா உங்க மனைவியைக் காணலைன்னு சொல்றீங்களே! எல்லா இடத்திலேயும் தேடினீங்களா?"

"இன்னும் பத்து ஜவுளிக் கடை பாக்கி இருக்குங்க சார்!"

- எஸ்.இராஜேந்திரன்



மனைவியைக் காணவில்லை!

"என்னடி... முறுக்கை ரொம்ப அகலமா சுடுற?"

"என் மாமியாருக்கு வாய் நீளம்!"





"எதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சீங்க?"

"அழகான பெண்ணைக் கட்டினா ஆபத்துன்னு சொன்னாங்க!"

"குடிச்சா ஞாபக மறதி வருமா டாக்டர்?"

"எதுக்குக் கேட்கறீங்க?"

"சில நாள் குடிக்க மறந்துடுது!"

- அம்பை தேவா





+16
குழந்தைகளின் குதூகலம்!
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
கோகுலம்
கோடையிலும்
குளு! குளு!
கோகுலம்
அசத்த வருது
ஹாலிவுட்!
கோகுலம்
அக்கரைப்
பள்ளிகள்!
உங்கள்
பார்வைக்கு...
கல்கி
தரம் நிரந்தரம்





உங்களுடன்

அன்பு வாசகர்களே,

வணக்கம்! முதலில் உங்களுக்கு ஒரு சின்ன வேலை. சிரமம் பார்க்காமல் செய்யுங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கேள்விகளுக்கு அதற்கான கட்டங்களில் 'டிக்' அடியுங்கள்.

1. உங்களின் சிறு வயது பொழுதுப் போக்கு என்ன?

- ☐ விளையாடுவது
- ☐ கதைப் புத்தகம் படிப்பது
- ☐ தொலைக்காட்சி பார்ப்பது

2. இன்று உங்கள் பிள்ளைகளின் பொழுதுபோக்கு என்ன?

- ☐ விளையாடுவது
- ☐ கதைப் புத்தகம் படிப்பது
- ☐ தொலைக்காட்சி பார்ப்பது

'டிக்' அடித்து விட்டீர்களா? விடையை நாங்கள் சொல்கிறோம். சரியா என்று பாருங்கள். முதல் கேள்விக்கு பெரும்பாலானோர் முதலிரண்டு கட்டங்களை 'டிக்' அடித்து இருப்பீர்கள். இரண்டாவது கேள்விக்கு பெரும்பாலானோர் மூன்றாவது கட்டத்தை 'டிக்' அடித்து இருப்பீர்கள்!







சில நிமிடங்கள்...

இது மாயாஜாலத்தில் கண்டுபிடித்த விடையல்ல. நம் எல்லோருக்குமே தெரிந்த உண்மை! ஓடியாடி விளையாடுவதும், கற்பனைக்கு வேலை தரும் கதைப் புத்தகம் படிப்பதும் இன்றைய குழந்தைகளிடம் குறைந்து, அவர்களின் நேரமும் கவனமும் தொலைக்காட்சி மற்றும் வீடியோ கேமிற்குள் புதைந்துக் கொண்டிருக்கிறது. அவற்றிலிருந்து அவர்களை மீட்க வேண்டியது நமது கடமை.

இன்று உங்கள் கையில் கல்கியும் இன்ன பிற பத்திரிகைகளும் தவழ்கின்றனவென்றால் அதற்குக் காரணம், சிறு வயதில் உங்களுக்கு ஏற்பட்ட படிக்கும் பழக்கம்தான்!

நாளை நம் குழந்தைகள் வளரும்போது அவர்களின் கரத்தில் தரமான பத்திரிகைகள் இருக்குமா..?

என்னதான் நொடிக்கு நொடி காட்சி மாறுகிற வண்ணத்திரையில் படங்களைப் பார்த்தாலும், படிப்பதில் உள்ள சுகம் என்னவென்று நீங்கள் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருப்பீர்கள். அந்த சுகத்தை, அனுபவத்தை நமது குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டுமல்லவா? அதற்குத்தான் கோகுலம்!

'கோகுலம்' மகா பெரியவர் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களின் ஆசியுடன், குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டு, **இருபத்தைந்து வருடங்களாக** வெளிவந்து கொண்டிருக்கிறது. கற்பனைக்குத் தீனியிடும் சிறுகதைகள், கவிதைகள், அறிவு தாகம் தீர்க்க அற்புதமான பகுதிகள், பல்வேறு பரிசுப் போட்டிகள் என எல்லாம் உண்டு.

இன்றைய கணிப்பொறி யுகத்துடன் போட்டியிடும் வகையில் வண்ண வண்ணப் படங்கள், விளையாட்டுப் பகுதிகள் எல்லாம் இதிலுண்டு! புத்தகத்தின் சில பகுதிகள் ஹைலைட்டாக அடுத்தடுத்தப் பக்கங்களில் உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. படித்துப் பாருங்கள். உங்கள் குழந்தைகளுக்கு காட்டுங்கள். அவர்களுக்குப் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள். அவர்களின் கற்பனைக்கும் அறிவுத் திறனுக்கும் வேலை கொடுங்கள். நாளைய சமுதாயத்தை நலமாய் உருவாக்க உதவுங்கள்.

அன்புடன்

ஆசிரியர் (கோகுலம்)

அறிவுக்கும் கற்பனைக்கும்!

உங்கள் செல்லத்தின் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துகிறது!



ஏ.கௌதமி
நான்காம் வகுப்பு
பாரம்பீர் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
தருமபுரி.

விடுகதை

1. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி
அது என்ன?
விடை : மழை

2. நடமாடும் சின்னஞ்சிறு வீடு;
சிடம்மாவுக்கு அது கூடு
அது என்ன?
விடை : நத்தை

சூப்பர் கையெழுத்து!



அ. பிரபாகரன்
பொள்ளாச்சி.


உங்கள் கைவண்ணம்!



உங்கள் பிள்ளைகளின் திறமையை ஊருக்குச் சொல்லும் பகுதி!



மனிஷா
வடக்கன் குளம்.



சாதனைத் தளிர்கள்!

படிக்கவும் பாதுகாக்கவும்

கருத்தை விதைக்கும் கவர் ஸ்டோரிகள்!

ஹாய் ஃப்ரண்ட்ஸ்! லீவெல்லாம் முடிஞ்சதா? புது கிளாஸுக்குப் போகப் போறீங்க! புது டிரெஸ், புது ஸ்கூல் பேக், புது ஷூ... ஏன் சிலர் புது ஸ்கூலுக்கும் மாறுவீங்க. அங்கே புதுப்புது நண்பர்கள் கிடைப் பாங்க. அடடா, அதுக்குள்ளே லீவு முடிஞ்சுப் போச்சேங் கற வருத்தம் ரெண்டு மூணு நாளைக்கு இருக்கும். அப்புறம் புதிய பாடங்கள், நண்பர்களுடன் அரட்டை, வருத்தங்களை விரட்ட, ஜாலியா யிடுவீங்க!

உங்க பள்ளியைப் பத்தி உங்களுக்கு நல்லாத் தெரியும். வெளிநாடு களில் பள்ளிகள் எப்படி நடக்குது? அங்கே முக்கியமான பாடங்கள் என்ன? குட்டீஸ்களுக்கு என்ன மாதிரி விளையாட்டெல்லாம் சொல்லித் தர்றாங் கன்னு தெரிஞ்சுக்க ஆசையா இருக்கா? வாங்க ஒரு விஸிட் பண்ணலாம்...

முழு கட்டுரை ஜூன் 2007 கோகுலம் இதழில்...

அக்கரைப் பள்ளிகள்!



ரசிக்கவும் ருசிக்கவும்!

அன்பையும் பண்பையும் விதைக்கும் கதைகள்!

பெரியவர்கள் சொன்ன குட்டிக் கதைகள் : 3

வேலி!



ஓர் ஊரில் பாட்டியும் பேரனும் இருந்தார்கள். ஒருமுறை பாட்டி பூசணிக்காய் விதையைக் கொண்டு வந்தாள்.

''பேரா... இதைத் தோட்டத்தில் ஆழமாகக் குழி தோண்டிப் புதை. தினமும் நீர் ஊற்றி, கவனமாக வளர்த்து வா. பூசணிக்காய் முளைத்ததும், பறித்து, சமையல் செய்யலாம்'' என்றாள்.

பேரன் சம்மதித்தான். தோட்டத்தில் குழியைத் தோண்டி பூசணி விதையைப் போட்டு மூடினான். தினமும் தவறாது நீர் ஊற்றினான். செடி முளை விட்டது. கொடி படர்ந்தது; பூ பூத்தது; காய் உருவாகத் தொடங்கியது.

அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி. 'விரைவில் பூசணிக்காய் பொரியல் சாப்பிடப் போகிறோம்' என்று நினைக்கையில் நாவில் நீர் ஊறியது. பாடுபட்டதற்கான பலன் கிடைக்கப் போகிறது என எண்ணி சந்தோஷப்பட்டான்.

பூசணிக்காய் பறிக்கும் பக்குவத்துக்கு வளர்ந்ததும், பாட்டியிடம் சென்று பேரன் விஷயத்தைச் சொன்னான். இருவரும் தோட்டத்துக்கு வந்து பார்க்க, அதிர்ச்சி! அங்கே பூசணிக்காயைக் காணவில்லை.

அப்போது பக்கத்து வீட்டுப் பெண்மணி ''தம்பி, நீ வியர்வை சிந்த பாடுபட்டாய். எல்லாம் செய்த நீ ஒரு வேலியையும் போட்டிருந்தால், யாராவது பறித்துப்போய் இருப்பார்களா?'' என்று கேட்டாள்.

பேரனுக்குப் புரிந்தது. கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. உழைப்பின் மூலம் கிடைக்கும் பலனை அறிவோடு பாதுகாக்கும் வழியையும் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்ந்தான்.

மேலும் சிறுகதைகள், தொடர்கதைகள் எல்லாம் உண்டு!

வியப்புக்கும் விஷயத்துக்கும்

அற்புதமான தகவல்கள்!
அழகான படங்கள்!



ஒவ்வோர் ஆண்டும் ஜூன் பதி னான்காம் தேதி, **உலக ரத்ததான தினம்** கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா? ரத்தம் ஒரே நிறத்தில்-சிவப்பாக இருந்தாலும், அதில் ஏ, பி, ஓ என்று சில பிரிவுகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்த 'கார்ல் லாண்ட்லர்' பிறந்த தினம். மனிதர்கள் தாமாக முன்வந்து ரத்த தானம் அளிக்க ஊக்கமூட்டும் விதமாக உலக ரத்த தான தினம் கொண்டாடப்படுகிறது...

தெரிந்துகொள்வோம்!

*அ*ரேபிய தீபகர்பத்தில் வாழ்ந்தவர்கள் அரேபியர்கள் எனப்பட்டனர். இதன் நாகரிகம் தென்பகுதி காட்டுவாசிகளால்தான் உருவாக்கப்பட்டது. இந்நாகரிகம் விவசாயம் சார்ந்ததே! இது கி.மு. 600களில்தான் செழித்தது. ஆனால் கி.மு. 1500களில், நிறைய துண்டு, துண்டு நாடுகளாகக் காணப்பட்டது. இவற்றுள் முக்கிய மானவை, மினாயன், சபாயன், ஹிமையார்ட் என்பவையே...




நேற்றைய உலகம்!

கோகுலம் 25


உங்கள் செல்லத்திடம் கொடுத்து இவற்றை

வழி காட்டுங்கள்!

தேனீ பூவை அடைய ஹெல்ப் பண்ணுங்க!



வண்ணம் தீட்டுங்கள்!



...ச் செய்யச் சொல்லுங்க!

விளையாடவும் விடை தேடவும்

குழந்தைகளின் சின்னஞ்சிறு கைகளுக்குச் சுட்டியான மூளைக்கு வேலை!



சவால்!

இங்கே எத்தனை பறவைகள் உள்ளனவென்று எண்ணிப் பாருங்கள்!



16 வித்தியாசமான டூ இன் ஒன் பக்கங்கள்!

வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!


இங்குள்ள துண்டுகளை வெட்டியெடுத்து சரியான இடத்தில் ஒட்டுங்கள்!





தேன்மொழி-கனிமொழி

கருத்து, படம் : பிள்ளை





தும்பியும் வானவில்லும்!

தஞ்சை சகா

சின்ன சின்ன சிறகுவிரித்துத்
தும்பி பறந்தது - அது
வண்ணம்மின்னும் வானவில்லைத்
தீண்டத் துணிந்தது!

கண்ணில் நூறு கற்பனைகள்
சேர்த்துக் கொண்டது - ஒரு
மின்னல்வெட்ட இலையின்
முதுகில் மறைந்து கொண்டது!

மறைந்துகொண்ட போதுமது
அடுத்த நிமிடமே - மிக
விரைவுடனே வானைநோக்கி
பயணம் கொண்டது...



முழு கவிதையையும் படிக்கணுமா?
ஜூலை 2007 இதழுக்கு
வெயிட் பண்ணுங்க!





ஊசியிலைக் காடுகள் என்றால் என்ன? இந்தியாவில் அவை எங்குள்ளன?

தரையிலிருந்து சுமார் 2,500 மீட்டருக்கு மேல் உள்ள இடங்களில் வெப்பம் குறைந்து, பனி நிறைந்து காணப்படும். இங்குள்ள தாவரங்கள், குளிரையும், பனியையும் தாங்குவதற்கு ஏற்றவாறு கூம்பு வடிவில் உயரமாக வளரும். இலைகள் ஊசி

அன்புடன் ஜக்கு...

போன்று காணப்படும். இம் மரங்கள் உள்ள இடங்களை 'ஊசியிலைக் காடுகள்' என்பர். இந்தியாவில் இமயமலைப் பகுதியில் ஊசியிலைக் காடுகள் உள்ளன.

- இ. இராஜேஷ், பதினொராம் வகுப்பு,
உக்கடை அ.அப்பாவுத் தேவர், மேல் நிலைப் பள்ளி, அம்மாப்பேட்டை



கோகுலம் வெள்ளி விழா + குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007

மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000/-


முதல் பரிசு	ரூ. 1,000/-
இரண்டாம் பரிசு	ரூ. 500/-
மூன்றாம் பரிசு	ரூ. 500/-

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

* இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி முகவரி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.

* கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். சொந்தக் கற்பனையாக இருத்தல் முக்கியம். அதற்கான உறுதிமொழி கடிதத்தை கதையுடன் இணைக்க வேண்டும். முடிவு தேதி : 30.6.2007

மேலும் விவரங்களுக்கு ஜூன் 2007 இதழைப் பாருங்க அல்லது 22251522 எண்ணுக்கு போன் செய்யுங்க!



கோலாகல ஆரம்பம்!

தமிழ் எழுத, படிக்கத் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும் அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டும். (பள்ளி இறுதி வகுப்பு வரை)

இங்கு கொடுக்கப்பட்டுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். நாங்கள் 'கோகூ' உருவம் பொறிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அட்டையை அனுப்புவோம். அதில் உங்கள் பிள்ளைகள் பற்றிய விவரங்களுடன், உறுப்பினர் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்...

மேலும் விரிவான தகவலுக்கு கோகுலம் ஜூன் 2007 இதழைப் பாருங்கள் அல்லது ஜூலை இதழுக்காக காத்திருங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

புகைப்படம்

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

கோகுலம் 25

சிரிப்புக்கும் சிந்தனைக்கும்

கலகலவென சிரிக்கலாம்! அடடாவென வியக்கலாம்!

சிரிப்பலை



''பாலு! என்னிடம் உள்ள பத்து சாக்லேட்டுகளில், ராமுவுக்கு ஐந்தும் சோமுவுக்கு மூன்றும் கொடுத்தால், உனக்கு என்ன வரும்?''

''அழுகை வரும் டீச்சர்.''


- ஆர்.விஜயாரவி, ஈரோடு

வண்ணத்துப் பூச்சிகளும் விட்டில் பூச்சிகளும்!

ஆழி

'சக்கரவர்த்தி' விட்டில்பூச்சிகள் ஒருவித வாசனையைப் பரப்புகின்றன. அந்த வாசனையின் மூலம் ஆணும் பெண்ணும் ஒன்றை ஒன்று சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு அப்பால் இருந்தே தம் உணர் கொம்புகளால் அறிந்து கொண்டுவிடுகின்றன!





'ஆந்தை விட்டில்' என்று ஓர் இனம் இருக்கிறது. இவற்றின் இறக்கைகளில் ஆந்தையின் கண்கள் மாதிரியே பெரிய பெரிய படங்கள் இருக்கின்றன. ஆபத்து என்று தெரிந்தால், அவை இறக்கைகளை விரித்துக் கொண்டு படுத்துவிடும்! பார்ப்பதற்கு ஆந்தை மாதிரி பயங்கரமாக இருக்கும்! அவற்றிற்கு நல்ல பாதுகாப்பு.


THE CARTOON CRAZE:
Think Before You Watch!
COVER STORY
A Different DRUM
New Serial
Now on the Stands
JUNE 2007
RS.10/-
GOKULAM
THE Magazine for Children

பொறாமைப் படுங்கள்!

குழந்தை ராமு பள்ளிக் கூடத்திலிருந்து ஓடி வந்து, "அப்பா! எனக்குப் பன்னிரண்டு மார்க்கு. சீனுவுக்குக் கோழி முட்டை!" என்று உற்சாகம் ததும்பச் சொல்கிறான். தனக்கு பன்னிரண்டு மார்க்கு கிடைத்ததைவிட சீனு கோழி முட்டை (பூஜ்யம்) வாங்கியதில்தான் அவனுக்கு அதிக சந்தோஷம். வீட்டில் சாதாரணமாயிருக்கும் பெண்கள் எங்கேயாவது வெளியில் போவதென்றால் ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப் புடைவையும் (இரவல் வாங்கியாவது) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக் கொண்டு கிளம்புவதேன்? மற்ற பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத்தான்.



கேவலம் மனிதர்களிடம் மட்டுமல்ல! இன்னும் உயரிய இலட்சியங்களுக்காகப் பிறந்த மிருகங்களிடத்தில்கூட இந்தக் குணம் காணப்படுகின்றது. ஒரு சமயம் பிராணிக் காட்சிச் சாலை ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு குரங்கும் ஒரு யானையும் மிகவும் சிநேகிதமாயிருந்தன. மற்ற குரங்குகள் யானையின் அருகில் போகத் துணிவதில்லை. ஆனால், அந்த ஒரு குரங்கு மட்டும் யானையின் மேலேறியும், இன்னும் பலவிதமாகவும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைப் பற்றி அந்த குரங்குக்கு இருந்த கர்வத்தைப் பார்த்து நான் மிகவும் வெட்கமடைந்தேன். ஏன் தெரியுமா? நம்மிடந்தான் இருப்பது துர்க்குணமென்றால், நமது மூதாதைகளான குரங்குக் குலத்தினிடமுமா இது காணப்பட வேண்டுமென்ற எண்ணம். அந்தப் பொல்லாத குரங்கு, யானையின் முதுகில் நின்று கொண்டு, மற்ற குரங்குகளைப் பார்த்துக் கெக்கிலி கொட்டிச் சிரித்தபோது, சாக்ஷாத் மனித அவதாரமே காணப்பட்டது.

இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்காகட்டும், மிருகங்களுக்காகட்டும் பிறருடைய பொறாமையைப் போல மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. பிறருடைய பொறாமையைக் கிளப்ப முடியாவிடில், அதைப்போல் துயரந் தருவதும் வேறு கிடையாது! ஆகவே, உங்களுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், மற்றவர்களைக் கொண்டு உங்கள் காரியங்களை முடித்துக் கொள்ள வேண்டுமானால், பொதுவாக உலகில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், 'பொறாமைப்படுங்கள்' என்று சொல்வேன்.

- கல்கி கட்டுரைகள் பகுதி 2லிருந்து...
மணிவாசகர் பதிப்பகம்

சேனல்



சன் டி.வி., விஜய் டி.வி.யை மிரட்டியதா?

''வம்பு தும்புகளில் ஈடுபடாமல் நல்ல நிகழ்ச்சிகளை வழங்கினால், நம்பர் ஒன் இடத்தைப் பிடிக்க முடியாது. ஆனால் சேனலை லாபகரமாக நடத்த முடியும்'' என்கிறார் ஸ்டார் விஜய் சேனலின் பொது மேலாளர் ரவிநாத்மேனன். அவரோடு பேசியதிலிருந்து...

விஜய் டி.வி., சீரியல்களில் அதிக கவனம் செலுத்துவதில்லையே... காரணம் என்ன?

''வழக்கமான நிகழ்ச்சிகளைத் தவிர வேறு ஏதாவது பார்க்க விரும்பும் ரசிகர்களும் கணிசமாக இருக்கிறார்கள். அவர்களை ஈர்க்கும்விதமாக நாங்கள் அளிக்கும் ரியாலிட்டி ஷோக்களுக்கு நல்ல ரெஸ்பான்ஸ்! உதாரணம் ஏர்டெல் சூப்பர் சிங்கர். ஆனால், சீரியல்கள் சூடுபிடிப்பதற்கு பல மாதங்களாகும். அதுவரை தாக்குப்பிடிப்பது சவாலான விஷயம். அப்படியிருந்தும் விஜய் டி.வி. சீரியல்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கத்தான் செய்கிறது. உதாரணம் 'கனாக் காணும் காலங்கள்'. தற்போது ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் 'எட்டரை மணிக்கு என்ன பார்க்கலாம்?' மூலமாக நேயர்களே என்ன பார்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறார்கள். இது சின்னத்திரை வரலாற்றிலேயே ஒரு புது முயற்சி!''

புதிய திரைப்படங்களை சன், ஜெயா டி.வி.க்களுடன் போட்டி போட்டு உங்களால் வாங்க முடியவில்லையே?

''பெரும் தொகை கொடுத்து புதிய படங்களை வாங்கும் நிலையில், குறிப்பாக வற்புறுத்தி வாங்கும் நிலையில் விஜய் டி.வி. இல்லை. விஜய், விக்ரம், அஜீத் படங்களை வாங்கித் திரையிட முடியாவிட்டாலும், 'சென்னை 600028' போன்ற சிறிய பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்ட நல்ல படங்களை



எங்களால் வாங்கி ஒளிபரப்ப முடியும்!''

உங்களின் 'கலக்கப்போவது யாரு' நிகழ்ச்சியின் ஐடியா முதல் தயாரிப்புக் குழு, நடுவர் வரை அப்படியே சன் டீ.வி. கடத்திக் கொண்டு போய்விட்டதே... இந்த விஷயத்தில் உங்களுக்கு சன் டீ.வி.யிலிருந்து மிரட்டல் வந்ததாமே?

''இந்தியாவில் 'இன்டலெக்சுவல் பிராப்பர்டி ரைட்ஸ்' என்று சொல்லப்படும் காப்புரிமைச் சட்டங்களில் பல ஓட்டைகள் இருக்கின்றன. எனவே, தன்னுடையதை காப்பி அடித்துவிட்டதாக யார் கோர்ட்டுக்குப் போனாலும், ஜெயிப்பது மிகவும் கஷ்டம். இதுபோன்ற செயல்கள் தவிர்க்க முடியாதவை. மற்றபடி எங்களுக்கு மிரட்டல் ஏதும் வரவில்லை.''

விஜய் நியூஸ் நின்றுபோனதற்கு உண்மையான காரணம் என்ன? மீண்டும் வர வாய்ப்பு உள்ளதா?

''இந்திய ஒளிபரப்பு விதிகளின்படி, அந்நிய நாட்டு கம்பெனிகள் நடத்தும் சேனல்களுக்கு நேரடி ஒளிபரப்பு அனுமதி கிடையாது. எங்கள் நிகழ்ச்சிகளின் டேப்புகள் மூன்று நாட்களுக்கு முன்பாகவே தயார் செய்யப்பட்டு, மும்பை மூலம் ஹாங்காங்குக்கு அனுப்பி அங்கிருந்து ஒளிபரப்பாகின்றன. எனவே நியூஸ் ஒளிபரப்பு சாத்தியமில்லை.''

எனில், ஸ்டார் நியூஸ் சேனல் எப்படி ஒளிபரப்பாகிறது?

''ஸ்டார் நியூஸ் சேனல், முழுக்க முழுக்க ஸ்டார் குழுமத்தின் சேனல் இல்லை. அதில் ஸ்டார் குழுமத்துக்கு 20 சதவிகிதம் ஷேர்தான் உள்ளது. ஆகவே, நியூஸ் ஒளிபரப்பாகிறது.''

டி.ஆர்.பி. ரேட்டிங்கில், சன் டீ.வி. தம்மை முதன்மை நிலையில் வைத்திருக்க சில தில்லுமுல்லுகளைச் செய்வதாக ஜெயா டீ.வி. குற்றம் சாட்டியுள்ளதே?

''சில நூறு மக்கள் என்ன பார்க்கிறார்கள் என்று பார்த்து, அதைப் பல கோடி மக்களின் விருப்பம் என்று சொல்வது பற்றி சர்ச்சை இருக்கிறது. என்றாலும், விஞ்ஞானபூர்வமான வேறு எந்த ரேட்டிங்கும் இல்லாத சூழ்நிலையில், விளம்பரதாரர்கள் இதைத்தான் நம்புகிறார்கள். ஆனால் ஒரு விஷயம்... பன்னாட்டு நிறுவனங்களும், பெரிய நிறுவனங்களும் டி.ஆர்.பி. ரேட்டிங் அடிப்படையில் முடிவு எடுத்தாலும், நாடெங்கும் உள்ள ஏராளமான வியாபாரிகள் டி.ஆர்.பி. ரேட்டிங்கைப் பற்றிக் கவலையேபடுவதில்லை. ஆனாலும், இதில் தில்லுமுல்லு செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

- கௌதம்ராம்





கபால காயந்துக் கவசம்!

(குறட்டூர் சிற்றரசர் சூரகேசி, இஞ்ஜின் சூட்டால் பாதிக்கப்பட்ட ஆட்டோ டிரைவரின் அவதியுடன், சிம்மாசனத்தில் ஒரு மாதிரியாக ஒருக்களித்து உட்கார்ந்து இருக்கிறார். மந்திரி மாரப்ப பூபதி பூனைபோல் வருகிறார்.)

மாரா: மன்னவரே, ஒரு ரகசியச் செய்தியைத் தங்கள் காதில் போட அனுமதி அளிக்க வேண்டும். சற்றுமுன் ஒற்றர்கள் மூலம் கிடைத்தது.

சூர: மாரப்ப பூபதி! மூலம் என்கிற வார்த்தையை உபயோகித்து என்னை எரிச்சல் ஊட்டுபவரது நாக்கை வெட்டி, வானில் வட்டமிடும் வல்லூறுகளுக்குப் போட்டு விடுவேன் என்று நாம் எச்சரித்தது நினைவில்லையா?

மாரா: மன்னிக்க வேண்டும் மன்னா. வழக்கம்போல நாள் நட்சத்திரம் சொல்லித் தங்களை எழுப்பும் அரண்மனை சோதிடரை, 'இன்றைய நட்சத்திரம் மூலம்' என்று கூற வேண்டாம் என்றும், நேற்று அரண்மனை கவி பாடிய கட்டளைக் கலித்துறைப் பாடலின் மூலம் எது என்கிற சர்ச்சையை சிறிது நாட்கள் ஒத்திப் போடலாம் என்றும், தங்களுடைய மெய்க்காப்பாளர் ஆதிமூலம் அவர்களைக் கட்டாய விடுப்பில் செல்லுங்கள் என்றும் உத்தரவுகள் போட்ட இந்த நாக்கு, தங்களை எரிச்சலூட்டும் அந்த உபாதையின் பெயரைத் தவறுதலாக உச்சரித்த குற்றத்தை மன்னித்து, மன்னரின் புகழ்பாடும் பணியை அந்த சதைத் துண்டு தொடர்ந்து செய்தல் வேண்டும் என்பதால்...

சூர: மந்திரியாரே நிறுத்தும். உங்கள் நீள - அகலப் பேச்சுக்கு இந்த உபாதையே பரவாயில்லை. ஒற்றர்கள் கூறிய செய்தியை என் வலது காதில் போடும். இடது காது இளையராணி கிசுகிசுக்க மட்டும் என்பதை மறக்க வேண்டாம்.

(மாரப்ப பூபதி கூறியதைக் கேட்டு சூரகேசி சிம்மாசனத்தில் துவண்டு விடுகிறார்)

சூர: *(ஈனஸ்வரத்தில்)* என்னது? மிரட்டூர் மன்னர் நம் நாட்டின் மேல் படையெடுக்க ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறாரா?

மாரா: ஆம் அரசே. அதில் பிறிதொரு விசேடமும் உள்ளது. அது என்னவென்றால்...

சூர: மாரப்ப பூபதி, முக்கிய அம்சங்களைத் தொகுத்து தலைப்புச் செய்தியாகச் சொல்லாமல், தவணை முறையில் பீடிகையுடன் சொல்பவரின் மாறுகால் மாறுகை வாங்கப்படும் என்கிற எச்சரிக்கை உங்களுக்கு நினைவில்லையா?

மாரா: மறுபடியும் மன்னிக்க வேண்டும் அரசே. மிரட்டூர் அரசர் தம்முடைய குதிரைப் படைகளை மட்டும் நடத்தி வந்து நம்முடன் போர் புரியப் போகிறாராம்.

சூர: என்னது, குதிரைப் படைகள் மட்டுமா, ஏன்?

மாரா: நமது ஒற்றர்களை அந்நாட்டுக் குதிரை லாயங்களில் ஊடுருவி, காரணத்தை அவற்றின் வாயிலிருந்தே அறியப் பணித்திருக்கிறேன் மன்னா.

• ஜே.எஸ்.ராகவன்



காட்சி - 2

(மிரட்டூர் இளவரசன் புரவிசேனன், தன் காதலி இளவரசி மச்சதேவியின் வெண்டைப் பிஞ்சு விரல்களுக்கு, இதமான அக்குபிரஷரை பிரயோகித்துக் கொண்டிருக்கிறான். அவர்களைச் சுமந்து வந்த இரண்டு வெண் புரவிகளும் டைமிங்குடன் கனைத்துத் தலைகளைத் திருப்பிக் கொள்கின்றன.)

புரவி: கண்ணே மச்சதேவி! உன்னிடம் ஒரு ரகசியம் சொல்லட்டுமா?

மச்ச: சொல்லுங்கள் இளவரசே. ஆனால், ஓர் எச்சரிக்கை. என்னை அடைந்த ரகசியம் எதுவும் கசியாது இருந்ததாகச் சரித்திரமே கிடையாது.

புரவி: கசிய வேண்டும் என்றுதான் சொல்கிறேன். அடுத்த பௌர்ணமி அன்று மிரட்டூரின் குதிரைப் படைகள் இந்த வெண்புரவியின் தலைமையில் குறட்டூரை முற்றுகை இடப் போகின்றன.

மச்ச: *(திகைத்து)* ஆ! அப்படியா?

இது என்ன கொடுமை? எங்கள் நாட்டைக் கைப்பற்ற திட்டம் தீட்டி இருக்கிறீர்களா, இது நியாயமா?

புரவி: அன்பே! போரிலும், காதலிலும் எல்லாம் நியாயமே.

மச்ச: பூடகமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள்.

புரவி: *(பெருமூச்சு விட்டு)* மறைக்காமல் சொல்லிவிடுகிறேன். மின்னல் போலப் பாயும் மிரட்டூர் குதிரைப் படை வீரர்கள் அடிக்கடி சாலைகளில் கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள். மிரட்டூர் தலைமை அறுவை சிகிச்சை வைத்தியர் கபாலராயரின் இரண சிகிச்சையால் மேலும் அவதியுறுகிறார்கள். ஆகவே...

மச்ச: ஆகவே?

புரவி: கீழே தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறிக்கும் முரட்டுக் குதிரைகளைப் பணியிலிருந்து நீக்கி, மேலே அமர்பவரைத் தூக்கி எறியாத அடங்கிய குதிரைகளை இலவசமாகக் கொள்முதல் செய்ய மந்திராலோசனை செய்தோம். அதன்படி...

மச்ச: அதன்படி?

புரவி: குரட்டூருக்குப் படை எடுத்து உங்கள் நாட்டின் குதிரைப் படையை வளைத்துப் போட்டால், மிரட்டூரின் குதிரை சக்தி அதிகரிக்கும் அல்லவா? அதனால்..

மச்ச: அதனால்?

புரவி: அடுத்த பௌர்ணமி அன்று உங்கள் ஊரில் தளதளவென குழம்புகள் கொதிக்கும் சத்தம் கேட்காது. டொடக், டொடக் என்கிற குளம்புகள் மிதிக்கும் சத்தம்தான் கேட்கும்.

மச்ச: *(கோபத்துடன்)* அப்படியா? பார்க்கலாமா?

புரவி: பார்க்கலாம்.

(இளவரசி விருட்டென்று குதிரையின் மேல் ஏறிச் செல்கிறாள். புரவிசேனன் மர்மமாகப் புன்னகை புரிகிறான்)

காட்சி - 3

(அம்சதூளிகா மஞ்சத்தில் மச்ச தேவி ஒயிலாகச் சாய்ந்து கொண்டிருக்கிறாள். கரிய பன்னீர் திராட்சைக் குலையுடன் புரவிசேனன் அவளை மையலுடன் நெருங்குகிறான்)

மச்ச: அன்பே! கதவைத் தாழிட்டீர்களா? இல்லாவிடில் உங்களைத் தேடிக் கொண்டு உங்கள் புரவி இங்கேயும் வந்துவிடும்.

புரவி: *(சிரித்து)* வராது. அது உன்னுடைய புரவியோடு ஒருங்கிணைந்து லாயத்தில் இளித்துக்கொண்டு இருக்கிறது. நம்

புளிப்பு!

சன் டி.வி.யில் 'மலர்கள்' ஸ்லாட்டில் புதிதாய் மலர்ந்திருக்கிறது 'மேகலா'. நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் காயத்ரி. 'என்னாச்சு, தமிழ்நாட்டை மறந்துட்டீங்களா?' என்றால் சிரிக்கிறார்.


"மெட்டி ஒலிக்குப் பிறகு எல்லாம் புளிச்சுப் போன கேரக்டராவே கிடைச்சது. வேணாம்னுட்டேன். ஆனா இந்த 'மேகலா' அப்படிப்பட்டவ இல்ல. பெண்களுக்கு இவ முன்னுதாரணம். உறவுகளுக்கு இவ உன்னதம். அதான் திரும்ப வந்துட்டேன். 'மெட்டி ஒலி' மாதிரியே இதுவும் அபார வெற்றி பெறும். பாஸ்கர் சக்தி வசனம், முத்துசெல்வன் கதை, விக்ரமாதித்தன் இயக்கம், சினி டைம் தயாரிப்புன்னு தொடரை வெற்றிப் பாதையில் நகர்த்த தேவையான எல்லா விஷயங்களும் இருக்கு."

'சரி, குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கு?'

"குதூகலமா இருக்கு. நீங்க வந்து எதுவும் குழப்பத்தை ஏற்படுத்த வேணாம்!"

- புஷ்பா

✱ காயத்ரி



இனிப்பு!

தமிழிலிருந்து ஹாலிவுட் போகத்தான் எல்லா நடிகர்களும் விரும்புவார்கள். ஆனால், ஹாலிவுட்டிலிருந்து தமிழுக்கு வர ஆசைப்பட்டு, மிகப் பிரயத்தனப்பட்டு வந்தேவிட்ட ஒரு நடிகரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆண்ட்ரூ. ஸ்பீல்பெர்க் போன்ற முக்கிய டைரக்டர்களின் படங்களில் பணியாற்றியவர்.

"என்னமோ தெரியவில்லை... தமிழ்ப் படங்களின் மீது எனக்குத் தீராத காதல். வேண்டிய மட்டும் ஹாலிவுட் படங்களில் நடித்தாகிவிட்டது. அதான் கிளம்பி தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டேன்" என்கிறார் ஆண்ட்ரூ. தமிழில் 'விளையாட்டு' என்கிற படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கும் ஆண்ட்ரூ, படப்பிடிப்பின் முதல் நாளன்று அனைவருக்கும் இனிப்புப் பரிமாறி தம் நடிப்புப் பயணத்தை ஆரம்பித்திருக்கிறார்.

– சுதா

* ஆண்ட்ரூ



கதை இனிது முடிந்தது பார்த்தாயா?

மச்ச: ஆம் இளவரசே! குரட்டூர் விஞ்ஞானி இரும்புரையாருக்குத்தான் நாம் நன்றி செலுத்த வேண்டும்.

புரவி: ஆம் அன்பே. குதிரையிலிருந்து கீழே விழுந்தால் மண்டை தேங்காயாக உடையாமல் இருக்க தலைப்பாகைகள் போதாது என்று உணர்ந்த அவர், குதிரைப் படை வீரர்களுக்காகத் தயாரித்த விசேடத் தலைக் கவசங்களை எங்கள் தந்தையார் பார்வையிட்டு பெரிதும் மகிழ்ந்தார். இரும்புரையாரின் மண்டைக்குள் இவ்வளவு மூளையா என்று வியந்து, மிரட்டூர் படைகளுக்குத் தேவையான தலைக் கவசங்களுக்கு ஆயிரக்கணக்கில் ஆர்டர் கொடுத்து விட்டார்.

மச்ச: அது மட்டுமா? அதைத் தயாரிக்கும் உரிமையை மந்திரி மாரப்ப பூபதி, அவருடைய மருமகன் பேரில் பெற்று செல்வத்தில் கொழிக்கப் போகிறார். படை என்றாலே நடுங்கும் என்னுடைய தந்தையார், சமயோஜிதத்துடன், இக் கவசங்களைக் கலால் வரி இல்லாமல் இறக்குமதி செய்ய வேண்டும் என்றால், இரண்டு நாடுகளும் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும், அதை உறுதி செய்யும் வகையில் நாம் இருவரும் இணைய வேண்டும் என்றும் நிபந்தனைகளைப் போட்டு இரண்டு நாடுகளையும் இணைத்து சீல் வைத்து விட்டார்.

புரவி: மச்சதேவி, ஒன்று தெரியுமா? நம் திருமண நாள் குறித்த மிரட்டூர் சோதிடர் தொலைநோக்கு சித்தர் மேலும் என்ன சொன்னார் தெரியுமா?

ஏழிசை: என்ன சொன்னார் என்று சொல்ல எனக்கு ஜோஸ்யமா தெரியும்?

புரவி: குறும்புக்காரி! சில நூற்றாண்டுகள் கழித்து விஞ்ஞானம் முன்னேறி, குதிரை இல்லாமலே குதிரைச் சக்தியுடன் ஓடப்போகும் இரண்டு சக்கர ஊர்தியில் அமர்ந்து செல்பவர்கள், மண்டை உடையாமல் உயிர் வாழ்ந்து, வாழ்க்கையை அனுபவிக்க ஹெல்மெட் என அறியப்போகும் நம் தலைக் கவசத்தைக் கட்டாயம் நாடுவார்கள் என்றும், வரும் தைக்குள் நமக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும் என்றும் ஆரூடம் சொல்லி இருக்கிறார்.

மச்ச: *(நாணத்துடன்)* இரட்டைப் பிள்ளைகளா? அப்படி என்றால் அவைகள் இரண்டும் தலைக் கவசங்களுடன் பிறக்குமா?

புரவி: ஹும்ஹும்... இரண்டு கிரீடங்களுடன் பிறக்கும். ஒன்று குரட்டூருடையது. பிறிதொன்று மிரட்டூருடையது.!

(இருவரும் சிரிக்கிறார்கள்) ○

அருள்வாக்கு

புத்தியைக் கலக்கும் கட்சிகள்!



இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ், 'இந்திய மக்களுக்குப் பொய்யே சொல்லத் தெரியாது; தெருவில் போட்டுக் கிடக்கிற பணத்தைக்கூட எடுத்துச் செல்ல மாட்டார்கள்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்.

அன்றைக்கு அவர்கள் அவ்வளவு உயர்வாக இருந்ததற்குக் காரணம் என்ன? இன்று நாம் இவ்வளவு தாழ்ந்துபோய் விட்டதற்குக் காரணம் என்ன? அந்தந்த காலத்தின் சூழ்நிலையே அந்தந்த மனப்பான்மைக்கும் காரணமாக இருக்கிறது. பழங்காலத்தில் பொது ஜனங்கள் எல்லாரும் கோயிலுக்குப் போனார்கள். அங்கே அவர்களுக்கு நல்வழி கூறுவதற்காக மகாபாரதம் முதலிய ஸத்கதைகள் நடைபெற்றன. இதற்காகவே ராஜாங்கத்தில் மானியம் தரப்பட்டு வந்தது. நாடகம், கூத்து எல்லாம்கூட தெய்வ சம்பந்தமாகவே இருந்தன. தங்கள் தொழிலைச் செய்வது, ஆலய தரிசனம், ஸத்கதை சிரவணம் இவற்றுக்கே மக்களின் பொழுது சரியாக இருந்தது. இதனால் யோக்கியர்களாகவே இருந்தார்கள். இப்போது ஜனங்களைக் கவர்ந்திழுப்பதற்கு என்ன என்னவோ ஆபத்துகள் எல்லாம் வந்து விட்டன. தர்மத்துக்கு விரோதமான படக் காட்சிகள், கதைப் புத்தகங்கள் எல்லாம் அதிகமாகிவிட்டன. ஜனங்கள் இதற்கிடையில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது பலவிதமான அரசியல் கட்சிகள் வேறு அவர்கள் புத்தியைக் கலக்கிக் கொண்டிருக்கின்றன. எங்கேயும் சஞ்சலம், அதிருப்தி, யோக்கியதைக் குறைவு, லஞ்சம் ஆகியவை அதிகரித்து விட்டன.

இவை நிவர்த்தியாக வழி ஒன்றுதான்: பழைய காலத்தைப் போல கோயில்களைச் சமூக வாழ்வின் மத்திய ஸ்தானமாக்கி விட வேண்டும்; அன்றுபோல் இப்போதும் தெய்வ சம்பந்தமான பழம் கலைகளை வளர்க்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

'நான் கடவுள்' படத்தையும் அதன் கசப்பான அனுபவங்களையும் கை கழுவிவிட்டு, அதன் வடு துளிகூட இல்லாமல் 'வாழ்த்துகள்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் பாவனா. என்ன நடந்தது என்று மறைக்காமல் சொல்ல ஆரம்பித்தார்.

''பாலா படம் என்பதால் கதைகூட கேட்காமல் 'நான் கடவுள்' படத்தை ஒப்புக்கொண்டேன். ஆனால் நான் கொடுத்த தேதிகளை அவர்கள் பயன் படுத்திக் கொள்ளவேயில்லை. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் என்னை சும் மாவே உட்கார வைத்து நஷ்டம் ஏற் படுத்தினார்கள். ஒரு படத்துக்காக நான் ஒரு வருடம் காத்திருக்க முடியுமா என்ன? கதைகள் கேட்டு நான் ஓ.கே செய்த மற்ற படங்களுக்கு இதனால் சிக்கல் ஏற்பட்டது. பாலா சாருக் கும் யூனிட்டுக்கும் அவர்கள் பக்கம் உள்ள தவறுகள் தெரிந்த தால், நான் விலகியதை யாரும் கேள்வி கேட்கவில்லை. ஒரு ஹீரோ வேண்டுமானால் ஒரு படத்துக்காக எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்க லாம். அதற்கேற்ற சம்பளமும் கதாபாத்திரமும் அவர்களுக்கு வழங்கப்படுவதால் காத்திருத் தலுக்கு ஒரு நியாயம் இருக் கிறது. ஆனால் நான் வளர்ந்து வரும் நடிகை. ஒரு படத்தை நம்பி இதர வாய்ப்புகளை உதற முடியுமா! ஏற்கெனவே கோலி வுட்டில் ஏராளமான புதிய வரவுகள்! போட்டிகளுக்கு நான் ஈடுகொடுக்க வேண்டாமா'' என்கிற பாவனா சமீபமாக 'வாழ்த்துகள்', 'ராமேஸ் வரம்' படங்களில் நடித்து வருகிறார்.

''கிளாமர் கிடை யாது என்கிற என் கொள்கையையும் மீறி தமிழில் என்னை



“நாள் முழுக்க அழகை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் வாழ்க்கை தித்திக்காது!”



நான் கடவுளால் நஷ்டங்கள்தான்!

அரவணைத்துக் கொண்டார்கள். கதாநாயகிகள் கிளாமராக நடித்தால் மட்டும்தான் நாங்கள் படம் பார்ப்போம் என்று எந்த ரசிகரும் சொல்வது இல்லை. வெற்றி அடைந்த பல படங்களில் கதாநாயகிகளைக் கண்ணியமாகவே காண்பித்திருக்கிறார்கள். கில்லி, காதல், சித்திரம் பேசுதடி என்று எவ்வளவோ உதாரணங்கள் உண்டு. அசின் என்ன கிளாமரை நம்பியா நடிக்கிறார்! மிகப்பெரிய நடிகர்களுடன் எல்லாம் அவர் நடிக்கவில்லை!'' என்று கேட்கும் பாவனாவுக்கு'' அண்மையில் வெளியான கூடல் நகர் படமும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.

''கூடல் நகர் நல்ல படம்தான். ஆனாலும் மணிமேகலை என்கிற எனது கதாபாத்திரத்தின் காதலை இயக்குநர் இன்னமும் ஆழமாகக் காண்பித்திருக்க வேண்டும். மேலோட்டமான காட்சிகளால் அந்தக் கதாபாத்திரம் மக்களிடம் போய் சேரவேயில்லை. என் வருத்தத்தை இயக்குநரிடம் உடனே சொல்லி விட்டேன்'' என்கிற பாவனா அடுத்து காதல், திருமணம் பற்றி வெளிப்படையாகப் பேசினார்.

''அழகான வாலிபர் ஒருவருக்காக மட்டும் என் வாழ்க்கையை அர்ப்பணிக்க மாட்டேன். சுய சிந்தனை உள்ளவர் மட்டுமே என் கணவராகவோ, காதலராகவோ ஆக முடியும். நான் முழுக்க அழகை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தால் வாழ்க்கை தித்திக்காது!'' என்கிற பாவனா சமீபத்தில் ஜெயம் ரவியுடனான கிசுகிசுவில் வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறார். ''சும்மா அதெல்லாம். ஜெயம் ரவி என்னுடைய நெருங்கிய நண்பர். தீபாவளி படப்பிடிப்பின்போதுதான் நாங்கள் நல்ல நண்பர்களாக ஆனோம். அந்த யூனிட்டே ஒரு குடும்பம்போலத்தான் என்னிடம் பழகியது. படம் பார்த்தவர்கள் எங்களுடைய ஜோடியில் ஒரு ஈர்ப்பு உள்ளதாகச் சொல்கிறார்கள். அதுவரைக்கும் சந்தோஷம்.''

– ச.ந.கண்ணன்

படம் : ஆண்டனி ஸ்ரீதர்

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி 15ல் பங்கேற்று கைக்குழந்தையைப் பாதுகாக்கும் வழிமுறைகளை எழுதி, முதல் பரிசாக டாலர் பெறும் வாசகி: விஜயலட்சுமி நடராஜன், மும்பை. அவரது குறிப்பு:



குழந்தையின் தலை சரியாக நிற்கும் வரை கழுத்தின் பின்புறம் கையை அணைவாகக் கொடுத்து குழந்தையைத் தூக்க வேண்டும்.

தாய்ப்பால் கிடைக்காத பட்சத்தில் தண்ணீர் சேர்த்து நன்றாகக் காய்ச்சி ஆறிய பசும்பால் கொடுப்பது நல்லது.

பால் கொடுத்தவுடன் சிறிது நேரம் தோளில் சார்த்தி முதுகைத் தடவி ஏப்பம் விடச் செய்வது முக்கியம்.

ஜாதிக்காய், மாசிக்காய், சுக்கு, சித் தரத்தை, வசம்பு ஆகியவற்றை கொதிக்கும் சாதத்தில் போட்டு வேகவைத்து, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் குழந்தையைக் குளிப்பாட்டிய பின் இலேசாக இவற்றைத் தாய்ப்பாலில் உரைத்துப் புகட்டலாம். ஜீரணம், தூக்கம், பசியுணர்வு சரியாக இருக்கும்.

குழந்தை சிறுநீர், மலம் கழித்த பின் ஈரத் துணியால் நன்றாக துடைத்து சிறிது நேரம் காற்றாட விட வேண்டும்.

பருத்தி ஆடைகளை அணிவிப்பது அவசியம். லேஸ்கள், எம்ப்ராய்டரி ஆகியவை குழந்தையின் சருமத்தில் உறுத்தாத வகையில் அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பட்டன்கள், ஜிப்புகளைத் தவிர்த்து, துணியாலான நாடாக்களைப் பயன்படுத்த வேண்டும்.

வெளியிலிருந்து வீட்டுக்குள் யார் வந்தாலும் நன்றாகக் கை கால்களைக் கழுவிய பிறகே குழந்தையைத் தூக்க வேண்டும்.

ரூபாய் நோட்டு பல பேர் கைகள் மாறி வருவதால் பலவிதத் தொற்று நோய்கள் வர வாய்ப்பு உண்டு. அதனால், குழந்தையின் கையில் ரூபாய் கொடுக்கப்படக் கூடாது.

குழந்தையைச் சற்று நேரம் விளையாட விட வேண்டும். தூங்க வைக்கும்போது அடியில் மெத்தென்று விரிப்பைப் போட்டு அதன் மேல் தூய வெள்ளை அல்லது லைட் கலர் துணியை விரித்து, குழந்தையைப் படுக்க வைக்க வேண்டும். பூச்சி, எறும்பு போன்றவை இருந்தால் தெரிந்துவிடும்.

உடையக்கூடிய பொம்மைகள்,

தேவமருந்து பரிசுப்போட்டி முடிவுகள்...

கூரான முனை உடைய பொம்மைகள், சிறுசிறு பகுதிகளாகக் கழற்றக்கூடிய பாட்டரியில் இயங்கும் பொம்மைகளைக் கொடுக்கக் கூடாது.

மூன்று மாதங்களான பிறகு குழந்தை அருகிலிருக்கும் துணிகளை இழுத்து முகத்தில் மூடிக்கொண்டு மூச்சுத் திணறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பெரிய பிளாஸ்டிக் கவர்களையும் குழந்தைக்கு அருகில் வைக்கக்கூடாது.

குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டே ஒரு கையால் சூடான டிஃபன், காபி, பால், டீ அருந்தக் கூடாது.

குழந்தையின் மிக அருகில் குனிந்து கொஞ்சினால் கட்டாயம் அதற்கு ஜலதோஷம் தொற்றிக்கொள்ளும். வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுபவர்களும் குழந்தைக்கு முத்தம் கொடுத்துக் கொஞ்சக் கூடாது.

குழந்தையைக் குளிப்பாட்டும்போது மிதமான சூட்டில் தண்ணீர் கலந்து, இடக் கையால் தண்ணீர் ஊற்றிக் கொண்டே வலக் கையால் அதை ஏந்தியவாறு, நிதானமாகக் குளிப்பாட்ட வேண்டும். குழந்தையின் கண்ணில் எண்ணெய்விடக் கூடாது. எண்ணெயில் கலப்படம் இருந்து கண்ணை பாதிக்க வாய்ப்பு உண்டு. குழந்தைக்கு லூஸான காட்டன் உடைகளையே அணிவிக்க வேண்டும்.

குழந்தை கண்ணில் எண்ணெய்விடக் கூடாது!

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகம் புத்தகத்தைப் பெறும் வாசகி: சுலோச்சனா ரமணி, மயிலாப்பூர். அவரது குறிப்பு:

குழந்தை பிறந்த சில நாட்கள் வரை தாயும் பலஹீனமாய் இருப்பதால், குழந்தையைப் பக்கத்தில் படுக்க வைத்து நன்றாக அரவணைத்து, பாலைக் குடிக்கச் செய்யலாம். பின்னர், குழந்தையை மடியில் படுக்க வைத்து, அதன் பின் தலையை இடக்கையால் சற்று ஏந்தினாற் போல் வைத்துக் கொண்டு குடிக்கச் செய்யலாம். அது பசியின் வேகத்தில் அரக்க பரக்கக் குடித்தால், பால் கொடுப்பதை நிறுத்தி, குழந்தையின் மார்பினை இலேசாகச் சிறிது நேரம் தடவிவிடலாம்.

கூடிய வரை தூளியைத் தவிர்த்தால் நல்லது. சரியான காற்று வசதியும் இருக்காது. தாராளமாகப் படுக்கவும் முடியாது. குழந்தையை மிருதுவான மெத்தையில் படுக்க வைத்தால் நன்றாகக் கை, கால்களை விரித்து வைத்து மல்லாந்து படுத்துத் தூங்கும். இப்படிப் படுக்க வைப்பதால், மார்புக் கூடு நன்றாக விரிவடைந்து, சுகமாக சுவாசிக்க முடியும்.

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி - 23ல் பங்கேற்று, குடும்ப உறவுகள் மேம்படுவதற்குக் கையாள வேண்டிய வழிமுறைகளை எழுதி, முதல் பரிசாக டாலர் பெறும் வாசகி: கீதா சந்திரசேகரன்,



"கடவுள் எதிரே நின்று சுலோகங்கள் சொன்னால் கோபம் குறையும்"

சென்னை - 28. அவரது குறிப்பு:

கூட்டுக் குடும்பத்திலிருந்து தனிக் குடித்தனம் சென்றவர்கள் தங்கள் தாய் தந்தையரை தவறாமல் பார்த்துவிட்டு வர வேண்டும். பண்டிகைகளை அனைவரும் குடும்பத்தோடு கொண்டாட வேண்டும். சுற்றுலா மற்றும் தெய்வ வழிபாடு போன்றவற்றுக்குத் தாய், தந்தை மற்றும் அண்ணன், தம்பி என்று அனைவரும் குடும்பத்தோடு சென்று வர வேண்டும். பெற்றோருக்கு உடல் நலம் சரியில்லாதபோது அருகில் இருந்து கவனிப்பது பிள்ளைகளின் தலையாய கடமையாகும். மனைவியின் குடும்பத்திடமும் இப்படி அன்பு செலுத்த வேண்டும். இதனால் கணவன், மனைவி இருவரின் ஒற்றுமை மேலோங்கும்.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹா தேவனின் 'தேவமருந்து முதல் பாகம்' புத்தகத்தைப் பெறும் வாசகி : சிவ ஜனனி, ஹோசூர். அவரது குறிப்பு:

அண்ணன் தம்பியாகட்டும், அப்பா பிள்ளையாகட்டும், கணவன் மனைவியாகட்டும், மாமியார் மருமகளாகட்டும், யாராயிருந்தாலும் எந்த வேலை சொன்னாலும் 'சரி' சொல்லுங்கள். பிறகு முடியவில்லையா? 'சாரி' சொல்லுங்கள். சரி, சாரி இரண்டும்தான் ஐந்தெழுத்து மந்திரம்!

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி 24ல் பங்கு பெற்று, கோபத்தைக் குறைப் பதற்கான எளிய வழிமுறைகளை எழுதி, முதல் பரிசாக தன்வந்திரி டாலர் பெறும் வாசகர்: எஸ்.ஏ.கேசவன், இனாம் மணியாச்சி. அவரது குறிப்பு:

கோபம் பீறிடும்போது குளிர்ந்த நீரை வயிறு நிரம்புமளவு அருந்த வேண்டும்.

திருவள்ளுவர் கூறிய 'வெகுளாமை' அதிகாரப்பாக்களின் பொருளைப் படித்திட வேண்டும்.

'ஆறுவது சினம்' என்ற அவ்வைப் பாட்டியின் அறிவுரையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கோபுர தரிசனத்தை மானசீகமாகக் காண்பதன் மூலம் கோபத்தைத் தாழ்த்தலாம்.

இரண்டாவது பரிசாக டாக்டர் மஹா தேவனின் 'தேவமருந்து முதல் பாகம்' புத்தகத்தைப் பெறும் வாசகி: டி.சாந்தி, திருவாரூர். அவரது குறிப்பு:

எது என்னைக் கோபமூட்டினாலும் ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டு மௌனமாக இருந்து விடுவேன். அப்படியும் கோபம் குறையாவிட்டால், பூஜை அறையில் அல்லது நேர் எதிரில் அமைதியாக அமர்ந்து அல்லது நின்று கடவுள் சுலோகங்களைச் சொல்வேன். அதன் பிறகு கோபம் குறைந்து சாந்தமாகி விடுவேன்.

(முற்றும்)

நமது தேசத்தில் எத்தனையோ ரிஷிகள், சாதுக்கள் தோன்றியிருந்தாலும் மனித வாழ்க்கையின் அளவு நூறு ஆண்டுகள் தான் (ஸதமானம் பவதி ஸதாயு: புருஷ: ஆயுஷ்தே வேந்த்ரிய ப்ரதிதிஷ்டதி) என்று மந்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சீன தேச கலாசாரமே வேறு. அங்குள்ள சாதுக்கள் இன்றைக்கும் கூட சர்வ சாதாரணமாக 200-400 ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றனர்.

நமது சித்தா, ஆயுர்வேத வைத்திய முறைகளில் இன்னின்ன வகை விஷப் பாம்பு கடித்தால் இன்னின்ன குறிகள் தோன்றும்; அதற்கு இன்னின்ன பச்சிலை கஷாயம் கொடுக்க வேண்டும் என சித்தர் பாடல்களே இருக்கின்றன. பச்சிலை கஷாயம் செய்து கொடுப்பதற்குள் கடிபட்டவன் பரலோகம் போய் விடுவான். ஆனால் எமது 3-தினம் நேர்முக வகுப்பில் **"சீன தேசத்து அக்யூபிரஷர்"** முறை கற்ற மாணவர்கள். எந்த வித விஷபாம்பு தீண்டினாலும் பாதிக்கப்பட்ட நபர் காலில் ஓர் இடத்தில் மூன்று நிமிடம் அழுத்திப் பிடித்து குணமாக்கி விடுகின்றனர்.

ஊசி, மருந்து இல்லாத இந்த வைத்திய முறையில் விபத்து, விஷக்கடி, நெருப்புக் காயம், மின் அதிர்ச்சி போன்ற உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் (எலும்பு முறிவு தவிர) டாக்டரிடம் செல்வதற்குள்ளாகவே அல்லது ஆம்புலன்ஸ் வருவதற்குள் மூன்றே நிமிடத்தில் பூரண குணம் கிடைக்கின்றது. அடிபட்டு இரத்தப்பெருக்கு ஏற்பட்டால் கட்டு போடாமலேயே இரத்தம் போவதை நிறுத்தலாம்.

1985-ம் ஆண்டு வாக்கில் பாண்டிச்சேரி மாதா கோயில் ஆண்டு விழாவின் போது, ஒரு சிறுவன் மின்சாரம் தாக்கி மூச்சு பேச்சற்ற நிலையில், (விழாவிற்கு வந்திருந்த இரு M.B.B.S. டாக்டர்கள் அவனைப் பரிசோதித்து கை விரித்து விட்ட நேரத்தில்) எம்மிடம் 3-நாள் அக்யூபிரஷர் கற்ற Sister Irene Chiramel (St. Joseph's Dispensary, Cheyyur Village, Chengleput Dist.) என்பவர் அவனுக்கு மூன்று நிமிட அக்யூபிரஷர் வைத்தியம் செய்த உடனேயே நாடித்துடிப்பு சீராகி, மூச்சு விட ஆரம்பித்து எழுந்து உட்கார்ந்தான்.

நாட்பட்ட தலைவலி (migraine & headache) சைனஸ், அலர்ஜி, சில வகை ஆஸ்த்மா, குடிப்பழக்கம், Spondylitis, lumbago, low back pain, sciatica, sleeplessness, uterus & menses complaints, disability of joints after accidents போன்ற (எக்ஸ்-ரே/ஸ்கேனில் எல்லாம் 'normal' என்பதால்) "Clinically all right" என்று டாக்டர்களால் சொல்லப்பட்ட கேசுகளில் எமது 3-நாள் நேர்முக வகுப்பில் கற்ற மாணவர்கள் மூன்றே நிமிடத்தில் பூரண மற்றும் நிரந்தர குணம் செய்து ஓய்வு நேரத்தில் மாதம் இருபதாயிரத்திற்கு மேல் சம்பாதித்து வருகின்றனர்.

3-நாள் நேர்முக வகுப்பு சென்னையில் 21-7-2007 முதல் 23-7-2007 வரை கோடம்பாக்கம் லிபர்ட்டி சினிமா தியேட்டர் அருகில் உள்ள நயாகரா ஹோட்டலில் (3 p.m. to 6 p.m.) நடைபெறும். கட்டணம்: Rs.6,500. **வகுப்பில் சேர நேரிலோ, தொலைபேசியிலோ எம்மை அணுகாமல்** முழு கட்டணம் ரூ.6,500 வங்கி டிராப்ட் எடுத்து ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி பெயர் பதிவு செய்து கொள்ளவும். தயவு செய்து விசாரணைகளை தவிர்க்கவும். நேரில் வரவேண்டாம்.

Dr. V. கிருஷ்ணமூர்த்தி, Old No. 21, குப்பையா தெரு, சென்னை-33.

எமது 3-தின வகுப்பில் கற்ற பின்பு நீங்கள் வைத்தியம் செய்த ஒவ்வொரு பத்து தலைவலி, சைனஸ், spondylitis கேசுகளில் ஏழு கேசுகளிலாவது முழு குணம் கிடைக்கா விட்டால் நேர்முக வகுப்பிற்கு செலுத்திய பணம் பூராவும் திரும்ப பெறலாம் என்ற உத்தரவாதம் கொடுக்கிறோம்.

Advt

இங்கிலாந்து மலர் மருந்துகள்



என்றால் என்ன? என்று எம்மை நேரில் அல்லது தொலைபேசி மூலம் கேட்காமல், ரூ.750 M.O. செய்து எமது 17 பாகங்கள் அடங்கிய தமிழ் புத்தகத்தை தபாலில் பெற்று படித்து புரிந்துகொள்ளவும். புத்தகத்தை படித்து திருப்தியில்லை எனில் திருப்பிக் கொடுத்து முழு பணம் திரும்ப பெறலாம்.

மேற்கண்ட புத்தகத்தை படித்து மலர் மருந்து உபயோகிப்பவர்களின் அனுபவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கீழே தடித்த எழுத்துக்களில் (bold letters) கொடுக்கப்பட்டுள்ளவை மலர் மருந்துகளின் பெயர்களாகும். எல்லாம் ஒரே விலை தான். ஒவ்வொன்றும் 150 மாத்திரைகள் அடங்கிய 5ml புட்டி விலை ரூ.120=00. எவ்வயதினராயினும் வேளைக்கு ஒரு மாத்திரை சுவைத்து சாப்பிடவும். பத்தியம், பக்க விளைவுகள் இல்லை. எப்போது வேண்டுமானாலும் (சாப்பாட்டிற்கு முன்பு/பின்பு என்ற நியதி கிடையாது) சாப்பிடலாம்.

1. தீபாவளி, பொங்கல் போன்ற பெரிய பண்டிகைகளுக்கு 2-3 தினம் முன்பும், பின்பும் தினம் ஒரு வேளை (ஒரு மாத்திரை) **வாட்டர் வயலட்** என்ற மலர் மருந்து சாப்பிட்டு வர, பண்டிகைக்கு செலவழித்த பணம் ஏதோ ஒரு விதத்தில் விரைவில் திரும்ப வரும்.

தவிர, ஆசுபத்திரியில் அட்மிட் ஆகி இருக்கும் நாட்களில் இம்மருந்து வாட்டர் வயலட் தினம் ஒரு மாத்திரை சாப்பிட்டு வர, ஆசுபத்திரிக்கு செலவழித்த பணம் விரைவில் (ஏதோ ஒரு விதத்தில், வாசகர் நினைக்கும் விதத்தில் அல்ல) திரும்ப வரும்.

2. ஃபைனான்ஸ் கம்பெனியில் போட்டு ஏமாந்த பணம் திரும்ப கிடைக்க (நம்பிக்கை இழந்த நிலை, written off debts) தினம் ஒருவேளை **கார்ஸ்** என்ற மலர் மருந்து சாப்பிட்டுவர 42 நாட்களில் (ஏதோ ஒருவிதத்தில்) பணம் வட்டியுடன் திரும்ப கிடைத்தது பல வாசகர்களின் அனுபவம். தொலை தூர ரயில் பயணத்தில் வெயிட்டிங் லிஸ்ட் எனில் கார்ஸ் ஒரேயொரு டோஸ் சாப்பிட எப்படியோ பெர்த் கிடைத்துவிடும். 'கார்ஸ்' சாப்பிட்டு டிக்கெட், மற்றும் பெர்த்க்கு பணம் கொடுக்காமல் ரயிலில் பயணம் செய்யலாம் என்று நாம் இங்கு எழுதவில்லை.

3. விபத்து, விஷக்கடி, நெருப்புக்காயம், மின் அதிர்ச்சி போன்ற உயிருக்கு ஆபத்தான நிலைமையில் (எலும்பு முறிவு தவிர) ஒரேயொரு மாத்திரை **ரெஸ்க்யூ ரெமடி** என்ற மலர் மருந்த பாதிக்கப்பட்ட நபர் வாயில் போட

(a) இரத்தப் பெருக்கு ஒரே நிமிடத்தில் நிற்கிறது. காயம், எவ்வளவு ஆழமாக, நீளமாக இருந்தாலும் கட்டு போடாமலேயே இரத்தம் நின்று விடுகிறது.

(b) வலி, உபாதை குறைந்து, மயக்க நிலையில் உள்ளவர் கூட கண் விழித்து எழுந்து நடமாட ஆரம்பித்து வீட்டிற்கு சென்று விடுகிறார்.

(c) விஷக்கடியில் விஷம் முறிந்து விடுகிறது.

(d) தீக்காயங்களில் எரிச்சல் அடங்குவதோடு மறு தினம் காயம் பட்ட சுவடே தெரியாமல் ஆறி விடுகிறது. (Wounds heal without leaving a scar with one single dose of **Rescue Remedy**).

4. தீவிர சிகிச்சைப் பிரிவில் (I. C. Unit) உள்ள நோயாளியின் நெருங்கிய உறவினர்கள் எல்லோரும் **ரெட் செஸ்ட்நட், ராக் ரோஸ், கார்ஸ், ஸ்வீட் செஸ்ட்நட்** ஆகிய நான்கு மருந்துகளையும் சேர்த்து தினம் மூன்று வேளை சாப்பிட, டாக்டர்களே அதிசயிக்கும் வண்ணம் நோயாளியின் உடலில் முன்னேற்றம் ஏற்பட்டு அடுத்த இரண்டு நாட்களில் வார்டுக்கு மாற்றப்பட்டு, அதற்கடுத்த இரண்டு நாட்களில் வீட்டிற்கு வந்து விடுவார்.

5. அரசு அலுவலகங்களில் இலஞ்சம் கொடுக்காமல் நமது வேலை நடக்க அங்கு செல்வதற்கு 1-3 மணி நேரத்திற்கு முன்பு ஒரேயொரு தடவை **கார்ஸ், ராக்வாட்டர், சிக்கரி** ஆகிய மூன்று மருந்துகளையும் சாப்பிட்டுச் செல்.

6. திருமண வயதிற்கு வந்த பெண்ணின் பெற்றோர்கள் **ஸ்வீட் செஸ்ட்நட்** மற்றும் **வால்நட்** தினம் ஒரு தடவை சாப்பிட்டு வர, சரியான வரன் வீடு தேடி வருவதோடு கல்யாண செலவிற்கு பணமும் வரும்.

7. **வால்நட்** மற்றும் **ஸ்க்ளெரான்த்தஸ்** சாப்பிட்டு வர, ஓரிரு மாதங்களில் போதை மருந்து அடிமை, குடிப்பழக்கம் நின்று விடும். ரூ. 750 M.O. செய்ய வேண்டிய முகவரி:

டாக்டர் V. கிருஷ்ணமூர்த்தி,

பழைய எண் 21, குப்பையா செட்டி தெரு,

மேற்கு மாம்பலம், சென்னை-33 வி.பி.பி. இல்லை

— தயவுசெய்து நேரில் வரவேண்டாம் —

Homoeopathic Medicine: Myth & Reality

MORE THAN 70-90 PER CENT OF CAESAREAN SURGERIES CAN BE DONE AWAY WITH THREE DOSES OF HOMOEOPATHIC MEDICINE.

The foetus (baby in the uterus of the pregnant mother) 1-3 weeks prior to delivery date (so long remaining in upright position) turns upside down, and the uterus descends down in such a way that the head of the foetus remains fixed in the pelvic floor of the mother. 1-3 weeks later, at the delivery time the mouth of the uterus dilates and the child comes out. Even after the full term of ten months if the child does not turn upside down, or

(a) turns half-way only and lies crosswise,

or

(b) having turned upside down, does not descend further down

the attending lady doctor would say that head is still floating or is in incorrect position and so opens the abdomen to take out the child. This is called caesarean surgery. 70 to 90 per cent of caesarean surgeries at the present day are conducted solely for this reason.

At this time if the patient takes three doses of the homoeopathic medicine *Pulsatilla-1000*, every 4-8 hours, in the next twenty-four hours it would be a normal and safe delivery.

In the reference book *The Accoucheur's Emergency Manual* by Dr. W. A. Yingling, M.D., of U.S.A. we find the following:

"Abnormal presentations may be righted if (Pulsatilla is) given before the membranes are ruptured or the presenting parts are firmly engaged..."



Dr. W. A. Yingling, M.D.

In a Maternity Nursing Home in Palani Road (Dharapuram, Tamilnadu) by using *Pulsatilla* and other remedies there has been not even a single caesarean for the past several years and the doctor in-charge has put up a board "Caesarean-free Clinic." The Dharapuram Lions Club has given her a certificate testifying this.



Dr. Calvin B. Knerr, M.D.

(2) If the babe in the uterus stops growing, allopathy has no cure and they abort the child. But if one single dose of the homoeopathic medicine *Secale Cornutum-10M* is given, the babe starts growing. (See *Calvin B. Knerr's Repertory*, p. 698. Pregnancy, foetus, development arrested. *Sec.*)

(3) After caesarean (or for that matter after any abdominal surgery) there would be pain in the sutured place lasting for years. But one single dose of the homoeo medicine *Staphysagria-1M*, completely cures in twenty-four hours all post-operative abdominal discomforts.

(4) A fair percentage of newly married women are prone to urinary infection and they spend in thousands. Again, the same homoeo medicine *Staphysagria 1000*, in one single dose, would cure the condition in just a day's time.



★ லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி

எது. இத்தனைக்கும் இன்றைய தேதிக்கு முதல் நூறு ஆண் டென்னிஸ் வீரர்கள் பட்டியலில் ஒரு இந்திய வீரர் பெயரும் கிடையாது. பெண்களில் சானியாவை விட்டால் வேறு நாதி கிடையாது.

ஹாக்கி போல டென்னிஸிலும் பழங்கதை பேசுவதற்கு எவ்வளவோ இருக்கிறது. 1960-களில் டென்னிஸில் தொட்டதெல்லாம் பொன்னும் வைரங்களும் ஆயின. இரண்டு விம்பிள்டன் போட்டிகளில் ராமநாதகிருஷ்ணன் செமி ஃபைனல் வரைக்கும் சென்று திரும்பினார். 1966-ஆம் வருடம் டேவிஸ் கோப்பை போட்டியில் இறுதிவரை சென்றது இந்திய அணி. எழுபதுகள் ஆரம்பித்த பிறகு சிம்மாசனம் அமிர்தராஜ் சகோதரர்கள் வசம் சென்றது. எண்பதுகளில் ரமேஷ்கிருஷ்ணன் தட்டுத் தடுமாறி பெயர் சொல்லும் அளவுக்குச் சில வெற்றிகளைக் குவித்தார். ராமநாதன், அமிர்தராஜ் நிழலில் வாழ்ந்து வந்த இந்திய டென்னிஸ், எண்பதுகளிலேயே தடம்புரள ஆரம்பித்துவிட்டது. அன்று சீர்குலைந்த பெருமை நீண்ட நாட்களாகச் சீர் செய்யப்படவேயில்லை.

தொண்ணூறுகளில் இந்திய டென்னிஸில் இரு மின்மினிப் பூச்சிகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. அவை இந்திய டென்னிஸை அடுத்த பத்து வருடங்களுக்குக் கட்டிக் காத்த நட்சத்திரங்கள் என்று பிற்பாடு தெரிய வந்தது. லியாண்டர் பெயஸ், பூபதி இருவரும் ஒரே சமயத்தில் தோன்றி வரலாற்றைத் திருத்தி எழுதினார்கள். குறிப்பாக, லியாண்டர் பயஸ் எஃகுக் கவசம்போல டேவிஸ் போட்டிகளில் இந்தியாவின்

பேங்க் பேலன்ஸ் புஷ்டியாக உள்ள நிறுவனங்களுக்கு மற்ற எல்லா விளையாட்டுகளையும் விடவும் கிரிக்கெட் மீது அதிக பாசம் இருக்கும். கிரிக்கெட் என்றால் வலக் கை கொடுப்பது இடக் கைக்குத் தெரியாது. மற்ற விளையாட்டுகளுக்கு என்றால் இரண்டு கைகளையும் விரித்துவிடுவார்கள். ஆனால், இப்போது அப்போலோ டயர்ஸ் இந்திய டென்னிஸ் வீரர்களை நம்பி, அடுத்த பத்து வருடங்களுக்கு நூறு கோடிகளை இறைக்கத் தயாராகியிருக்கிறது. இது தவிர, ரிலையன்ஸ், டி.எல்.எஃப்., பாரதி எண்டர்பிரைசஸ் போன்ற கம்பெனிகளும் கோடிகளைக் கொட்டப் போகின்றன.

2010-ல் இந்தியாவிலும் 2012-ல் லண்டனிலும் நடக்கும் காமன்வெல்த் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் பை நிறையப் பதக்கங்களை, டென்னிஸ் வீரர்கள் அள்ளிவர வேண்டும் என்று வேண்டி காணிக்கை போடப்பட்டுள்

கோடிகளால் கொடி உயருமா?

டென்னிஸின் விழ்ச்சியையும் யாரும் வேடிக்கை பார்க்கவில்லை. பீம பலமுள்ள நிறுவனங்கள் பணத்தை வாரியிறைக்கத் தயாராக இருக்கின் றன. தன்பொருட்டு தரமான வீரர் களை இறைக்க முடியுமா என்பது கேள்விக்குறி. இந்திய டென்னிஸ் ரசிகர்கள் சிரித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நிரந்தரமாகச் சோகம் படிந்துவிட்ட அவர்கள் முகத்தில், இனிமேலும் கவலைக்கும் வருத் தத்துக்கும் இடமில்லை.

- ச.ந.கண்ணன்



* சானியா

மானத்தைக் காத்தார். ஆனால், டபுள்ஸில் ஆதிக்கம் செலுத்திய இருவரும் சிங்கிள்ஸில் சிங்கி அடித்தார்கள்.

ஜீவனற்ற ஆட்டங்களையும் வீரர்களையும் பார்த்துப் பழகிய கண்களுக்கு, அருமருந்தாக விளங்கி னார் புதிதாக வந்த சானியா மிர்சா. தன் இளமையால் ஐஸ்வர்யாராயைவிட அதிக கவனம் பெற்றார். ஆனால், இவர் டென்னிஸ் ஆடுவதை யாரும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. பயஸும் பூபதியும் இணைந்து கோப்பைகளை வென்றபோது வராத மீடியா, அவர்கள் ஒருவரையொருவர் கரித்துக் கொட்டி விலகியபோது தவ றாமல் ஆஜராகி, காயத்தை மேலும் கிளறி ரணத்தை உருவாக்கியது. புதிதாக கரன் ரஸ்டோகி, பிரகாஷ் அமிர்தராஜ், பொபன்னா, ஷிகா ஒப்ராய் என அரை டஜன் பேர் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லும்படி ஒருவரும் இல்லை.

நல்லவேளை, ஹாக்கிபோல

பயமும் கவலையுமாக இருந்தது. யோசித்துப் பார்த்தால் எல்லாமே அபத்தமாகத் தோன்றியது. திடீரென்று வாழ்க்கையில் நுழைந்த அரசியல்வாதிகளின் அத்தியாயம். இரண்டு பேர்; இரண்டு துருவங்கள்; இரண்டு வாய்ப்புகள் என்று முத்துராமன் நினைத்தான். இரண்டு பிரச்னைகளாக அவர்கள் இருந்தார்கள். பிரச்னை என்று நினைத்தால் வீடு உள்பட எதுவுமே பிரச்னைதான். ஏன் இது வாய்ப்பாக இருக்கக்கூடாது? இயல்பில் இல்லாவிட்டாலும் வாய்ப்பாக மாற்ற முடியாதா, என்ன?

அப்படித்தான் அவன் நினைத்தான். அதையேதான் விரும்பவும் செய்தான். ஆனால், தொடர்ந்து ஏதாவது தலைவலி வந்துகொண்டேதான் இருக்கிறது. வட்டச் செயலாளர் சிங்காரத்தின் ஹோட்டல் எரிந்துவிட்டது. கண்டிப்பாகத் தானாக எரியக்கூடியதில்லை. யாரோ பெட்ரோலை ஊற்றிப் பற்ற வைத்திருக்க வேண்டும்.



கொசு

பாரம்பரியம் மிக்க இனிய தமிழ் அசைவ உணவகம். இன்னும் கொஞ்ச நாளைக்கு இயங்காது.

அட, இதையும் ஏன் அவரே பற்ற வைத்துக்கொண்டிருக்கக்கூடாது! தோன்றிய மறுகணமே அவரிடம் கேட்டுவிட்டதுதான் பிழையாகிப் போனது.

"மவன டேய், நேத்திக்கிப் பெஞ்ச மழைல இன்னிக்கி மொளச்ச காளான் நீயி. என்னியப் பாத்து இப்படி ஒரு கேள்வி

கேட்டுப்புட்ட இல்ல? இதெல்லாம் அந்தக் கபோதி ஏத்திவுட்டு அனுப்பினதுதானே? நாள கழிச்சி தெரிஞ்சிரும் உங்க பவுஷு.''

தொடர்பற்ற சொற்றொடர்களில் அவர் உணர்த்த விரும்பியதெல்லாம் ஒன்றுதான். 'இனி நான் உன் நண்பனல்ல.' முத்து ராமனுக்கு அதுதான் வியப்பாக இருந்தது. ஓர் எதிரியாகப் பொருட்படுத்திப் பேசுகிற அளவுக்குத் தனக்கு என்ன முக்கியத்துவம் வந்துவிட்டது என்று யோசித்துப் பார்த்தான். அப்படியொன்றும் தெரியவில்லை. எம்.எல்.ஏ. தங்கவேலு கூப்பிட்டு அனுப்பிப் பேசியது, பாளையங்கோட்டைக்கு ஒரு நடை போய் வந்தது தவிர அரசியலில் தன் பங்கு கடுகளவு காணாது. இப்படி நட்டநடுச் சாலையில் நிற்க வைத்து, சட்டையைப் பிடித்து வீர சபதம் செய்யக்கூடிய அளவுக்குத் தான் செய்தது தான் என்ன? ஒன்றுமில்லை. கண்டிப்பாக ஒன்றுமில்லை.

உருப்படியாக ஒரு சாதனை செய்வதற்கு முன்னால் அரசியலில் ஓர் எதிரியை உருவாக்கிக்கொண்டு விட்டதுதான் பெரிய சாதனை போலிருக்கிறது. கிளம்பும்போது எதற்கும் இருக்கட்டும் என்று அவன் சொன்னான்:

''ஐயா, நீங்க என்ன நெனச்சிக்கினாலும் சரி, எம்மேல எந்தத் தப்பும் இல்ல. உங்க அளவுக்கு நான் கீழ்த்தர மானவனும் இல்ல, அதுக்கு அவசியமும் இல்ல. நீங்க பெரியவரு, அனுபவஸ்தரு. எங்க குப்பத்துக்கு நல்லது செய்ய றேன்னிட்டு வந்தீங்க. ஏதோ வேலைய ஆரமிச்சீங்க. நீங்களே பாதில நிறுத்திட்டுப் பூட்டீங்க. அத்தப்பத்திக் கேக்கலாம்னிட்டு வந்தேன். இனிமே உங்களாண்ட பேசிப் பிரயோசனமில்லீங்க. நான் வரேன்.''

''போடாங்... பாத்துக்கினே இரு. உன் குப்பத்துல ஒரு போகி கொளுத்தறனா இல்லியா பாரு.''

அதற்குமேல் முத்துராமன் அங்கே நிற்க விரும்பாமல் திரும்பி நடந்தான்.

வீட்டுக்குப் போனபோது அப்பா வாசலில் நின்றுகொண்டிருந்தார். சுற்றிலும் ஏழெட்டு பேர் இருந்தார்கள். ''வாடா, எம்.எல்.ஏ. ஆயிட்டியா?'' என்றான் சிநேகிதன் ஒருவன்.

''அடச்சே... சொம்மா கெட. மனுசன் என்னா பாடுபடுறான்னு தெரிஞ்சி பேசுங் கடா.''

''தபாரு முத்துராமா. இந்த டகில்பாஜி யெல்லாம் எங்களாண்ட வாணா. நாங்களும் பாத்துக்கினுதான் இருக்கோம். திடீர்னு எவனோ வட்டம் வந்து வேலை செய்யறான்ன. கல்லு மண்ணு கொண்டாந்து ரெண்டு ரவுண்டு போட்டான். ஆளுங்க நாலு பேரு வந்தாங்க. ரெண்டு நாள் வேலை நடந்ததோட சரி. தடால்னு எவனோ வந்தான், நடந்த வேலைய நிறுத்துன்னு சண்டைக்கு வந்தான். நீ வந்து பேசி என்னமோ செஞ்சி திருப்பி அனுப்பின. திருப்பி எப்ப ஆரம்பிக்கும்? அத்த சொல்லு மொதல்ல.''

''தெரியலடா. அந்தாளுகிட்டதான் பேச லாம்னு போனேன். அவன் ஒட்டல் பத்தி எரிஞ்சிக்கிட்டிருக்குது.''

''இதெல்லாம் வாணா. நாங்க வேற விசயம் கேள்விப்பட்டோம்.''

''என்னான்னு?''

''அவரு குடுத்த பணத்துல பாதிய நீ லவுட்டிக்கிட்டியாமே?''

''டேஏஏஏய்...'' ஆக்ரோஷமாகப் பாய்ந்து அவன் சட்டையைப் பிடித்தான் முத்துராமன்.

''டேய், சட்டைய விடுடா.. விடு றாங்கறேன்ல...'' அவனது அப்பா துள்ளி வந்து அவனை விலக்கினார். பல குடிசை களுக்குள்ளிருந்து தலைகள் வெளியே நீண்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கின.

உவர்ப்பு!

வட்டாரம் நாயகி அதிசயாவுக்குத் தண்ணீரைப் பார்த்தாலே உவர்ப்பாய் இருக்கிறதாம். காரணம்? ''காலைப் பனி படத்துக்காக கொடைக்கானல் போயிருந்தோம். பாடல் காட்சி எடுக்கும் போது அதிக ஆழமான ஏரிக்குள்ள தவறி விழுந்துட்டேன். யூனிட்டே ஒரு நிமிஷம் கதி கலங்கிப் போயிடுச்சி. உடனே சுதாரிச்ச டைரக்டர் ராஜேஷும் ஒளிப்பதிவாளர் கோபிஜெகதீஸ்வரனும் சட்டுனு ஏரியில குதிச்சுட்டாங்க. எனக்கு நீச்சல் தெரியாததால ரொம்பவே தத்தளிச்சுட்டேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மூச்சுத் திணறி மூழ்க ஆரம்பிச்சுட்ட என்னை, ராஜேஷ் சார் வந்து பிடிச்சுக்கிட்டார். கூட கோபி சாரும் ஹெல்ப் பண்ண... அப்படியே மத்த ஆட்கள் துணையோட நான் காப்பாற்றப்பட்டேன். 'தொட்டு விடும் தூரத்தில் தொடரும் நிலவு'ன்ற பாட்டைத்தான் அப்ப எடுத்தோம். எனக்குத் தொட்டு விடும் தூரத்துல எமன் தெரிஞ்சு, மறைஞ்சுட்டான்'' என்கிறார் அதிசயா.

– மகேஸ்வரி



''தபாருங்கப்பா. எம்புள்ள பணத்த எடுத்திருந்தான்னா அது எனக்குத் தெரியாம இருக்காது. நீங்க என்னிய நம்புறீங்கள்ல?''

கூட்டம் பேசாதிருந்தது. ''கேக்கறேன்ல? சொல்லுங்க. என்னிய நம்புறீங்களா, இல்லியா?''

''தபார் பெர்சு. எங்களுக்கு உங்கமேல எந்த கம்ப்ளெயிண்டும் இல்ல. நம்ம மருதன் நேத்து அந்நாளு ஓட்டலுக்கு பிரியாணி துண்ண போயிருக்கான். அங்க கவுண்ட்டர்ல பேசிக்கிட்டாங்களாம்! வட்டம் ஒரு நல்ல நோக்கத்தோடதான் இந்தக் குப்பத்துல வேலைங்க செய்ய ஆரமிச்சாரு. நடுவுல இவன நம்பிப் பணத்தக் குடுத்ததுல தான் பிரச்னை ஆயிருச்சாம்! வேலையக் கெடுக்க ஆளுங்க வந்திச்சில்ல? அத்த செட்டப் செஞ்சதே இவந்தான்னு சொன்னாங்க.''

அடிவயிற்றில் எரிந்தது முத்துராமனுக்கு. எத்தனை பெரிய பொய்! கடவுளே, எப்படி நிரூபிப்பேன்?

''நீயே சொல்லு பெர்சு. இருந்து இருந்து நமக்குன்னு ஒருத்தன் வந்து வேலை செய்யறேன்னு வாரான். அத்தவிட்டுட்டு இவன் எதுக்கு நடுவால நாலு நாள் வெளியூர் எங்கியோ போவணும்?''

''அடச்சே, நான் போவலடா. எம்.எல்.ஏ. அனுப்பினா மாட்டேன்னா சொல்ல முடியும்?''

''த... இத்தானே வேணாங்குறது? எம்.எல்.ஏ. வாண்ட இல்லாத ஆளுங்களா? நீ சிங்காரண்ணன் ஆளுன்னு தெரிஞ்சி எம்.எல்.ஏ. உன்னிய ஏண்டா அனுப்புறாரு? நீ கேனயனா? இல்ல அவரையே கேனயன்றியா?''

''தபாரு கிஸ்டமூர்த்தி, வீணா சந்தேகப்படாத. உனுக்கு எதனா டவுட்டுன்னா நேரா எம்.எல்.ஏ. வாண்ட போயி கேளு. நீ நினைக்கற மாதிரி நான் சிங்காரண்ணன் ஆளும் இல்ல, எம்.எல்.ஏ. ஆளும் இல்ல. என்னா ஏதுன்னு விசயத்த முழுக்கத் தெரிஞ்சிக்கிட்டு பேசு.'

''டேய் இதுக்குமேல இன்னாடா இருக்குது? எத்தினி லவட்டின? அத்த சொல்லு.''

''வேணாம் மூர்த்தி. என்னிய சீண்டாத. நானே பேஜாராயி வந்திருக்கிறேன்.''

''நீ என்ன ஆனா எங்களுக்கு என்னடா? நெனவு தெரிஞ்ச நாளா நாத்தத்துல வாழறோம்டா. பத்து பைசாவுக்கு வக்கில்லாதவங்கடா நாம! ஏன், நேத்திக்கி வரைக்கும் உன் கதி மட்டும் என்ன வாழ்ந்தது? நீயும் அன்னக்காவடிதானே? மொத்தமா பணத்த பாத்ததும் பால்மாறிட்ட? கரெட்டா?''

''அடிங்...'' என்று பாய்ந்தவனை அவனது அப்பா மீண்டும் தடுத்தார். ''முத்து, எதுன்னாலும் வாயால பேசு. அவன் கேக்குறதுல என்ன தப்பு?

மருதன் காதால கேட்டுட்டு வந்து சொல்லியிருக்கான். டேய், இங்க வாடா. என்னா கேட்ட நீ? எல்லார் முன்னாலயும் சொல்லு.''

''அவங்க கேஷியரு பேசிக்கிட்டிருந்தாரு பெருசு. ரோடு போட, மருந்தடிக்க அண்ணன் அம்பதாயிரம் குடுத்துவிட்டிருந்ததாவும், அத்த முத்துராமன் சுட்டுட்டான்னும் பேசிக்கினாங்க.''

''புழுத்துபோவும்டா!'' என்றான் முத்துராமன்.

''தபாரு. எங்களுக்கு என்னா தெரியும்? அவங்க பேசினத சொல்லுறேன்.''

''என்னிய விட அவங்க பேசினது உங்களுக்குப் பெரிசாயிடுச்சி இல்ல? அம்பதாயிரம்! டேய், கனவுலகூட கையால தொட்டதில்லடா நான்! அந்தாள.. வெச்சிக்கறேன்...'' பல்லைக் கடித்தான்.

''இந்த விசயத்துல நம்ம குப்பத்துக்காரப் பய நீ முன்ன நின்னு செஞ்சியேன்னு சந்தோசப்பட்டோம்பாரு.. போலாம் வாங்கடா...'

முத்துராமனுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. சட்டையைக் கழற்றியபடி குடிசைக்குள் நுழைந்தான்.

அம்மாவும் தம்பியும் உள்ளே உட்கார்ந்திருந்தார்கள். என்ன பேசுவதென்று தெரியவில்லை. பேசத்தான் வேண்டுமா என்றும் நினைத்தான். எல்லாவற்றையும் எல்லாரையும் விட்டுவிட்டுக் கண்காணாமல் எங்காவது போய்விட நினைத்தான். பாளையங்கோட்டைக்குப் போய்விடலாம். எம்.எல்.ஏ. கொடுத்த வேலையையாவது நல்லபடியாக முடித்துவிட்டு வந்தால் நல்லது.

''சாப்புடறியா?'' என்று அம்மா கேட்டாள்.

''பசிக்கல. நான் வெளில போறேன்.''

''எங்க போனாலும் எக்மோருக்கு ஒருநடை போயிட்டுப் போ. சம்மந்தி ஊட்டு மனுசங்க வந்துட்டுப் போனாங்க. கல்யாணம் வேணான்னா நேரா வந்து சொல்லிட்டுப் போவுறது தானே, எதுக்கு அரசியல்வாதிங்கள வுட்டு அனுப்பறீங்கன்னு கேட்டுட்டுப் போனாங்க. என்னா ஏதுன்னு எங்களுக்குப் புரியல. நீயே போயி அங்கயும் புரியவெய்யி'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு எழுந்துபோனாள்.

பிடறியில் பேயடித்தது போலிருந்தது முத்துராமனுக்கு. கழற்றிய சட்டையை அப்படியே மாட்டிக்கொண்டு வெளியே பாய்ந்தான்.

(தொடரும்)

துவர்ப்பு!

தமிழ் சினிமா ஒளிப்பதிவுத் துறைக்குப் புது வரவு ஆம்ஸ்ட்ராங். திருமுருகன், பத்ரியைத் தொடர்ந்து சின்னத் திரையிலிருந்து வெள்ளித் திரைக்கு வருபவர். ஆனால், இதற்கு முன்பே தெலுங்கு, மலையாளப் படங்களில் பணியாற்றியிருக்கிறார்.

''ஊமை விழிகள் படத்தை இயக்கின அரவிந்த்ராஜ், அந்தப் படத்தோட ரெண்டாவது பாகமான 'பேசும் விழிகள்' படத்துக்கு ஒளிப்பதிவு பண்ணும் வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கார். இந்தத் துறைல கிட்டத்தட்ட இருபது வருஷமா எத்தனையோ துள்ளல்களையும், துவர்ப்புகளையும் அனுபவிச்சிருக்கேன். அதனால சிறப்பா பண்ணுவேன்னு நம்பிக்கை இருக்கு. சீரியல்லருந்து சினிமாவுக்கு வர்றவங்கள சமீப காலமா மக்கள் அள்ளியெடுத்துக்கிறாங்க. என்னையும் அவங்க லிஸ்ட்ல நிச்சயம் சேர்த்துக்குவாங்க'' என்கிறார் ஆம்ஸ்ட்ராங்.



• சூ



வீட்டுக்குள்

மியான்மரிலுள்ள பகோடாவுக்குள் நுழைய முயன்ற அந்தச் சிறு கூட்டத்தைத் தடுத்து நிறுத்தியது காவல்துறை. "யார் நீங்கள்? எதற்காக இப்படிக் கும்பலாக கோயிலுக்குள் நுழைகிறீர்கள்? இங்கே என்ன வேலை?" என்று காவல்துறை கேட்ட கேள்விக்குக் காட்டமாகவே பதிலளித்திருக்கிறார்கள் அவர்கள். "நாங்கள் தீவிரவாதிகள் கிடையாது. மியான்மர் வாசிகள். எத்தனை கோடி முறை கத்தினாலும் அரசாங்கம் சூகியை விடுவிக்கப்போவதில்லை. அதனால் புத்தரிடம் முறையிடப்போகிறோம். அதற்குக் கூடவா இத்தனை கெடுபிடிகள்?"

"இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் நீங்கள் கலையாவிட்டால், அத்தனை பேரையும் உள்ளே தள்ளிவிடுவேன். ஜாக்கிரதை." கூட்டம் கலைந்துபோனது.

மியான்மர் சிறைச்சாலையில் புதிய குற்றவாளிகளுக்கு இடமில்லை. சூ கி ஆதரவாளர்களால் சிறைகள் நிரம்பிக் கிடக்கின்றன. கட்சி ஆட்கள் மட்டும் மொத்தம் 1200 பேர் உள்ளே இருக்கிறார்கள். சூ கி ஆரம்பித்து வைத்த கட்சியில் (National league for Democracy) இன்று வரையில் உறுப்பினராக இருப்பதுதான் அவர்கள் செய்த முதல் அடிப்படை தவறு. இரண்டாவது தவறு, சூ கியை விடுவியுங்கள் என்று கோஷம் போட்டது. இத்தனைக்கும், அவர்கள் கடையை உடைக்கவில்லை. பேருந்துகளைக் கொளுத்தவில்லை. தக்காளி, முட்டை வீசவில்லை. தெருவில் கூடி நின்று, பேரணி நடத்தினார்கள்; அவ்வளவே.

மியான்மர் சட்டம் உண்மையிலேயே விசித்திரமானது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். காரணம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அப்படியே கேட்டாலும் உன் கொள்கை பிடிக்கவில்லை: உன் தாத்தாவின் பெயர் பிடிக்கவில்லை. ஏதாவதொன்று சொல்லிக் கொள்ளலாம். ஐந்தாண்டு காலத்துக்கு சிறையில் சும்மா அடைத்துவைக்கலாம்.

சமீபமாக, பதினொரு ஆண்டுகளை சிறையிலும் வீட்டுக்காவலிலும் கழித்

உலகம் இவ்வளவுதான்

திருக்கிறார் சூகி. யாங்கூனில் இருக்கிறது இவரது வீடு. வீட்டைச் சுற்றி மரங்கள், செடிகள். வீட்டுக் கதவைத் தாண்டி வெளியில் வந்தால் காவல்காரர்கள் முறைத்துக்கொண்டு நின்று கொண்டிருப்பார்கள். மூச்சு முட்டுகிறது காற்று வாங்க வேண்டும் என்றால்கூட, நான்கு பேரோடு சேர்ந்துதான் வாங்க வேண்டும். கொஞ்சம் உலாவலாம் போல் தோன்றும். ஆனால், மனசு வராது. டக்டக்கென்று பின்தொடரும் பூட்ஸ் கால்கள் எரிச்சலூட்டும்.

சூ கியின் வீட்டை மட்டுமல்ல அவர் வசிக்கும் யாங்கூன் தெரு முழுவதிலும் காவலாளிகள் படர்ந்திருக்கிறார்கள். சூகியைத் தேடி யாரும் உள்ளே வரமுடியாது. வரக்கூடாது. மீடியா ஆட்களைச் சமாளிப்பதுதான் பெரிய வேலை அவர்களுக்கு.

பிறகு, ஆக்டிவிஸ்டுகள். கொடி பிடிக்கும் போராளிக் குழுக்கள். பெரும்பாலும் பெண்கள். காலை எழுந்து பல் தேய்த்து, காஃபி குடித்து நேராகக் கிளம்பி வந்துவிடுவார்கள். கோஷம், ஆர்ப்பாட்டம், பேரணி, அமைதி ஊர்வலம், இத்யாதி... ஒரு வழியாக அவர்களை அப்புறப்படுத்தி விட்டு, அக்கடா என்று உட்கார்வதற்குள் கட்சி கண்மணிகள் வந்துவிடுவார்கள்.

சில சமயம் காவலாளிகளுக்கே அலுப்புத் தட்டிவிடும். அப்படி என்ன பெரிய தப்புக் காரியம் செய்துவிட்டார் இவர்? வயது அறுபதைத் தாண்டிவிட்டது. கிட்டத்தட்ட பாட்டி. பிறகு ஏன் அவரைக் கண்டு அரசாங்கம் அஞ்சுகிறது?

உண்மைதான். ஆனாலும் ஜுண்ட்டா (Junta) அரசாங்கத்துக்கு சூகியைப் பார்த்தால் அப்படி ஒரு பயம். அவர் வீட்டைச் சுற்றிலும் இரும்புக் கம்பி வேலி போட்டது போதாது என்று தெருமுனையிலும் வேலி அமைச் ச் சொல்லி உத்தரவு. பேயா பூதமா அவா? இத்தனை அரண்களையும் உடைத்துக்

புயல்!

மருதன்



கொண்டு காற்றோடு போய் விடுவாரா என்ன? பலகீனமான தேகம். மென்மையான புன்னகை. மெல்லிய கேசம். இத்தனை பூஞ்சையாக இருக்கிறார் ஆனால் புயல் என்று பத்திரிகைகள் அவரை வர்ணிக்கின்றன.

கேட்டால் இப்படிச் சொல்கிறார்கள். சூகியின் உயிருக்கு ஆபத்து. அவரைப் பிடிக்காதவர்கள் பலர் மியான்மரில் இருக்கிறார்கள். ஆகவே, அவரை நாங்கள் பத்திரமாகக் காப்பாற்றிக்

கொண்டிருக்கிறோம். மே 2003-ல் சூகியைக் கொல்ல ஒரு சதி நடந்தது. ஒரு பேரணியில் கலந்துகொண்ட போது, சிலர் சூகி குழுவினர் மீது தாக்குதல் நடத்தினார்கள். டிரைவர் உதவியுடன் நூலிழையில் உயிர் தப்பினார் சூகி. தப்பித்துவிட்டாயா இரு கவனித்துக் கொள்கிறேன் என்று கறுவிக் கொண்ட அரசாங்கம், பாதி வழியிலேயே அவரைக் கைது செய்தது. அவர் செய்த குற்றம்? செத்துப்போகாமல் பிழைத்துக் கொண்டது. முதலில், ரங்கூன் சிறைச்சாலையில் கொண்டுபோய் வைத்தார்கள். பிறகு, வீட்டுக் காவலில்.



சூகியின் தந்தை ஆங் சான் பர்மிய விடுதலைப் போராட்டத்தின் தந்தையாகக் கொண்டாடப்படுபவர். மியான்மர் விடுதலை அடைவதற்கு முன்பாகவே, அரசியல் எதிரிகளால் கொல்லப்பட்டவர். தாயார் தாகின் கி, இந்தியாவுக்கான பர்மிய தூதுவராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துக்குச் சென்று படித்துப் பட்டம் பெற்றார் சூகி. மைக்கேல் ஏஸை அவர் சந்தித்துக் காதல் கொண்டது இங்கேதான். காதல் எல்லாம் சரி. ஆனால், திருமணத்துக்கு முன்னால் சூகி ஏஸிடம் முன்வைத்த நிபந்தனை இதுதான். 'போராட்டம்தான் என் முதல் கணவன். அவர் எப்போது அழைத்தாலும் நான் சென்றுவிடுவேன். சம்மதம் என்றால் என்னை மணந்துகொள்ளலாம்.'

1962-ம் ஆண்டு நீவின் தலைமையிலான ராணுவம் மியான்மர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நீதித்துறை ரத்து செய்யப்பட்டது. அடுத்து பத்திரிகை. 'மனதில் தேவகுமாரர்கள் என்று நினைப்பா உங்களுக்கு? உங்கள் இஷ்டத்துக்கு தலையங்கம் எழுதுவீர்கள். அரசாங்கத்தை விமர்சிப்பீர்கள். அதிகாரத்தை கிண்டலடிப்பீர்கள். கார்ட்டூன் போடுவீர்கள். யார் கொடுத்தது இந்த அதிகாரத்தை? இனி, இரண்டு காரியங்களை நீங்கள் செய்யலாம். ஒன்று, ஆபீஸை மூடிவிட்டு வீட்டுக்குப் போங்கள். அல்லது சிறைச்சாலைக்கு.'

1990-ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. சூகியின் கட்சி மாபெரும் வெற்றி பெற்றது. ஆனால் ராணுவ அரசு தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. 1991-ஆண்டு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டபோதுகூட சூகியால் நேரில் சென்று பரிசு வாங்கிவர இயலவில்லை.

“தப்பித்துவிட்டாயா... இரு, கவனித்துக் கொள்கிறேன்!” என்று கருவிக் கொண்ட அரசாங்கம், பாதி வழியிலேயே அவரைக் கைது செய்தது. அவர் செய்த குற்றம்? செத்துப் போகாமல் பிழைத்துக் கொண்டது!

இப்போதுகூட ஒன்றுமில்லை. 'மியான்மரைவிட்டு வெளியேற சம்மதிக்கிறேன். இனி மியான்மருக்குள் காலடி எடுத்து வைக்கமாட்டேன் என்ற சூகி உறுதிமொழி அளிப்பதாக இருந்தால் அவரை விடுதலை செய்வது குறித்துப் பேசுகிறோம்' என்கிறது ராணுவ அரசாங்கம்.

ஆனால், சூகிக்கு அதில் விருப்பமில்லை. தெளிவாகவே சொல்லி விட்டார். ராணுவ ஆட்சியாளர்களிடமிருந்து மியான்மரை விடுவிக்கும் வரை எனக்கு விடுதலை என்பது கிடையாது. ○

சென்னையைச் சுற்றியுள்ள

நவ கிரஹத் தலங்கள்!

நவ கிரஹத் தலங்களுக்கு யாத்திரை செல்வதும் பிரார்த்தனை செலுத்துவதும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் மனத்துக்கு இதமளிக்கின்றன. மனிதன் பல இன்னல்களையும், தடங்கல்களையும், போட்டிகளையும் கடந்து முன்னேற வேண்டியிருக்கிறது. அதற்கு இந்த நவ கிரஹ வழிபாடு பெரிதும் துணைநிற்பதாக மக்கள் உணர்கிறார்கள். சோழ நாட்டில் ஒன்பது சிவத்தலங்கள் நவ கிரஹத் தலங்களாகவும் விளங்குவது போல், ஒன்பது வைணவத் தலங்களிலும் இந்த மரபு உண்டு. பாண்டி நாட்டிலும் (திருநெல்வேலி மாவட்டத்தில்) நவதிருப்பதிகளும், நவகைலாசங்களும் நவகிரகத் தலங்களாக மக்களை ஈர்க்கின்றன. 'சோழநாட்டுக்கும் பாண்டி நாட்டுக்கும் சற்றும் சளைத்ததல்ல, தொண்டைநாடு' என்று பறைசாற்றிக் கொண்டு, இப்பொழுது சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், சென்னைக்கு மிக அருகே நவகிரகங்களின் அருள் விளங்கும் ஒன்பது பழைமைவாய்ந்த தலங்கள் புகழ்பெற்று வருகின்றன.

அந்தந்த கிரகங்களுக்கு உரிய நாட்களில் அந்தந்தத் தலங்களில் அலை மோதும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்தத் தலங்கள், இன்று, நேற்று திடீரென்று உருவானவை அல்ல! பல நூறு ஆண்டுகளாக, முனிவர்கள், ஞானிகள், மன்னர்கள், பிரபுக்களால் வணங்கப் பெற்று வரும் தலங்களே!

மாபெரும் சரித்திரச் சான்றுகளைக் கல்வெட்டுகளாகத் தம்முள் வைத்துக் கொண்டு, வெளி உலகத்துக்குத் தெரியாதவண்ணம் அந்தந்த ஊர் மக்களால் மட்டுமே வணங்கப் பெற்று வரும் இத் தலங்கள் இன்று நவகிரகப் பெருமையினால், பலரும் வந்து வணங்கி வளம் பெறக் காரணமானால் அதைவிட நன்மை வேறென்ன? வாருங்கள் ஒரு நடை போய் வரலாம்.

• சூரிய க்ஷேத்திரம் - கொளப்பாக்கம்



த.கி.நீலகண்டன்

சன்னதிக்கு நேரெதிரே உள்ள சாளரத்தின் வழியாக சூரியனின் காலைக் கிரணங்கள் சிவலிங்கத் திருமேனியில் படுகின்றனவாம்!


சூரியன் அருள் விளங்கும் கொளப்பாக்கம்

கொளப்பாக்கம் என்று பெயர் மருவிய குளப்பாக்கம். சுற்றிலும் சிறு சிறு தாமரைத் தடாகங்கள் சூழ, நடுவில் இவ்வூர் விளங்குகிறது. இப்போதும் ஆலயத்துக்குச் செல்லும் சாலையோரம் வெண் தாமரை மலர்கள் மலர்ந்த தடாகத்தைக் காணலாம். மவுண்ட்- பூந்தமல்லி சாலையில், அடையாறு நதியைத் தாண்டியதும் இடப்புறமாகக் கீழிறங்கும் சாலை வழியே சென்றால், கொளப்பாக்கம் அகஸ்தீசுவரர் ஆலயத்தை அடையலாம்.

விசாலமான கோயில் வளாகத்தை, பெரிய மதிற்சுவர் காக்கிறது. கோபுரவாயில் மொட்டைக் கோபுரமாக விளங்குகிறது. தெற்கு நோக்கிய வாயிலின் வழியே சென்றால் அம்பிகை ஆனந்தவல்லியாக நம்மை அநுக்கிரகிக்கிறாள். கோயில் செவ்வையான கருங்கல் திருப்பணி. ஓரிரண்டு படிகள் மேலேறிச் சென்றால் மகாமண்டபம். அதன் ஒரு புறத்தில்தான் அம்பிகையின் சன்னதியை அமைத்திருக்கிறார்கள். அம்மையை வணங்கி இடப்புறம் திரும்பினால் அர்த்தமண்டபம் தாண்டிக் கருவறையில், சதுரமான ஆவுடையார் மீது சிறிய அளவில் அகஸ்தீஸ்வரர் கிழக்கு நோக்கி அமர்ந்து அருள் பாலிக்கிறார். நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளிக்கவசம் அகஸ்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கத் திருமேனியை விளங்கச் செய்கிறது. சன்னதிக்கு நேரெதிரே உள்ள பன்னிரண்டு துவாரங்கள் கொண்ட சாளரத்தின் வழியாக சூரியனின் காலைக் கிரணங்கள் சிவலிங்கத் திருமேனியில் படுகின்றனவாம்!

மாசி மாதம் ரதசப்தமி நாள் தொடங்கி, மூன்று நாட்கள் சூரிய பகவானே தனது பன்னிரண்டு ஆதித்ய சொருபங்களின் வடிவில் பன்னிரண்டு துவாரங்கள் வழியே நுழைந்து சூரிய பூஜை செய்வதால் இது சூரியனின் தலமாக எண்ணப்படுகிறது. பன்னிரண்டு ராசிகளையும் இத் துவாரங்கள் குறிப்பாக உணர்த்துவதாகவும் சொல்கிறார்கள்.

மண்டபத்துக்கு வெளியே, பிராகாரத்தில் சூரியன் தனிச் சன்னதியில் விளங்கி இவ்வாலயத்



★ சூரியன்



★ சந்திரன்



★ செவ்வாய்

துக்கு வருவோருக்கு ஆயுள் ஆரோக்கியத்தைக் குறைவின்றி வழங்குகிறான்.

சூரியனுக்குரிய இத் தலத்தில், சுவாமியினுடைய ஆவுடையாரிலேயே ஒன்பது கிரகங்களும் விளங்குவதாகவும், அதற்குரிய அடையாளங்கள் சிவலிங்கத் திருமேனியில் காணப்படுவதாகவும், இங்கே பொறுப்பில் இருக்கும் சோமசுந்தரம் குருக்கள் தெரிவிக்கிறார். அதனால் இக் கோயிலில் தனியே நவகிரக சன்னதி இல்லை. இதற்கான ஆதாரமும் கருவறையின் மேலுள்ள கூரையில் கல்வெட்டாக வடிக்கப் பெற்றுள்ளதாம்.

* சந்திரன்



குன்றத்தூரிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் செல்லும் சாலையில் பதினொரு கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டும்... குன்றத்தூர் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள சாலை வழியே சென்றால் சிறிது தூரத்தில் செம்பரம்பாக்கம் ஏரியின் கணவாய்கள் தென்படுகின்றன. ஏரிக்கரை ஓரமாகவே செல்லும் சாலையில் ஆறு கிலோமீட்டர் தொலைவில், சாலை இரண்டாகப் பிரியும் போது, இடப்புறம் உள்ள சாலை வழியே சென்றால் அடுத்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சோமங்கலம் இருக்கிறது. சோமநாதீஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வழி என்று பலகைகள்

ஆறு வாரங்கள் தொடர்ந்து வழிபடுவோருக்குச் சகல நன்மைகளும் கிட்டுகின்றனவாம்!

இக் கோயிலில், பைரவருக்குரிய ஞாயிற்றுக்கிழமை இராகுகாலத்தில் மிகச் சிறப்பாக பரிகார வழிபாடுகள் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. ஆறு வாரங்கள் தொடர்ந்து வழிபடுவோருக்குச் சகல நன்மைகளும் உத்தியோகம் மற்றும் வியாபாரங்களில் தடைகள் நீங்கி மேன்மையும் வளர்ச்சியும் கிட்டுகின்றனவாம்!

சந்திரன் க்ஷேத்திரம் சோமங்கலம்!

தக்ஷன் நடத்திய யாகத்தில் சிவபெருமானுக்குப் பங்கில்லை என்று தெரிந்தும், அதில் கலந்துகொண்ட தேவர்கள், சிவ அபராதம் செய்த பாவத்துக்கு ஆளாயினர். தம் கலைகள் தேய்ந்து, ஒளியிழந்து நின்ற சந்திரன், சிவலிங்கம் ஸ்தாபித்து பூஜித்து, இழந்த தன் கலைகளைத் திரும்பப் பெற்ற ஊர் சோம மங்கலம். இதுவே, பின்னாளில் மருவி சோமங்கலம் ஆயிற்று.

அடையாளம் காட்டுவதால், வழி தவற வாய்ப்பில்லை. மாநகரப் பேருந்துகள் சோமங்கலம் செல்கின்றன.

விசாலமான கோயில் வளாகம், வெகு சமீபத்தில் கோயில் குடமுழுக்கு கண்டிருக்கிறது. ஊர்மக்கள் பொறுப்பானவர்கள் என்பதை சுத்தமான சுற்றுச் சூழல் பறைசாற்றுகிறது.

யானையின் பின்புறம் போல் தோன்றும் கஜபிருஷ்ட விமானம். தூங்கானை மாடம் என்று தமிழில் அதற்குப் பெயர். வேறு இராஜ கோபுரம் இல்லை. மண்டபம் முழுவதும் கருங்கல் திருப்பணி. திருச்சுற்று முழுவதும் உள்ள கல்வெட்டுக்கள் ஆலயத்தின் பழைமையையும் சரித்திரத்தையும் இரகசியமாய்ப் பாதுகாக்கின்றன. சோழர் கால சிற்பக் கலையின் மேன்மையைக் காட்டும் கருங்கற் சிற்பங்கள். அதிலும் அந்த தக்ஷிணாமூர்த்தியின் வடிவழ

கைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

கிழக்கு நோக்கிய ஈசுவரன் சன்னதியில், மேற்கு நோக்கிய நந்தி. பகையரசர்கள் துரத்திக் கொண்டு வர, இக்கோயிலில் தஞ்சம் புகுந்த மன்னன் ஒருவனைக் காக்க, இறைவன் நந்திதேவருக்குக் கட்டளையிட, நந்திதேவர், திரும்பி அமர்ந்து, இருந்த இடத்திலிருந்தே ஹுங்காரம் செய்ய, பகைவர்கள் அஞ்சி ஓடினராம்!

கோயிலுக்கு அருகே அழகான அல்லிக்குளம், சந்திர தீர்த்தம் என்ற பெயருடன் விளங்க, அதன் கரையில் தல விருக்ஷமான சரக்கொன்றை மரம்.

சோமநாதீசுவரர் கருவறையில், ஆவுடையார் பத்ம பீடமாக விரிந்திருக்க, பெரிய அளவில் இலிங்க மூர்த்தியாய் மூலவர். இடப்புறச் சுவரில் நந்திகேஸ்வரர் தம் துணைவியாருடன் காட்சி தருகிறார்.

அமைதி தவழும் சன்னதியில், பளிங்குத் தரையில் ஒரு ஐந்து நிமிஷம் அமர்ந்திருக்கையில், மனச் சஞ்சலங்கள் விலகி, நிம்மதி காண்கிறோம்.

சந்திரன் உடலையும் உள்ளத்தையும் குளிர்விப்பவன் அல்லவா! அவன் அருள் பெற்ற சன்னதியில் நிம்மதிக்குக் குறைவேது.

கொன்றை மரத்தின் அருகில் உள்ள தனிச் சன்னதியில் அம்பிகை காமாட்சி விளங்குகிறாள். ஐந்தடி உயரத்தில், எழிலார்ந்த கோலத்தில், முகத்தில் சாந்தமும் முறுவலும் தவழ, பாசம் அங்குசம் ஏந்தி, அபயவரத கரங்களுடன் நின்ற கோலத்தில் இருக்கிறாள்.

தனிச் சன்னதியில் இங்கு சந்திரன் அருள்பாலிக்கிறான். இரு கைகளிலும் அல்லி மலர்களை ஏந்தி, நின்ற திருக்கோலத்தில், அமைதி தவழும் முகத்துடன் எடுப்பான தோற்றத்துடன் விளங்கும் தொன்மையான வடிவம்.

அதேபோல, சூரியன், கால பைரவர் ஆகியோர் தனித்தனி சன்னதியில் விளங்குகின்றனர்.

விக்கிரகங்களும் திருக்கோயிலும் மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கது.


அர்ச்சகர்கள் குடும்பத்தைச் சேர்ந்த சுரேஷ் சோமநாதன் சகோதரர்கள் இக்கோயிலைப் பொறுப்புணர்வுடனும் பெருமிதத்துடனும் பாதுகாத்து வருகிறார்கள்.

ஒரு விஷயம் மட்டும் இவர்கள் கவனத்துக்கு! தொன்மைக்குச் சிறிதும் மாறுபடாத பொருள்களைக் கொண்டு இத்தகைய ஆலயங்களைப் புதுப்பிக்க வேண்டும். மொசைக் தரைகள் பராமரிக்க எளிது என்றாலும், கோயிலின் புராதனச் சிறப்பை அவை மறைத்து விடுகின்றன.

வைத்தீஸ்வர் கோயிலில் செவ்வாய்

பூந்தமல்லி வைத்தீஸ்வரனை இத்தொடரில் ஏற்கெனவே தரிசித்தோம்... அந்த வைத்தீஸ்வரனை வணங்கித் தவம் செய்து, கிரகபதவி அடைந்த அங்காரகனும் (செவ்வாய்) இக் கோயிலில் விளங்குகிறான். அதனால் தொண்டை நாட்டு நவ கிரஹத் தலங்களுள் இத்தலம் செவ்வாய் (அங்காரகன்) கிரகத்துக்கு உரிய தலமாக விளங்குகிறது.

சென்னை - பூந்தமல்லி நெடுஞ்சாலையில், பூந்தமல்லி ஊருக்குள் நுழையும் முன்பாகவே, இடப்புறம் பிரியும் ஒரு சிறு சாலை, இக் கோயில் வாயிலுக்கு முன்




✱ சூரிய க்ஷேத்திரத்தின் முகப்புத் தோற்றம்...

நம்மைக் கொண்டு சேர்க்கிறது.

'சிமெண்ட்டும் இரும்பும் அறிமுகமாவதற்கு முன்னமே தோன்றியவனாக்கும்!' என்று பழைமையின் பெருமை பேசும் கோபுரவாயில். அதில் நிறைந்திருக்கும் சிற்ப வேலைகள் நம் கவனத்தை ஈர்க்க, அதிலிருந்து நம் சிந்தையைத் திருப்புவது சற்றுக் கடினமே!

தையல்நாயகி அம்பிகையை வணங்கி, கிழக்கு நோக்கி, சிவலிங்கத் திருமேனியாய் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஈசனது சன்னதிக்கு வருகிறோம். அர்த்தமண்டபம் வரை சென்று அருகிலே நின்று தரிசிக்கும் பேறு பெறுகிறோம். கூட்டமில்லாத, அமைதியான காலைப் பொழு

* சந்திர க்ஷேத்திரம், சோமங்கலம்



படுத்தி விடுகின்றன.

வைத்தியநாதர் சன்னதி வாயிலிலேயே, அங்காரகன், தம் முழு உருவைக் காட்டாது, தம் பாதச் சுவடுகள் மட்டுமே நம் கண்ணுக்குப் புலனாகும் வண்ணம், ஒரு சிறு பீடத்தில் காட்சி தருகிறார். அருகில், இந்தத் தலத்து விருக்ஷமான தாலிப் பனை, சிலை உருவில் காட்சி தருகிறது. சாலைகள் போடவும், வீடுகள் கட்டவும் வசதியாக மரங்களை வெட்டிக் கொண்டே போனால், வருங்காலத்தில், எல்லா மரங்களையும் இப்படிக் கல் உருவில் பார்க்க வேண்டியது தானோ என்னவோ! வெறும் பாதச் சுவடுகளைத் தரிசித்து நிறைவு பெறாத உள்ளங்களுக்கு, வெண்கலச் சிலை உருவிலும் காட்சி தந்து ஆறுதல் அளிக்கிறார் அங்காரகன்.

செவ்வாய் தோஷ நிவர்த்தி போன்ற பரிகாரங்களுக்கு இத் தலத்தைத் தேடி மக்கள் வருவதும், அருள் பெறுவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பரம்பரையாக செவ்வாய்க் கிழமை விரதம் உபவாஸம் இருப்போரும் நாடி ஓடி வருகிறார்கள்.

கொடி மரத்தடியில் விழுந்து வணங்கி கிழக்கு வாயில் வழியாக வெளியே வருகிறோம். எதிரில் காணப்படும் சித்தாமிர்தத் தீர்த்தம், நீர் நிறைந்து ஓரளவு சுத்த

'சுற்றுச்சூழலைப் பாழாக்கும் தோஷத்தில் ஈடுபடுவதை முதலில் நிறுத்து. அப்புறம் என்னிடம் வா' என்கிறாரோ செவ்வாய்?

தாகையால், நின்று நிதானித்துத் தரிசிக்க முடிகிறது. கருவறை முழுவதும் வியாபித்து, சதுரமான ஆவுடையார் மீது கம்பீரமாக எழுந்தருளியிருக்கிறார் வைத்தியநாதர். எளிமையான புஷ்பாலங்காரத்துடன், நிதானித்துச் சுடர்விடும் விளக்கின் ஒளியில், இறைவனைத் தரிசிக்கையில், அம்பிகை சன்னதியில் கிடைத்த பேரமைதி, இங்கும் தொடர்கிறது. மனம் குவிந்து, சுவாசம் சீராகி, உள்ளக் கிளர்ச்சிகள் ஒடுங்கி, அங்கு நிற்கும் கணங்கள், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கான இரகசியத்தை நமக்குப் புலப்

மாக இருப்பது கண்டு, இக் கோயிலைப் பராமரிக்கும் ஊர்மக்களைப் பாராட்டுகிறது மனம். ''மரங்களையும், நீர் நிலைகளையும் ஒழுங்காகப் பாதுகாத்து வாருங்கள். உங்கள் ஆரோக்கிய வாழ்வுக்கு நான் உத்தரவாதம்!'' என்று நமக்கு அறிவுறுத்தி விடையளிக்கிறார் வைத்தியநாதர். ''சுற்றுச் சூழலைப் பாழாக்கும் தோஷத்தில் ஈடுபடுவதை முதலில் நிறுத்து! அப்புறம் என்னிடம் வா!'' என்கிறாரோ செவ்வாய்!?

(அடுத்த இதழில் மேலும் மூன்று நவ கிரஹத் தலங்கள்)

உங்கள் ஊரில் கல்கி

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

வாசகர் சந்திப்பு

அன்பு வாசகர்களே!

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்பு மிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்துகொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனை களையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்க பூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு. அவசியம் கலந்துப் பீங்கதானே!

- ஆசிரியர் குழு

சனிக்கிழமை - 09.06.07
சேலம்
இடம்:
ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்,
ஸ்ரீ சுகவனேஸ்வரர்
கோயில் அருகில்,
சேலம் - 1.
தொலைபேசி: 2451494
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 10.06.07
வேலூர்
இடம்:
டார்லிங் ரெஸிடென்ஸி,
118, ஆபீஸர்ஸ் லைன்,
வேலூர்-1.
தொலைபேசி: 2213001
நேரம்: மாலை 4.25

சனிக்கிழமை - 23.06.07
கும்பகோணம்
இடம்: ஹோட்டல்
வெங்கட்டரமணா (மாடி),
டி.எஸ்.ஆர். பெரிய தெரு,
காந்தி பார்க் அருகில்
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 24.06.07 திருச்சி
இடம்: ஹோட்டல் அஜந்தா,
மத்தியப் பேருந்து நிலையம் அருகில்
நேரம்: மாலை 4.25

நாங்க ரெடி... நீங்க ரெடியா?

கால் சென்டர், பி.பி.ஓ. ஆட்களுக்கு இந்த உணவு முறை ஒரு வரப்பிரசாதம்!

எளிமையாக எல்லோராலும் செய்யப்படுகிற உணவு தயிர் சாதம். இதுகூட இன்று கடைகளில் பேக்டு ஃபுட்டாக விற்பனைக்கு வந்துவிட்டதுதான் ஆச்சர்யம். அருண் ஐஸ்க்ரீம் தயாரிப்பாளர்களான ஹட்சன் ஃபுட்ஸ் நிறுவனத்தினர் Krd Rys என்கிற பெயரில் பிளாஸ்டிக் கண்டெய்னரில் அடைத்து விற்பனைக்குக் கொண்டு வந்துவிட்டனர். எளிதான தயிர் சாதத்தைக்கூட தயாரிக்க முடியாத பரபரப்பான சூழலிலா இன்று மக்கள் உள்ளனர்?

''புருஷன், பொண்டாட்டி ரெண்டு பேரும் இன்னைக்கு வேலைக்குப் போறவங்களா இருக்காங்க. போனாத்தான் குடும்பத்தை சிரமமில்லாம நடத்த முடியுது. நைட்டு வர லேட்டாகும்போது காலையில லேட்டா எழுந்திரிக்கறாங்க. அவசர அவசரமா கிளம்பும்போது சாப்பாடு சாப்பிட, லஞ்ச் கட்டக்கூட நேரமில்லாம தவிக்கறாங்க. பீட்ஸா, ஃபாஸ்ட் ஃபுட்டுனுதான் காலத்தை ஓட்டறாங்க. ஆனா அதே நேரத்துல வீட்டுச் சாப்பாட்டைத்தான் கொண்டு போவேன்னு போறவங்களும் இருக்கத்தான் செய்றாங்க. அவங்களையெல்லாம் இந்தத் தயிர் சாதம் டச் பண்ணவே போறதில்ல'' என்கிறார் குடும்பத் தலைவி சுந்தரி.

தனியார் நிறுவனமொன்றில் பணியிலிருக்கும் உதயா, ''தயிர் சாதத்தை கண்டெய்னர்ல வச்சு விக்கற டெக்னிக் ரொம்பப்



புதுமையானது. இது மேல்தட்டு மக்களை மட்டுமே குறிவச்சு கொண்டு வரப்பட்டதுன்னுதான் நான் நினைக்கிறேன். எளிய உணவுன்றதால நடுத்தரக் குடும்பங்கள்ல யாரும் விலை கொடுத்து வாங்குவாங்கன்னு எனக்குத் தோணல. கால் சென்டர், பி.பி.ஓ. ஆட்களுக்கு இந்த உணவு முறை வரப்பிரசாதம். கூடவே லெமன் சாதம், தக்காளி சாதம் போன்றவற்றையும் கொண்டு வந்தா நல்லா இருக்கும்'' என்கிறார்.

இந்த தயிர் சாத கான்செப்டை வரவேற்கும் சித்த மருத்துவர் அபிராமி, பாதுகாப்பு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

''என்றைக்கும் தயிர் சாதத்தைப் போன்ற நல்ல உணவு கிடையாது. எல்லா வயதினருக்கும் ஏற்றது. கண்டெய்னரில் விற்பனைக்கு வரும்போது மக்களும் சரி, தயாரிப்பாளர்களும் சரி, விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். சுகாதார முறைப்படி விற்பனை செய்யப்படும் உணவை, உடனே உண்ணும் பட்சத்தில் எந்தவிதப் பிரச்னையும் இல்லை. ஆனால், வைத்திருந்து சாப்பிடும்போது சாதம் கெட்டுப்போக வாய்ப்பிருக்கிறது. நுகர்வோர் இதையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும்'' என்கிறார் அபிராமி.

சரி, தயிர் சாதத்தை விற்பனைக்குக் கொண்டு வரும் ஐடியா எப்படி உருவானது? ஹட்சன் அக்ரோ ப்ராடக்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் சத்யனிடம் கேட்டோம்...

''இன்று இந்தியாவிலேயே நம்பர் ஒன் தனியார் பால் உற்பத்தியாளர்கள் நாங்கள்தான். எங்கள் ஆரோக்யா பால் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. எங்களுக்கு இருக்கும் விற்பனை நெட் ஒர்க்கைப் பயன்படுத்தி, ஏற்கெனவே நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கும் ஐஸ்க்ரீம், பால், வெண்ணெய், நெய், பன்னீரைத் தொடர்ந்து எங்களுடன் தொடர்புடைய வேறு என்ன தயாரிக்கலாம் என்று யோசித்தபோது தோன்றிய ஐடியாதான் தயிர் சாதம்.

தென்னிந்தியாவில் மிகவும் பரிச்சயமான உணவு. இதனை விற்பனை செய்கிறபோது தரத்தாலும், ருசியாலும் மட்டுமே மக்களைக் கவர முடியும். எனவே, தரமான தயாரிப்புக்கான பணியில் முதலில் இறங்கினோம். தயிர் சாதத்தை மிகவும் சுகாதார முறைப்படியும், கைப்படாமலும் தயாரிக்க பிரத்யேகமான மெஷின்களை இறக்குமதி செய்தோம். தரமான அரிசி கொண்டு தயாரிக்கப்பட்ட தயிர் சாதம், உலர்ந்த திராட்சை, முந்திரி பருப்பு, துருவின கேரட், பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லி, கறிவேப்பிலை, கடுகு தாளிப்புடன் உப்பு சேர்த்து பேக் செய்யப்படுகிறது. குளிர்

✱ சுந்தரி





✱ உதயா

தயிர் சாதத்துக்கு வந்த மவுசு!

அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அம்மாக்கள் ஊறுகாய் போட
தெரியாமல் கடைகளில் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

சாதன வசதி செய்யப்பட்ட வேன்கள் மூலமாகச் சில்லறை விற்பனைக் கடைகள் வரை விநியோகிக்கிறோம். 'கட்டாயம் ஃப்ரிட்ஜ் இருக்க வேண்டும். அப்போதுதான் புளிக்காத தரமான தயிர் சாதத்தை விற்பனை செய்ய முடியும். ஃப்ரிட்ஜில் வைத்திருந்தால் எங்கள் 'கர்ட் ரைஸ்' ஏழு நாட்கள் வரை நன்றாக இருக்கும். ஆனாலும், தினசரி உங்கள் தேவைக்கு சப்ளை செய்கிறோம்' என்று விற்பனையாளர்களிடம் தெளிவாகச் சொல்லிவிடுகிறோம்'' என்கிறார் சத்யன்.

மக்களிடம் இந்த தயிர் சாத கான்செப்டுக்கு வரவேற்பு எப்படி?

''உங்களைப் போலவே எங்களுக்கும் இந்தக் கேள்வி எழுந்தது. ஒரு சர்வே நடத்தினோம். எல்லோருமே ஆச்சரியத்துடன் வாங்கிச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டு மிகவும் பாராட்டினார்கள். சிலர், 'தயிர் சாதம் ஏ, ஒன்! இதே மாதிரி புளியோதரை, சாம்பார் சாதம் எல்லாம்கூட கொண்டு வரப் போகிறீர்களா?' என்று ஆர்வத்துடன் கேட்டார்கள். எங்களுக்கு அருண் ஐஸ்க்ரீம், ஆரோக்யா பால் ஆகிய இரண்டு புகழ்பெற்ற தயாரிப்புகள் இருப்பதால், அவற்றின் விற்பனை நெட்ஒர்க்கின் மூலமாகத் தயிர் சாதத்தையும் விற்பனை செய்கிறோம். விரைவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் எங்கள் Krd Rys கிடைக்கும்படிச் செய்யப்போகிறோம்'' என்கிறார் ஹட்சன் அக்ரோ புராடெக்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை விற்பனை அதிகாரி நந்தகுமார்.

'அது என்ன Krd Rys... தயிர் சாதம் என்று தமிழிலேயே வைத்திருக்கலாமே...?' என்றால்,

''வெவ்வேறு மொழிகள் பேசப்படும் மூன்று மாநிலங்களில் விற்பனை செய்யப்படுவதால் பொதுவாக Krd Rys என்று வைத்துவிட்டோம். 275 கிராம் தயிர் சாதத்தின் விலை பதினைந்து ரூபாய் என்று வைத்திருந்தாலும் அறிமுகச் சலுகை விலையாக பத்து ரூபாய்க்கு இப்போது கிடைக்கிறது. கூடவே தொட்டுக்கொள்ள ஊறுகாயும், சாப்பிடுவதற்கு சௌகரியமாக ஒரு பிளாஸ்டிக் ஸ்பூனும் தருகிறோம்'' என்கிறார் நந்தகுமார்.

தொன்மையான உணவான தயிர் சாதத்தை எந்தத் தைரியத்தில் விற்பனைக்குக் கொண்டு வந்தீர்கள்?

''நம்முடைய பாட்டிகள் வீட்டிலேயே ஊறுகாய் வகைகளையும், வற்றல், வடகம் வகையறாக்களையும் செய்தார்கள். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அம்மாக்கள் ஊறுகாய் போடத் தெரியாமல் கடைகளில் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த தலைமுறை சாம்பார் பொடி, ரசப் பொடிகள் செய்யத் தெரியாமல், செய்ய நேரமில்லாமல் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே போனால் அடுத்த தலைமுறைக்கு ருசியாக தயிர் சாதம் செய்யத் தெரியாது. அவர்களுக்கு எங்கள் Krd Rys கைகொடுக்கும் என்பது உறுதி''



– எஸ்.சந்திரமௌலி

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

நீங்கள் கேட்டவை

1. லலிதா செல்லப்பா, சென்னை - 75

? ஸ்டாலின், கனிமொழி, அழகிரி - இவர்களுள் தரவரிசைப் பட்டியல்படி அரசியல் தகுதியை மதிப்பிடுங்களேன்...

! இந்தக் கேள்விக்கு நான் பதில் சொன்னால், கலைஞர் ''நீதாண்டா கொலைகாரன்...'' ஸாரி, ஸாரி; ''நீதாண்டா கலகக்காரன்'' என்று உங்கள் மீது பாய்வார்! சம்மதமா?



ஆபத்துப்...

...பட்டியல்!

2. கு. அருணாசலம், தென்காசி

? 'ஒரு தொகுதியில் வெற்றி பெற்ற வேட்பாளர் இறந்துவிட்டால், அக் கட்சியிடமே பதவியைக் கொடுத்துவிடலாம்' என்று இடைத்தேர்தல் சட்டத்தைத் திருத்தும்படி புதிய தமிழகம் கிருஷ்ணசாமி சொல்கிறாரே...

அ.தி.மு.க.வுக்கு வசந்தகாலம் காத்திருக்காமே...?

! கூடுதல் தேர்தல் செலவு தவிர்க்கப்பட மேலோட்டமாகக் கூறப்பட்ட யோசனை. ஆனால், இடைத்தேர்தல் என்பது வேட்பாளரின் தகுதி குறித்த மக்களின் தீர்ப்பு மட்டுமல்ல; ஆட்சியில் உள்ளோரின் செயல்பாடு பற்றிய மக்களின் கருத்துக் கணிப்பும் கூட.

3. சௌ.ரூபாவதி, தேனூர்

? ''சமுதாயம் ஏற்குமோ என்ற பயத்தைத் தள்ளிவிட்டு, குழந்தைகளைத் தத்தெடுத்து தைரியமாக வளர்க்க வேண்டும்'' என்று கனிமொழி வலியுறுத்துகிறாரே...?


! செயற்கைக் கருத்தரிப்பை வியாபாரமாக்கி வரும் காலகட்டத்தில் வந்துள்ள அர்த்தமுள்ள அறிவுரை.

4. பால.சரவணன், சென்னை - 15

? ஹெல்மெட் அணியாமல் சென்று விபத்தைச் சந்திக்க நேர்ந்தால் காப்பீட்டுத் தொகை ரத்தாகும் என அரசு எச்சரித்தால், அபாரதம் செலுத்திவிட்டுப் புலம்பும் வாகன ஓட்டிகள் அரசை நொந்துகொள்ள மாட்டார்கள் அல்லவா?

! இது சரியான அணுகுமுறை அல்ல. விபத்து காரணமாக தலையைத் தவிர


தராசு



★ தலைவராகும் தகுதி!



★ விதைக்கும் வன்முறை



உடலின் வேறு உறுப்புகளும் பாதிக்கப்படலாம் அல்லவா? ஒன்று, ஹெல்மெட் அணிவதைக் கட்டாயமாக்க வேண்டும் அல்லது அவரவர் விருப்பத்துக்கு விட்டுவிட வேண்டும். கட்டாயமாக்கி, பிறகு கட்டுப்பாட்டைத் தளர்த்துவது பல விதங்களில் அபத்தம்.

5. ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

? தி.மு.க.வுக்கு நெருக்கடி கொடுப்பது எப்படி என்று ஆலோசிக்கும் பொருட்டு, காங்கிரஸார் ரகசியக் கூட்டம் போட்டதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததே?

! அந்த ரகசியக் கூட்டத்தின் விளைவாக, இந்த விஷயத்தில் இறுதி முடிவு எடுக்கும் உரிமையை அன்னை சோனியாவிடமே அவர்கள் ஒப்படைத்து விட்டார்கள் என்பது பத்திரிகைகளில் வராத செய்தி!

6. இரா.சக்கரபாணி, மதுரை - 7 ❐

? அருணாசலப் பிரதேசத்தின் மீது சீனா சொந்தம் கொண்டாடுகிறது. இந் நிலையில், சீனாவுடனான கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா ஈடுபடுவது தேவைதானா?

! ரொம்பத் தப்பு! நமது ராணுவத் திறனை எடைபோட, சீனர்கள் கையாளும் தந்திரமாகவும் இது இருக்கக்கூடும். திபெத்தும் இந்தியாவும் சீனாவை நம்பி மோசம் போன சரித்திர நிகழ்வுகளை மறப்பது முட்டாள்தனம்.

7. ஏ.மோகனசுவாமி, கொளத்தூர்

? சோம்நாத் சாட்டர்ஜி, குடியரசுத் தலைவர் ஆவதற்குத் தகுதியானவர்தானே?

! ஆகா, ரொம்பத் தகுதியானவர்தான். அதனாலேயே தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்!

8. ஜெகா, கும்பகோணம் ★

? ஜப்பான், சீனா போன்று தொழிலை மையமாகக்கொண்ட கல்விமுறையை நாமும் கடைபிடித்தால் என்ன...?

! ரொம்ப காலமாகச் சொல்லிச் சொல்லி இப்பத்தான் கொஞ்சம் நம்ம ஆட்சியாளர்கள் அந்தத் திசையில் செயல்பட ஆரம்பிச்சிருக்காங்க. இதற்குள் ஜப்பானும் சீனாவும் இவ்விஷயத்தில் மேலும் முன்னேறிட்டாங்க. எப்படின்னா, தொழில்

முறை கல்வியோடு ஆராய்ச்சியை இணைச்சு, தொழில் முன்னேற்றக் கல்விக்குப் போயிட்டாங்க! ஹூஊஊ ஊம்!

9. மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? ஊழலில் ஈடுபடும் எம்.பி.க்களைத் திரும்ப அழைக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பாராளு மன்ற சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி கூறியுள்ளது பற்றி...?

! ஒரு சின்ன திருத்தம். 'ஊழலில் ஈடுபடும்' என்கிற வார்த்தைகளை நீக்கி விட்டால் சாட்டர்ஜி கருத்து ஓ.கே.; தேசம் உருப்படும். கல்கி வாசகர்கள் மட்டுமல்லாது, இதுபற்றி சோம்நாத் சாட்டர்ஜியும் யோசித்துச் செயலுருவம் தர முயற்சி எடுக்க வேண்டும்.



★ இறுதி உரிமை!

வாசக தராசுகளே!

இந்த வார பதில்களுள் 'பளிச்' மிக்கதாக நீங்கள் தேர்வு செய்வது எது...? அதன் எண்ணை மட்டும் குறிப்பிட்டு அஞ்சல் அட்டையில் அனுப்புங்கள். கடைசி தேதி: 16.6.07. முகவரிப் பகுதியில் 'வாசக தராசு 17.6.07' என்று குறிப்பிட வேண்டும். மிக அதிக வாசகர்களின் ஆதரவைப் பெறும் கேள்வியைத் தேர்வு செய்வோருள் யாரேனும் ஒருவருக்கு, குலுக்கலில் ரூ.100/- பரிசு!

27.5.07 கல்கி இதழில் வெளியான போட்டியில் மெஜாரிட்டி பெற்ற கேள்வி எண்: 7

பரிசு பெறும் வாசகர்:
எஸ்.சங்கரன், மதுரை

10. ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? "நான் மட்டும் என் கட்சித் தொண்டர்களை ஏவிவிட்டால், தமிழகமே பற்றி எரியும்" என்று ஒரு விழாவில் விஜயகாந்த் பேசியுள்ளதைப் பற்றி...?

! அவர் எதை மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறார் என்பது புரிகிறது! என்றாலும், நாகரிக அரசியல் நடத்த வந்ததாகக் கூறிய விஜயகாந்த் இப்படியெல்லாம் பேசக்கூடாது! வன்முறையை வளர்ப்பது மட்டுமல்ல; விதைப்பதே தவறு.

11. எச்.ஆன்டனி தமிழரசன்,
மும்பை - 17

? அ.தி.மு.க.வுக்கு வசந்த காலம் காத்திருக்கிறது என்று ஒரு திருமண விழாவில் ஜெ.பேசியிருக்கிறாரே..?

! முன்புபோலவே வசந்தசேனை காலமாக மாறிவிடாமல், அனைவருக்கும் மனோகரமான காலமாக இருக்குமா என்பதுதான் கவலை! ●

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:	★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
இரா.சக்கரபாணி, மதுரை - 625 007	ஜெகா, கும்பகோணம்

நினைத்து நினைத்துப் பார்த்தேன்



எத்தனை நாளைக்குத்தான் இந்தியப் பொண்ணுங்களையே காதலிக்க, குண்டுச் சட்டியில குதிரை ஓட்டிக்கிட்டு இருக்கறது? ஒரு வித்தியாசத்துக்கு பாகிஸ்தான் பொண்ணைக் காதலிச்சா எப்படி இருக்கும்? இதைத்தான் செய்யுறாரு நம்ம ஹீரோ விக்ராந்த்.


விஜய்யோட தம்பிங்கிறதாலயோ என்னவோ, அடிக்கடி அண்ணனோட மேனரிஸங்களைக் கையில எடுத்துக்கிறாரு விக்ராந்த். பாத்தப்பு... உங்களுக்குன்னு தனித் திறமை இருக்குல்ல... ஆனா, காதல்னு வரும்போது பட்டாம்பூச்சியைப் பறக்கவிட்டும், மோதல்னு வரும்போது முரட்டுக் காளையாவும் ஆகாசம் தொடுறாரு. சென்டிமென்ட் காட்சிகள்ல மட்டும் சோகம் வர மாட்டேன் வரமாட்டேன்னு அடம் புடிக்குது.

அடேங்கப்பா... ஆஷிதா! அச்சு அசல் பாகிஸ்தான் பொண்ணாவே மினிர்றாங்க. காதல் காட்சிகள்ல பர்ஸனல் டச்சஸ் அதிகம். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒருதலை ராகம் சங்கர். பிள்ளைப் பாசத்துக்காக மனுஷன் உருகுறாரு. ரோஜாவுக்குப் பாசம் பொங்குற அம்மா கேரக்டர். ஆனா, சீரியல் வாசத்திலிருந்து விடுபடாம, அளவுக்கு அதிகமா கிளிசரினை ஊத்தி நம்மளை கண்ணீர்ல குளிக்க வைக்கிறாங்க.

கல்லூரி ஃப்ளாஷ்பேக்ல கலகலப்பூட்டிக் குதூகலப்படுத்துறாரு கருணாஸ். போரடிக்காம ஜோரா மனசுக்குள்ள மத்தளமிடுது ஜோஸ்வா ஸ்ரீதரின் இசை. படத்துக்கு இன்னொரு பலம் மது அம்பாட்டின் கேமரா. காட்சிக்குக் காட்சி கச்சிதமான படப்பிடிப்பு!

பல இடங்கள்ல வித்தியாசத்தைப் புகுத்தி, நாடுவிட்டு நாடு தாண்டி காதல் கனெக்ஷன் கொடுத்ததெல்லாம் ஓகே தான். ஆனா இன்னும் அழுத்தமா காதலோட உணர்வுகளைப் பதிய வெச்சிருந்தா படம் மனசுலயும் அழுந்தப் பதிஞ்சிருக்கும். இருந்தாலும் டைரக்டர் மணிகண்டன் கிட்டருந்து நிறைய சரக்கை நிச்சயம் எதிர்பார்க்கலாம் - நம்பிக்கை தர்றார்.

- லஜ்ஜாவதி


வரவேற்புகளுக்கென்றே
வடிவமைக்கப்பட்டவை
www.swarnalayajewellery.co.in
ஃபேஷன் / திருமண
வரவேற்பு நகைகள்
ரூ.2999 /-
முதல்
SWARNALAYA
Jewellery
Gold, Diamond, Ruby, Emerald and 1Gram Jewellery Collections
5, Venkatnarayana Road, T.Nagar, Chennai - 17. Ph : 4212 5353 / 5454

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

